Registered as a Newspaper

பெண்மணிகளுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் ஏற்ற இறக்குமதி செய்யப்பட்ட நவீன புடவை தினுசுகளுக்கும் றெடிமேட் ஆடைகளுக்கும் புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னாகம்.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 2-50

குறுகிய காலத்தில் மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்ற ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னாகம்.

மலை:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹு புரட்டாதி மீ 10 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஸபர் பிறை 02 (26-09-1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:38

# ஏனைய இயக்க போராளிகளுக்கு பிரபாகரன் நேசக்கரம்

## தமிழீழ இலட்சியப் பற்றுள்ள யாவரையும் அரவணைக்க தயார்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 26

"தமிழீழ மக்கள் இன்று மிகவும் ஆபத்தான வரலாற்று நெருக்கடியை எதிர்நோக்கி நிற்கிறார்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையில் —ஒரு தேசிய எழுச்சியாக —எமது போராட்டம் சாத்வீக வடிவில் ஒரு புரட்சிகரமான புதிய பரிமாணத்தைப் பெற்றுவருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் போராளிகளிடையே மோதல்கள் நிகழ்வது மக்கள் போராட்டத்திற்கு மாசு கற்பிப்பதாக முடியும். ஆகவே, ஏனைய அமைப்புக்களைச் சேர்ந்த போராளிகள் தமது விரோத மனப்பான்மையைத் துறந்து. பழிவாங்கும் நடவடிக்கைகளைக் கைவிட்டு, எமது விடுதலை இயக்கத்தோடு இணைந்து கொள்ள முன்வந்தால் அவர்களை அரவணைத்துக்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம்."

—இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஏனைய அமைப்புக்களைச் சேர்ந்த போராளிகளுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுத்தார்.

பத்திரிகைகள் மூலமாக விடுத்த இந்த வேண்டுகோளில் திரு. பிரபாகரன் கூறியிருப்பதாவது;

"அன்றும் சரி, இன்றும்சரி இயக்க முரண்பாடுகளுக்கும் மோதல்களுக்கும் எந்த சக்தி பின்னணியில் இயங்குகிறது என்பதை நான் பகிரங்கமாகவே அம்பலப்படுத்தியுள்ளேன். இந்திய அரச அங்கமாகிய இந்த சக்தியின் நாசகார நடவடிக்கைகள் பற்றி தமிழீழ மக்கள் இன்று நன்கு அறிவார்கள். தமிழீழ இலட்சியத்தில் உறுதிப்பாடும் இயக்கக் கட்டுப்பாடு

(10ஆம் பக்கம் பார்க்க)



நவராத்திரி நோன்பின் நான்காம் நாள் இன்று அலைமகள்-திருமகள்-இலக்குமியை விசேடமாகத் துதிக்கும் மூன்று நாட்களின் ஆரம்பதினமும் இன்றுதான் தமிழ் மண்ணிலும் தமிழர் இல்லங்களிலும் வளம் பெருகி, தொழில் சிறந்து, செல்வம் கொழிக்க அவள் தாள் பணிவோம். (உ)

# திலீபன் உயிர் எந்நேரமும் பிரியலாம்!

யாழ்ப்பாணம், செப் 26

கடந்த பதினொரு நாட்களாக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துவரும் விடுதலைப் புலிகள் இயக்க அரசியற் பிரிவுப் பொறுப்பாளரின் உடல்நிலை நேற்று மிகமிக ஆபத்தான கட்டத்தை அடைந்தது.

நேற்று நண்பகலுக்குச் சற்றுப் பின்னர் திலீபன் 'கோமா' நிலையை அடைந்தார். நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் அவரது உயிர் எந்த நேரமும் பிரிந்து விடலாம் என அஞ்சப்பட்டது.

நேற்று நண்பகலோடு மந்த நிலையிலான செவிப்புலனைத் தவிர ஏனைய உணர்ச்சிகள் யாவும் அடங்கி அற்றுப் போயிருந்தன.

இரத்த அழுத்தம் மிகவும் குறைந்திருந்தது. (அ-10)

## பிரபா - டிக்ஷிற் மீண்டும் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், செப். 26

இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஷிற், விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை இன்று நண்பகல் 11 மணிக்கு பலாலி முகாமில் சந்தித்துப் பேசுவார்.

திரு. டிக்ஷிற்றின் விருப்பத்தின் பேரில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## உண்ணாவிரதமிருக்க காத்திருக்கும் மூவர்

யாழ்ப்பாணம், செப். 29

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் இருக்கும் திலீபன் மரணிக்க நேர்ந்தால் அவரின் போராட்டத்தைத் தொடர மூன்று விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர்.

உண்ணாவிரதம் இருப்பதற்கு நூற்றுக்கும் அதிகமானோர் முன்வந்ததன் காரணமாக உண்ணாவிரதத்தை தொடருவது யார் என்பது துண்டுக் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

விடுதலைப் புலி உறுப்பினர்களான முரளி, செல்மன், பாஸ்கர் ஆகியோரே அடுத்த கட்ட உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர உள்ளவர்கள் ஆவார்கள்.

## திருமலையில் 8 பேர் கொலை

யாழ்ப்பாணம், செப் 26

திருகோணமலை-யாழ்ப்பாண வீதியில் (பன்குளம்ரோட்) 10ஆம்கட்டை என்னும் இடத்தில் விறகு ஏற்றுவதற்காக சென்றுகொண்டிருந்த எட்டுஅப்பாவித் தமிழர்கள் கோரமான முறையில் அண்மையில் வெட்டிக் கொல்லப்பட்டதாக போராளிகள் இயக்கம் ஒன்றுதெரிவித்தது.

தற்போது மேற்கொள்ளப் பட்டிருக்கும் சிங்கள குடியேற்றத் திட்டத்தில் உள்ள காடையர்களே வாள், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களை உபயோகித்தே இப்படுகொலையை புரிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஊரடங்கு மத்தியில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப் 26

திருகோணமலையில் விடுதலைப் புலிகள் பிரமுகர் கிருபாவின் சாகும்வரை உண்ணாவிரதப் போர் ஊரடங்கு உத்தரவுக்கு மத்தியிலும் தொடர்ந்து நடைபெறுகிறது.

வியாழன் இரவு 8மணி முதல் நேற்றுக்காலை 4 மணி வரை ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்த போதும் உண்ணாவிரதம் நடக்கும் திருமலை சிவன் கோயிலடியில் பலநூற்றுக் கணக்கான மக்கள் குழுமிநின்றனர். (உ)

### சுபநேரம்

26-09-1987
புரட்டாதி 10
சனிக்கிழமை
சுபநேரம்:-
3 02 முதல் 4.32வரை
ராகுகாலம்:-
09 02 முதல் 10 32வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சதுர்த்தி விரதம்

## தீவட்டி ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப். 26

உண்ணாவிரதமிருந்து வரும் திலீபனுக்கு ஆதரவாக கடந்த வியாழக்கிழமை இரவு தீவட்டி ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது

இரவு 8 மணிக்கு ஊரெழுவிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் நள்ளிரவு 12 மணியளவில் நல்லூரை வந்தடைந்தது.

இந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றினர். (உ-160)

## ஏழு இளைஞர்கள் உண்ணாவிரதத்தில்

குருநகர், செப் 26

நேற்றுக்காலை குருநகர் தண்ணீர் தாங்கி வீதி சந்தியில் ஆரம்பமான நீராகாரம் அருந்தாமல் நான்கு நாட்கள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் போராட்டத்தில் ஏழு இளைஞர்கள் குதித்துள்ளார்கள். [உ-51]

## இலங்கை, இந்திய அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறேன்

# உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள்!

## மீண்டும் டிக்ஷிற் கோரிக்கை; புலிகள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், செப் 26

இந்தியத் தூதர் திரு. டிக்ஷிற் நேற்று நண்பகல் 1 20 மணியளவில் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு அனுப்பிய தொலைத்தொடர்பு செய்தியில் (டெலெக்ஸ்) இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக விடுதலைப் புலிகள் தெரிவித்த யோசனைகளை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குத் தெரிவித்து பேச்சுக்களை நடத்தி வருவதாகவும், இது சம்பந்தமாக முடிவுகளை எடுக்க குறைந்தது ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் செல்லலாமென்றும், திரு. திலீபனின் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும் கேட்டுக்கொண்டார். ஆனால் புலிகள் இக் கோரிக்கையை ஏற்கவில்லை.

இந்தியத் தூதர் அனுப்பி வைத்த செய்தி வருமாறு:-

கடந்த புதன்கிழமை எமது சந்திப்பின் போது இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக நீங்கள் தெரிவித்த யோசனைகளை நான் இந்திய, ஸ்ரீலங்கா அரசுகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளேன்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்த யோசனைகளைப் பரிசீலனை செய்து வருகிறார்.

இன்று காலை இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட சில விசேஷ அறிவுறுத்தல்களை அடுத்து இலங்கை அரசாங்கத்துடன் நான் தொடர்ந்து பேச்சுக்களை நடத்துகிறேன்.

இதுபற்றி முடிவெடுக்க ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள் ஆகலாம்.

ஆகவே, ஒரு சமரசத்திற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கும் வகையில்,

(10ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர்கள் நடத்திய மாபெரும் ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப். 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கம் நேற்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியது.

நேற்றுக் காலை 11 மணி அளவில் யாழ் பல்கலைக் கழக முன்றலில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் கே கே எஸ். வீதியூடாகச் சென்று யாழ் கோட்டை முகாமைச் சென்றடைந்தது.

அங்கு பாடசாலைகளின் மாணவர் பிரதிநிதிகள் மகஜர் ஒன்றை இந்திய இராணுவ உயரதிகாரியிடம் கையளித்தனர்.

அதன் பின்பு பலாலி வீதியூடாகச் சென்று நல்லூரில் உள்ள திலீபனின் உண்ணாவிரத மேடையை ஊர்வலம் சென்றடைந்தது.

வலிகாமம் பகுதியில் இருந்து 13 பாடசாலைகளைச் சேர்ந்த 30 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊர்வலங்களுக்குள் இதுவே மிகப் பெரியது எனப் பலர் கருத்துத் தெரிவித்தனர். (உ-10)

## மட்டுநகரில் மதன் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப். 25

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் மதன் நேற்றுக்காலை சாகும் வரை உண்ணாவிரதப் போரை ஆரம்பித்தார். (உ)

## குடாநாடு முழுவதும் ஊர்வலங்கள்

யாழ்ப்பாணம், செப் 26

திலீபனின் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆதரித்துகுடாநாடு எங்கும் பல ஊர்வலங்கள் நடைபெற்றன.

யாழ் செவிப்புலனற்றோர் நட்புறவுக்சாக நேற்று கைதடியிலிருந்து நல்லூர் வரை ஊர்வலம் ஒன்றை நடத்தியது.

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதி புனித சின்னப்பர் ஆலயத்திலிருந்து நான்குபேர் அங்கப்பிரதிஷ்டையாக நல்லூர் வரை சென்றனர். அவர்களுடன் பெரும் எண்ணிக்கையானோர் ஊர்வலமாகச் சென்றனர்.

நேற்றுக்காலை வட்டுக்கோட்டையிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட பாட்டு வண்டில்களுடன் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

இதைவிட மேலும்பல ஊர்வலங்கள் நேற்றுக் குடாநாட்டில் நடைபெற்றன. (உ)

## பிஜித்தீவில் மீண்டும் புரட்சி

சுவா, செப். 26

பிஜித்தீவில் மீண்டும் இராணுவப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது.

முன்னர் புரட்சியை வெற்றிகரமாக நடத்திய சித்திவெனி ரபுக்காவே இந்தப் புரட்சியை மீண் நடத்தினர். (உ)



திருமலையில் உண்ணாவிரதமிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரமுகர் கிருபா. (உ)

## வன்னியில்...

யாழ்ப்பாணம், செப் 26

முல்லைத்தீவில் சாகும் வரை உண்ணாவிரதப் போரை விடுதலைப்புலிகள் பிரமுகர் திருச்செல்வம் ஆரம்பித்து நேற்று மாலை 6 மணியுடன் 56 மணித்தியாலங்கள் கடந்திருக்கின்றது.

இவருக்கு ஆதரவாக நேற்று முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் 50 மாணவிகள் அடையாள உண்ணாவிரதமிருந்தனர்.

உண்ணா விரதத்திற்கு ஆதரவாக வட்டுவாகல் அம்மன் கோவிலடியிலிருந்து நேற்று ஆரம்பமான ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கானோர் பங்கு பற்றினர். (உ)

## திரும்பியது

கொழும்பு, செப். 26

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான இரண்டொரு தினங்களில் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து நங்கூரமிட்டு நின்ற இந்திய கடற்படை யுத்தக் கப்பல்கள் கடந்த வியாழக்கிழமை அங்கிருந்து இந்தியாநோக்கிச்சென்றது.

ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன கேட்டுக்கொண்டதன்பேரிலேயே இந்தியக் கப்பல்திரும்பிச் சென்றது. (அ)

புதுமையும் எழிலும் [illegible] பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★★
★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★★★

**தேவை**

சகல துறைகளிலும் தொடர்பு கொள்ளக் கூடிய பேனு நண்பர்கள் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:- க. நந்தகுமாரன், ''மங்களகிரி'' ஏழாலை மேற்கு, சுன்னுகம்.
(1708)

**சோதிடம்**

உங்கள் பிறந்த திகதியிலும் பெயர் அமைப்பிலும் பொதிந்துள்ள துர் அதிஷ்டங்களைக் கண்டறிந்து பிறந்த திகதிக்கேற்ப பெயரை அதிஷ்டகரமாக அமைத்து மகிழ்ச்சிகரமாக வாழ வழிகாட்டும் உன்னதமான நூல் ''வாழ்க்கைக்கு நலன் தரும் நியூமலரராலஜி'' தனிப்பிரதி 6/50. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.
(1529)

**சேவை**

Broilers இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை. நல்லூர்.


# நடுத்தர ஏவுகணை ஒழிப்பு ஒப்பந்தம்

# ஆயுதக் குறைப்பின் ஆரம்பமே!

## றேகன் - கோர்ப்பசேவ் சந்திப்பு
## நீண்டதூர ஏவுகணை ஒழிக்க வழிகோலுமா?

உலக உலா — என்.பி.சீலன்

நடுத்தர ஏவுகணை ஒழிப்பதற்கு அமெரிக்காவும் சோவியத் யூனியனும் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளன.

வாஷிங்டனில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்ஸ் - சோவியத் வெளிவிவகார அமைச்சர் ஷெவாநாட்சி ஆகியோருக்கு இடையில் கடந்த வாரம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இது தொடர்பான இணக்கம் காணப்பட்டது.

இரு வெளிவிவகார அமைச்சர்களும் அடுத்த மாதம் மீண்டும் சந்தித்துப் பேச உள்ளனர்.

அப்பொழுது நடுத்தர ஏவுகணைகளை ஒழிப்பது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும். சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்ப்பச்சேவும் அமெரிக்க அதிபர் ரெனுல்ட் றேகனும் வருட இறுதியில் வாஷிங்டனில் சந்தித்து உச்சி மாநாடு நடத்துவதற்கான திகதியும் நிச்சயிக்கப்படும்.

வாஷிங்டன் உச்சி மாநாட்டில் வைத்து சரித்திரப்பிரசித்தி பெற்ற இந்த ஒப்பந்தத்தில் அதிபர் றேகனும் அதிபர் கோர்ப்பச்சேவும் கையெழுத்திடுவார்கள்.

இது தொடர்பான அறிவிப்பு கடந்த வாரம் வெளிவந்த போது உலக நாடுகளில் பெரும் வரவேற்புத் தெரிவிக்கப்பட்டது.

சோவியத் தலைமைப் பீடத்தில் உருவாகிவரும் தாராளக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாக இது கருதப்படுகிறது.

### நட்சத்திரப் போர்த்திட்டம்

சுமார் 300 மைல் தொடக்கம் 3000 மைல் வரை செல்லக் கூடிய நடுத்தர ஏவுகணைகளை ஒழிப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் நீண்டகாலம் முட்டுக்கட்டை நிலைமை இருந்து வந்தது.

அமெரிக்க அதிபர் றேகனின் நட்சத்திரப் போர்த்திட்டமே முட்டுக்கட்டைக்குக் காரணம் ஆகும்.

நடுத்தர ஏவுகணைகளை ஒழிப்பதற்கு சோவியத் யூனியன் இணங்கிய பின்பும் நட்சத்திரப்போர்த் திட்டத்தைத் துரிதப்படுத்தப்போவதாக அதிபர் றேகன் அறிவித்துள்ளார்.

இதற்கான மேலதிக நிதிக்கும் செனட்டினதும் காங்கிரஸினதும் அனுமதியை றேகன் கோரியுள்ளார். இவ்விரு சபைகளிலும் பெரும்பான்மைப் பலம் இழந்து ''நொண்டி வாத்து'' நிலையில் உள்ள றேகனுக்கு இது மற்ருெரு சவால் என்று கருதப்படுகிறது.

நடுத்தர ஏவுகணைகளை ஒழிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் போது சோவியத் யூனியன் தன்னிடம் உள்ள 1500 ஏவுகணைகளை இழக்கும். எஸ். எஸ் 20, எஸ். எஸ் 4, எஸ். எஸ் 12, எஸ். எஸ் 23 ரகங்களை இவை சேர்ந்தவை.

அமெரிக்கா 348 ஏவுகணைகளை இழக்கும். பேர்ஷிங் — 2, குரூஸ் ஏவுகணைகள் இவற்றில் அடங்கும்.

அதே சமயம் மேற்கு ஜேர்மனியில் உள்ள 72 ஏவுகணைகளை ஒழிப்பதற்கான புறம்பான ஒப்பந்தம் ஒன்றையும் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் செய்து கொள்ளும். இவை பேர்ஷிங் ஐ. ஏ ரகத்தைச் சேர்ந்தவை.

இந்த நடுத்தர ஏவுகணைகள் பெரும்பாலும் ஐரோப்பாவிலேயே பொருத்தப்பட்டிருப்பதால் அவை ஒழிக்கப்படும் பட்சத்தில் ஐரோப்பாவின் பாதுகாப்புத் தொடர்பாக நேட்டோவுக்கு இருந்து வரும் பெரும் பொறுப்பு நீங்குகிறது.

### நீண்ட தூர ஏவுகணை

நடுத்தர ஏவுகணைகளை ஒழிப்பது தொடர்பான ஒப்பந்தம் சாத்தியமாகி இருப்பதால் அடுத்தது நீண்ட தூர ஏவுகணைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை அமெரிக்காவும் சோவியத் யூனியனும் ஆரம்பிக்கும் வாய்ப்பு இருந்து வருவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

இந்த நீண்ட தூர ஏவுகணைகள் 3000 மைல்களுக்கு அப்பால் சென்று தாக்கக் கூடியவை.

1989 ஆம் ஆண்டு அதிபர் றேகன் பதவி விலகுவதற்கு முன்னர் இது தொடர்பாக சோவியத் அதிபருடன் ஏதாவது இணக்கம் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

இந்த நீண்ட தூர ஏவுகணைகளில் அரைவாசியை இரு நாடுகளும் ஒழித்துவிடுவதற்கான வாய்ப்புகள் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் நடுத்தர ஏவுகணை ஒழிப்புத் தொடர்பாகச் செய்து கொள்ளப்பட உள்ள ஒப்பந்தத்தை ஆயுதக் குறைப்பின் ஆரம்ப நடவடிக்கை என்றே கூற முடியும்.

ஏனெனில் வல்லரசுகளிடம் உள்ள நாசகார ஆயுதங்களில் இவை மூன்று சதவீதமே.

# தமிழர் கூட்டணி - முஸ்லிம் கவுன்சில்
# இருசாரார் கண்டுள்ள உடன்பாடு

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் சரித்திர ரீதியாகக் குடியிருக்கும் பகுதிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி முஸ்லிம்களை தனித்துவம் நிறைந்த சமூகமாக அங்கீகரிக்கிறது.

நாட்டிலும், குறிப்பாக வடக்கு- கிழக்கு மாகாணங்களிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர்.

இவற்றை அங்கீகரிக்கும் வகையில் தமிழர் விடுதலைக்கூட்டணி பின்வரும் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கின்றது.

1. காத்தான்குடி, ஏறுவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, கிண்ணியா, மூதூர், தம்பலகாமம் (முள்ளிப்பொத்தானை), எருக்கலம்பிட்டி, முசலி ஆகிய பகுதிகளில் முஸ்லிம் பெரும்பான்மையான உதவி அரசு அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படும்.

சரித்திர ரீதியாக வாழ்ந்து வருதல், காணி, வளங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கெடுத்து வேறு பகுதிகளையும் இப்பிரிவுகளுடன் சேர்ப்பது பற்றிப் பின்னர் பரிசீலனை செய்யப்படும்.

2. கல்முனையில் ஒரு மாநகரசபையும் சம்மாந்துறை, காத்தான்குடி, கிண்ணியா ஆகிய பட்டினங்களில் நகரசபைகளும் நிறுவப்படும்.

இந்த உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான எல்லைகள் பின்னர் பேசித் தீர்க்கப்படும்.

3. முஸ்லிம்களுக்குப் போதியபிரதிநிதித்துவம் உறுதிப்படுத்துமுகமாக பிரதேசத் தொகுதி வாரியாக மாகாணசபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று கூட்டணி ஆலோசனை தெரிவித்தது.

மாகாணசபைக்கு உறுப்பினர்கள் எத்தனை பேர் என்று நிர்ணயஞ் செய்வது, ஆயிரம் சதுர கிலோ மீட்டருக்கும் 30 ஆயிரம் மக்கள் தொகைக்கும் ஒருவர் என்ற ரீதியில் இருக்க வேண்டும் என்று முஸ்லிம் தரப்பினர் ஆலோசனை தெரிவித்தனர்.

நிர்வாக மாவட்டத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் 40 ஆயிரம் பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் யோசனை.

இதன் அடிப்படையில் வடக்கு-கிழக்குமாகாண சபையில் 71 உறுப்பினர்கள் இருப்பர். வடக்கு மாகாணத்தில் இருந்து 36 பேரும் கிழக்கு மாகாணத்தில் இருந்து 35 பேரும் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களின் விகிதாசாரம் 32. 27. வடக்கு மாகாணத்தில் 4. 73 சதவீதம் முஸ்லிம்கள்.

கிழக்கில் இருந்து ஆகக் குறைந்தது பத்து முஸ்லிம் உறுப்பினர்களும் வடக்கில் இருந்து ஆகக் குறைந்தது 5 முஸ்லிம் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படக் கூடியதை உறுதிப்படுத்தும் சட்டவிதிகள் இயற்றப்பட வேண்டுமென்றுகூட்டணி சம்மதம் தெரிவித்தது.

4. மாநில சபையின் பிரதி முதலமைச்சர் முஸ்லிம் ஆக இருக்க வேண்டும். முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டால் இது செல்லாது.

மாநில அமைச்சரவையில் 25 சதவீதத்துக்குக் குறைவில்லாமல் முஸ்லிம்கள் அமைச்சர்களாக நியமிக்கச் சட்டவிதிகள் இயற்றப்படும். முஸ்லிம் அமைச்சர்களில் ஒருவர் முஸ்லிம் விவகார அமைச்சராக இருப்பார்.

5. கிழக்கு மாகாணத் [illegible] ஏற்படுத்தப்படும் காணிக்குடியேற்றத் திட்டங்களில் 35 சத வீதத்துக்குக் குறைவில்லாது காணிகள் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்படும். மன்னர் மாவட்டத்தில் 30சத வீதமான இடங்களும் வடமாகாணத்தில் 10 சதவீதமான இடங்களும் காணிப்பகிர்வின் போது முஸ்லிம்களுக்கு வழங்கப்படும்.

6. தொழில் வாய்ப்புக்கள் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் நிலவும் இனவிகிதாசாரத்துக்குக் குறைவில்லாமல் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படும்.

7. பல்கலைக்கழகம் வரை தனியான கல்வி வாய்ப்பு, வசதிகள் முஸ்லிம்களுக்கு வழங்கப்படும்.

பல்கலைக்கழக அனுமதியின் போது கல்வித் துறையில் பின்னடைந்த பகுதிகள், பாடசாலைகள், குழுக்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.

8. வடக்கு - கிழக்கு மாகாணசபையில் உள்ள முஸ்லிம் உறுப்பினர்களில் பெரும்பான்மையோரின் வாக்குகளைப் பெருமல் முஸ்லிம்களின் நலன்கள், உரிமைகளைப் பாதிக்கும் சட்டங்கள் இயற்றப்படமாட்டாது.

9. முஸ்லிம் கவுன்ஸில் சமர்ப்பித்த மகஜரில் காணப்படும் ஏனைய அம்சங்கள் குறித்து நாம் எம் அபிப்பிராயங்களைத் தெரிவித்தோம். அவ் விஷயங்கள் பின்னர் இரு தரப்பினராலும் பரிசீலிக்கப்படும்.

ஒப்பம்: எம். சிவசிதம்பரம் அ. அமிர்தலிங்கம்.

**வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாநிலசபை நிர்வாகம் சம்பந்தமாக இலங்கை முஸ்லிம் கவுன்ஸிலுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி எழுத்துமூலம் வழங்கிய உறுதிமொழி அடங்கிய தஸ்தாவேஜுவில் உள்ள முழு விவரங்கள் இங்கு வெளியிடப்படுகின்றன.**

**கூட்டணியின் சார்பில் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.**

**கூட்டணித்தலைவர்களுடனுன பேச்சுவார்த்தைகளில் இலங்கை முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் டாக்டர் பதியுதீன் மஹ்முத் தலைமையிலான குழு கலந்துகொண்டது.**


றெருசோ சிப்ஸ்
★ TERRAZZO CHIPS ★

IMPORTED

- கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
- பித்தளை அலுமினியத் தகடுகள்
- வெள்ளைச் சிமெந்து
- தரை வெட்டும் மெசின் FLOOR CUTTING MACHINE
- TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையா சகல பொருட்களும் கிடைக்கும்.

ரூ. 6/75 க்கு மேல்

★ றம்சன்ஸ் ★
443, பழைய சோனக தெரு,
கொழும்பு - 12
தொலைபேசி:- 34411 - 31511

பிரத்தியேக வகுப்புகள்
A/L 1988/89
இரசாயனம்
ஆசிரியர் :- திரு. மக்ஸி
இடம்:- No. 10 3rd Lane. A. V. Road, Colombogam. A/L 88, மாணவர்களின் நலன்கருதி, கிழமையில் 6 வகுப்புக்கள் நடத்தப்படும்
பகுதிகள் :-
(1) சேதன இரசாயனம்
(2) பௌதிக இரசாயனம்

A L 1989
இரசாயனம்
விரைவில் ஆரம்பம்
ஆசிரியர் :- திரு. மக்ஸி
இடம்:- No. 10 3rd Lane. A. V. Road, COLOMBOGAM.


# கலைவாணித் தாய்

**- சோ. பத்மநாதன் -**

உலகெங்கணும் உள்ள கவிஞர்கள், கலைஞர்கள் - எல்லோரும் - கொண்டாடும் தெய்வம் சரஸ்வதி. 'சமயந்தொறும் நின்ற தையல்' என ஒரு கவிஞர் அவளைக் குறிப்பிடுகிறுர். ஆம், நாடு, மொழி, சமயம் என்ற எல்லைகளைக் கடந்து நிலவுவது கலைமகள் வழிபாடு. பண்டைய கிரேக்கர்கள் கவிதை, இசை, சிற்பம் முதலிய கவின்கலைகளுக்குத் தெய்வமாக Muse ஐ வழிபட்டனர். கிரேக்க காவியங்களின் செல்வாக்குக்குட்பட்ட ஆங்கிலக் கவிஞர்களும் Muse ஐத் தாயாகப் போற்றினர். Music (இசை) என்ற சொல்லே Muse இல் இருந்து வந்திருக்க வேண்டும்.

மழையைக் கண்டு மகிழ்ந்து ஆடுவது மயில். புலவர்கள் பொழிகின்ற கவிமழையைக் கண்டு கலைமகளாகிய கலாபமயில் களித்தாடுகிருள் என்கிறுர் குமரகுருபரர்.

''.................... புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே''

வெண்பளிங்கு போன்ற மேனி; வாயிதழ்கள் பவளம்; அவள் கைகள் தாமரை; இடையோ உடுக்கை — இக்கோலத்தை அல்லும் பகலும் துதித்தால், கல்லும் கவி சொல்லும் என்பார் கம்பர்;

'படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்-துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தாற்
கல்லும்சொல் லாதோ கவி!'

நாமகளுடைய நிறம் மட்டுந்தான் வெண்மை என்பதில்லை. அவள் உடை வெள்ளை; அணிகலன்கள் வெள்ளை; அவள் வீற்றிருக்கும் தாமரையும் வெள்ளையே!

'வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்'
—காளமேகம்.

வெண்மை தூய்மையின், சமாதானத்தின், தெய்வத் தன்மையின் அறிகுறி.

கலைமகள் கையில் ஏடு தரித்திருக்கிருள். ஏன்? கல்விக்குக் கரையில்லை. நான் கல்வித் தெய்வமாக இருந்தாலும் படித்துக் கொண்டேயிருக்கிறேன் என்று நமக்குக் குறிப்பால் உணர்த்துகிருள் போலும்.

'கற்றதுகைம் மண்ணளவு கல்லாத(து)
உலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிருள்.........'

இன்னொரு கையில் செபமாலை. வீணை வாசிப்பவை மற்றைக்கைகள். 'சரஸ்வதி இன்னும் வீணையைக் கீழே வைக்கவில்லை!' என்று சங்கீத உலகில் பேசிக்கொள்வார்கள். இசைக்கலைஞர்களுக்குச் சாதகம் (பயிற்சி) மிக முக்கியம் என்பதை வலியுறுத்துவது இக்கூற்று.

கலைமடந்தைவெண்டாமரையில் மட்டுந்தான் வீற்றிருப்பவள் என்பதில்லை. வேதங்களிலும் ஐம்பூதங்களிலும், அடியாருடைய கண்ணிலும் கருத்திலும் நிறைந்திருப்பவளும் அவளே;

'விண்ணும் புவியும் புனலுங் கனலும்
வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!'
—குமரகுருபரர்

சரஸ்வதியின் நாயகன்பிரமன். அன்னம் அவனுடைய கொடி. அவன் நாவையும் நெஞ்சையும் வெள்ளைத்தாமரையாகவே கருதி மகிழ்ந்துறைகிருளாம் வாணி.

'அம்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவும்
அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்!' —குமரகுருபரர்

ஒளி பொருந்திய நெற்றி; மூங்கில் போன்ற தோள்; பசலை படர்ந்த மார்பு; நிலவு போன்ற மேனி! காதளவோடிய கண்கள் - இவற்றைக் கண்ட நான்முகனுக்கு சரஸ்வதியின் மீது மாளாத காதல் அவள் வீட்டு முற்றத்தில் காத்துக் கிடந்து காய்கிருன் என்று சுவைபடச் சொல்கிருர் கம்பர்:-

'வணங்குஞ் சிலைநுதலும் கழைத்தோளும்
வனமுலைமேற்
சுணங்கும் புதிய நிலவெழு மேனியுந்
தோட்டுடனே
பிணங்கும் கருந்தடங் கண்களும் நோக்கிப்
பிரமன் அன்பால்
உணங்குந் திருமுன்றிலாய்! மறை நான்கும்
உரைப்பவளே!'

சரஸ்வதியின் திருவடிச் சிறப்பைப் பற்றி கம்பர் பெருமான் அற்புதமான கவியொன்று செய்திருக்கிருர்; வாணியின் திருவடிகளே தாங்கள் முடிவில் அடைய வேண்டிய பெருகள் என்று வேதங்கள் சொல்லும். பிர[illegible] கேட்டாலோ, ''ஆ, அவை (திருவடிகள்) எ[illegible]கன்றே 'அமைந்த அபிஷேகம்!' என்பான். தேவர்களைக் கேட்டால் நாமகளின பாதங்கள் தம் மனத்துயருக்கு மருந்து என்பார்கள். என்னைக் கேட்டால்? தேவியின் பாதங்கள் நான் தலையிற் சூடும் மலர் என்று சொல்வேன்.

இனி, மகாகவி பாரதி காணும் சரஸ்வதியின் திருக்கோலத்தை நோக்கலாம். அவள் விழிகள் வேதங்கள், உரைகள் (பாஷ்யங்கள்) ஆகிய மையைக் கண்ணுக்குத் தீட்டியுள்ளாள் வாணி. அவள் நெற்றி குளிர் நிலவு. அவள் கூந்தல் சிந்தனை. அவள் செவி தருக்கம். அதில் அணிந்ததோடு துணிவு. அவள் மூக்கு அறிவு. அவள் வாய் சாஸ்திரம். இதழ்கள் கற்பனை. கொங்கை காவியம். கைகள் கலைகள். ஆக, நாமகள் ஞானசொரூபியாய் விளங்குகிருள்:

பாட்டும் கூத்துமாய்ப் பொழுதைப் போக்குவோருக்கு மட்டுந்தான் கலைமகள் தெய்வமென்றில்லை; மெய்வருந்தப் பாடுபடும் உழைப்பாளிகளுக்கும் அவளே கடவுள்:

''வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு
புலவன் நாவிலும், அறிவாளியின் நெஞ்சிலும் சரஸ்வதி நடனமிடுகிருள் என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை குறிப்பிடுவார்:

''நாடிப்புலங்கள் உழுவார் கரமும்
நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும்
செழுங்கருணை
ஓடிப்பெருகும் அறிவாளர் நெஞ்சும்
உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம்
அடைக்கலமே!

இவ்வளவு சிறப்புக்கும் உரிய சரஸ்வதியை நவராத்திரி காலத்தில்-குறிப்பாக நவராத்திரி

(9ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தையலர்க்குத் தையல் விளக்கங்கள்

தங்கள் பிள்ளைகளுக்கு உடைகளைத் தாமாகவே தைத்து அணிவதில் நங்கையருக்கு அலாதிப்பிரியம் உண்டல்லவா?

அதனுல் சஞ்சீவி நங்கைப்பகுதியில் குழந்தைகளின் உடைகளைத் தைப்பது சம்பந்தமான விளக்கங்களை இங்கு வெளியிடுகிறோம்.

இவற்றைப் பின்பற்றி உங்கள் குழந்தைகளுக்கு வண்ண வண்ண உடைகளை நீங்களே தைத்து அணிந்து அழகு பார்த்து மகிழுங்கள்.




இப்பகுதியில் தொடர்ந்து உடைகள் தைப்பது தொடர்பாக இலகுவான விரிவான குறிப்புகள் படவிளக்கத்துடன் வெளிவரும்'

1 மாதத்தில் இருந்து 1½ வயது வரையுள்ள குழந்தைக்கு தைக்கும் அளவுமுறை.

**முன்பக்கம்**


12 அங்குல நீளமும், 4 அங்குல அகலமும் உள்ள ஒரு நிள் சதுரம் வரும். அதற்கு A, B, C, D எனப் பெயரிடுக. Aயில் இருந்து Eவரை 1¼ அங்குலம் எடுக்கவும். E இல் இருந்து 2 அங்குலம் F என்று குறிப்பிடவும். Fஇல் இருந்து ¼ அங்குலம் பதிய G எனக் குறிப்பிடவும் E, Gஐ தொடுக்க வருவதே தோள் மூட்டு ஆகும்.

Aயில் இருந்து முக்கால் அங்குலம் பதிய வருவதை H என்று குறிப்பிடவும். E, Hஐ வளைவாக இணைக்கவருவது கழுத்தாகும். Eயில் இருந்து 3¼ அங்குலம் பதிய குறுக்காக ஒரு கோடு வரைந்து I, Jஎன குறிப்பிடுக. I யில் இருந்து 5¼ அங்குலம் எடுத்து அதை K எனக் குறிக்கவும். G, Kஐ வளைவாக இணைக்கவும். அதுவே கமக்கட்டாகும்.

Cயில் இருந்து 6 அங்குலம் எடுத்து L எனக் குறிப்பிட்டுK. Lஐஇணைத்தால் வருவது பக்கப் பொருத்து.

பின் L இல் இருந்து ½ அங்குலம் உயர M என்று குறிப்பிட்டு Cஐயும் Mஐயும் வளைவாக இணைக்கவும்.

இப்போது குழந்தைச் சட்டைக்கான 'புளொக்' உருவாகிவிட்டது எனவே இந்த புளொக்கை துணியில் வைத்து வெட்டிக் கொள்ளவும்.



**பின்பக்கம்**

முன்பக்கம் போலவே பின்பக்கமும். ஆனுல் Aயில் இருந்து H வரை ½ அங்குலம் பதித்து கழுத்தை வெட்டி எடுக்கவும்.

மேற்குறிப்பிட்ட புளொக்கைக் கொண்டு எப்படி ''யோக்'' எடுப்பது என்பதை அடுத்த சஞ்சீவியில் பார்ப்போம்.

- கலா -

# கைபிடித்த மனையாளுக்கு கைகொடுத்த ஒரு கணித மேதையின் படைப்புக்கள்

பால்ய விவாகம் நடந்தபோது ஜானகிக்கு வயது பத்து.

ஐயங்கார் வகுப்பைச் சேர்ந்த மணமகனுக்கு வயது இருபத்திரண்டு.

மூளைசாலி மாணவனுகப் படித்துக்கொண்டிருந்த கணவன் ஐந்து ஆண்டுகள் கழித்து உயர் கல்வி பெற லண்டன் பயணமானுன்.

அப்போது ஜானகிக்கு வயது பதினைந்து.

உயர்கல்வி பெறச் சென்ற கணவன் நோய் வாய்ப்பட்ட நிலையில் லண்டனில் இருந்து ஆறு ஆண்டுகள் கழித்து தாயகம் திரும்பினுன்.

அப்போது கணவனுக்கு வயது முப்பத்து மூன்று

ஜானகிக்கு வயது இருபத்தொன்று மட்டுமே.

தாயகம் திரும்பிய கணவனுக்கு நோய் கூடியது ஓராண்டு காலம் கழித்து கணவன் காலமானுர்.

இதென்ன, வயதும் கணக்குமாக கதை செல்கின்றதே என்று எண்ணுகிறீர்களா?

கணிதமேதைராமானுஜத்தின் குடும்ப வாழ்க்கை இப்படியாக, பூவாகவே உதிர்ந்துவிட்டது.

அந்த ஜானகி, இன்று ஜானகி அம்மாளாக எண்பத்தெட்டு வயதில் வாழ்ந்துகொண்டிருக்கின்றுர்.

1899 ஆம் ஆண்டிலே கும்பகோணத்தில் அவர் பிறந்தார்.

உயர்கல்வி பெற லண்டன்சென்ற ராமானுஜம் நோய் வாய்ப்பட்டுத் திரும்பியபோது கண் கலங்கிய மனைவியைக் கண்டார்.

''கலங்காதே! எனது படைப்புக்கள் உனது எதிர்காலத்தைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளும்'' —இப்படி அந்தக் கணிதமேதை மனைவிக்கு எந்தக் கணக்கின்படி சொன்னுரோ, தெரியவில்லை,

எண்பத்தெட்டு வயது நிரம்பிய ஜானகி அம்மாளுக்கு, கணவனின் நூற்றுண்டு வருடத்தில் தான் 'பென்ஷன்' கிடைக்கத் தொடங்கி இருக்கின்றது.

இந்துஜா நிறுவனம் தான் இப்பென்ஷனை வழங்குகின்றது.

இது சம்பந்தமான வைபவம் அண்மையில் சென்னையில் கணித விஞ்ஞான இன்ஸ்டிடியூட்டில் இடம்பெற்றது.

மாதம் ஆயிரம் ரூபா பென்ஷன், 20 ஆயிரம் ரூபா பொற்கிழி ஆகியன திருமதி ஜானகி அம்மாளுக்கு அன்று வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு கணித மேதை இராமானுஜத்தின் நூற்றுண்டு பிறந்த தினம் வருகின்றது.

22.12.1887இல் இராமனுஜம் பிறந்தார்.

''கணவனின் நூற்றுண்டு பிறந்த தின விழாவை எப்படிக் கொண்டாட விரும்புகின்றீர்கள்?'' —இப்படி ஜானகி அம்மாளிடம் இந்துஜா நிறுவனம் கேட்டது.

''கணவனின் பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவி, திறமையுள்ள வறுமையில் வாடும் மாணவர்கள் உயர்கல்விபெற உதவுங்கள்—''

இப்படி ஜானகி அம்மாள் தனது வளர்ப்பு மகன் டபிள்யு. நாராயணன் மூலம் அவ்வைபவத்தில் தெரிவித்தார்.

''கணவர் பெயரிலான அறக்கட்டளையின்கீழ் வழங்கப்படும் இந்த உதவி இன, மத, மொழி பேதமின்றி வழங்கப்பட வேண்டும். கணிதத்தில் பெரும் சாதனை ஏற்படுத்து பவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்குங்கள்''—

வறுமையில் உழன்று வாழ்ந்த கணித மேதையின் மனைவி ஜானகி அம்மாளின் வேண்டுகோளாக இது அமைந்துள்ளது. ★

- பிரசாந்தி -

# நங்கை

## நிவாரணம்

குழந்தைகளுக்குக் குளிர் காலத்தில் ஜலதோஷம், இருமல் போன்ற தொல்லைகளிலிருந்து நிவாரணம் பெற இதோ ஒரு வழி:

கடுகு எண்ணையைச் சிறிது சுட வைத்து, உரித்த பூண்டு, சோம்பு (நற்சீரகம்) இரண்டும் சேர்த்துக் குழந்தைகளின் உள்ளங்கால், முதுகு, மார்புப் பகுதிகளில் தேய்த்தால் குழந்தைகள் இரவில் நன்கு தூங்குவார்கள். சிறிது வளர்ந்த குழந்தைகளுக்கும் இம்மாதிரிச் செய்தால் தொல்லை இல்லை. ★

# அன்றாட வாழ்வில் அறிவியல்

''கோயிலிலே கர்ப்பூரம் எரிக்கிறுர்களே, எதற்காகத் தெரியுமா? கர்ப்பூரம் எரிந்து இறுதியில் ஒன்றுமில்லாது போகின்றது. அதுபோல 'நான்' என்பது இல்லாதுபோகவேண்டும். என்பதை உருவகமாக விளக்குவதற்காகவே அவ்வழக்கம் ஏற்பட்டுள்ளது'' என்று யாராவது கூறினுல் அதைக்கேட்டுக் கொண்டு குமாரசாமி எதிர்வாதத்தைக் கூறுதிருப்பாராயின் அது ஆச்சரியத்திற்குரியதே. ''அப்படியும் கூறலாம். ஆனுல் உண்மை என்னவென்ருல்...'' என்று இழுப்பார். அவரது பேச்சுக்குக் காதுகொடுக்கக் கூடியவர்கள் இருந்துவிட்டால், ''சனக்கூட்டம் அதிகமாகவுள்ள இடங்களிலே கர்ப்பூர ஆவி காற்றைச் சுத்தப்படுத்தஉதவும் என்பதை அறிந்தே அப்பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். கர்ப்பூரத்தை எரிக்காது அப்படியே ஆவியாகும்படிவிட்டால் இன்னும் நல்லது.'' என்று விஞ்ஞான விளக்கம்தர முற்படுவார்.

எதற்கும் விஞ்ஞான ரீதியிலேயே விளக்கம்தர முயல்பவர் குமாரசாமி. மூடப்பழக்கங்கள் என்று கருதப்படுவனவற்றிற்கு அறிவியல் முறையிலே அர்த்தம்கண்டுகொண்டால் அதனுல் பெரு நன்மை உண்டென நம்புபவர் அவர். உண்மையான மூடக்கொள்கைகளை உதறிவிடவும், அர்த்தமுள்ளவற்றைக் கண்மூடித்தனமாக வன்றி விளங்கிக்கொண்டு பின்பற்றவும் முன்வருவது நல்லது என நம்புபவர் குமாரசாமி. ''நேற்றைய மூடப்பழக்கங்கள் இன்றைய விஞ்ஞானம்'' என அடிக்கடி கூறிக்கொள்வார். எந்த விடயத்திலும் ஏதோவொரு உண்மை இருக்கும்: அதனைத்தேடிக் கண்டுகொள்வது தான் அறிவியல் என்பது அவர் வாதம். ஊரிலே அவருக்குப் பெயர் விஞ்ஞானம் குமாரசாமி. பலருக்கு அது ஏளனமாக ஏற்பட்ட பட்டமெனப் படலாம். ஆனுல் அவர் முறையாக விஞ்ஞானம் படித்தவர்தான்.

வீட்டிலே அவர் அன்றுட அலுவல்களைக் கவனிக்கும்முறை மற்றவர்கள் பார்த்துப் பின்பற்ற வேண்டிய விடயமாகும். அறையில் யன்னலுக்கு அருகே உள்ள ஆணியிலே 'ரோச்லைற்' தொங்கும். வீட்டிலே வெளிச்சம் இல்லாத நேரத்திலே வெளியில் இருந்துவரும் ஒளியில் 'ரோச்லைற்' தெரியக்கூடிய இடம் அது என்பதே அதற்குக் காரணம். 'கேற்'றைத் திறந்து எவராவது உள்ளே புகுந்தால், உள்ளேயிருந்து விருந்தைக்கு வந்து நிற்பார். அவர் இருந்த இடத்தில் இருந்தே நிழலாட்டத்தைக் கவனித்துக்கொள்வார். இவை எல்லாம் அவரின் தனிப்பட்ட பழக்கவழக்கங்கள்என்று கூறினுலும் அவற்றிலே ஏதோவொரு தனிக் கருத்து உள்ளடங்கி இருக்கும்.

மருமக்கள் ரவிக்கும் வேணிக்கும் மாமாவின் போக்கு மிகவும் பிடிக்கும். அவர்கள் எதையும் துருவித் துருவிக் கேட்கும் இயல்புடைய சிறுவர்கள். நச்சரிப்பு என்று ஒதுக்கிவிடாது எதையும் பொறுமையுடன் விளக்கக்கூடியவர் மாமா ஒருவர்தான். அப்பாவும், அம்மாவும் சிறுவர்களது கேள்விகளுக்கு விளக்கம் தர ஒரு சமயம் பொறுமை இல்லாதவர்களாகவும், சில சமயங்களில் உண்மையாகவே கேள்விக்கு விடைதெரியாதவர்களாகவும் இருப்பார்கள். றேடியோவிலே பாட்டுக்கேட்டுக் கொண்டே அரிகியிலே கல்லு நெல்லுப் பொறுக்குவாள் அம்மா. 'றேடியோ' எப்படிப் பாடுகின்றது? என்று கேட்டுவிட்டால்போதும் பள்ளிப் பாடத்தைப் படிக்காததற்காகரவிக்கு ஒரு பாட்டு! அடுப்பை எரியாமல் புகைய விடுவதற்காக வேணிக்கு ஒரு மங்களம். மங்களத்திலே மாமாவுக்கும் ஒரு பங்கு இருக்கும். பிள்ளைகளை அதிகப் பிரசங்கிகளாக்குவது என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாவார் மாமா. குமாரசாமியிடம் இதே கேள்வியைக் கேட்டிருந்தால் அழகியவிளக்கம் கிடைத்திருக்கும்.'' மாமாவுக்கும் வேலை இல்லை'' 'மருமக்களுக்கும்வேலையில்லை என்னும் சலிப்பு மட்டும் அம்மாவிடம் இருந்து வரும். அப்பா எதிலுமே தலையிடமாட்டார். ஓய்வில்லாத வேலை என்று தாமாகவே கூறிக்கொண்டு நழுவி விடுவார். ஆனுல் கந்தோரிலிருந்து வீடு வந்தால் ''கன்வஸ்'' கட்டிலே தஞ்சமெனக் கிடப்பார்.

வேணியும் ரவியும் சண்டை போட்டுக் கொள்வார்கள். குமாரசாமி வந்துவிட்டால் பேச்சுத் திசைமாறி எங்கெல்லாமோ சென்றுவிடும் இறுதியில் சண்டைக்குக்காரணம் என்ன என்பதைச் சிறிது யோசித்தே அறியவேண்டி வரும்.

இதோ விஞ்ஞானம் குமாரசாமியும் ரவியும் வேணியும்... ''கும்மாளமடிக்கப் போகிறுர்கள்'' என்று அம்மா முணுமுணுக்கிறுள்.

நாம் எதற்காக அப்படி நினைக்கவேண்டும்.

(வளரும்)

- ஆர்- பாலகிருஷ்ணன் -

## கன்னி நெஞ்சின் கண்ணீர்




வெண்காயம் நடுங்கூலிப் பெண்களோடு
வேற்றூர்க்குச் சென்றபுதுக் கூலிப் பெண்நான்!
மண்காயப் படவைத்த பாத்தி பொங்க
வாய்க்காலில் விளையாடி வந்த தண்ணீர்
விண்காயப் படஓங்கி வளர்ந்த காளை
விவசாயி கால்கலக்கிப் பாய்ச்சி நின்றுன்!
பெண்பேதை நானின்று வரையுங் காணுப்
பேரழகன்! எனக்கென்றே பிறந்திட்டானே?

நனைந்துதரை நன்றுகக் குளிரும் வண்ணம்
நகைசிந்துங் காலால்நீர் கலக்கி நின்றுன்
கனிந்துமனம் உருகி, அவன் அழகை எல்லாம்
கடைக்கண்ணுல் களித்தள்ளிப் பருகிக் கொண்டு
குனிந்தபடி வெண்காயம் நாட்டி நின்றேன்!
குடிப்பிறப்பில் அவனுயர்ந்த சாதி, நானே
நினைந்திடவும் முடியாத குலத்து மங்கை!
நெஞ்சில்இடி வீழும்இதை எண்ணும்போது!

ஏங்கிச்செத் தழுகின்ற என்றன் நெஞ்சே!
எட்டாத பழத்தின்மேல் ஆசை வேண்டாம்!
தாங்கிக்கொள் என்றுலுங் கேட்டிடாமல்
தவிக்கின்ற தென்செய்வேன்? என்றன் நெஞ்சை
வாங்கிக்கொண் டவ்விடத்தில் நெருப்பை வைத்த
வாலிபனே மனத்திலொரு சலனம் இன்றி
வீங்கித்தோள் பூரிக்க இந்தத் தோட்ட
வெளிக்கெல்லாம் ஒளியாக நின்றிட்டானே!

அவன் அழகோ என்னுயிரை இழுக்குங் காந்தம்
அவன்குரலோ என் நெஞ்சை இழுக்குங் காந்தம்
அவன் நிற்கும் நிலை, நடக்கும் பாணி, நெஞ்சை
அள்ளுகின்ற கண்ணிளெளி, அடங்கும் நெஞ்சத்
தவமுனிவன் போற்சால்பு மனிதர் யாரும்
சமம் என்னும் போக்கவன் கொள் காந்தம் கோடி!
எவனுலும் இம்மியுமே அசையா என்றன்
இதயத்தைப் பேயாட்ட வந்திட்டானே!

தாலிகட்டிச் சதிபதியாம் வாழ்வைத் தானே
சாதிப்பேய் தடைசெய்தல் கூடும்! எந்தக்
காலமும்நான் கன்னிகையாய் இருப்பேன்! இந்தக்
காளைஎழில் முருகனையே நினைந்து சாவேன்!
சிலமனத் திண்ணியரின் எண்ணம் யாவும்
சித்திக்கத் தவருதென் றுரைப்பர்! இந்த
ஞாலமெலாம் அதிசயிக்க என்றன் மன்னன்
நயந்தென்னைப் போற்றிடநான் காண்பேன் திண்ணம்.

— சா. வே, பஞ்சாட்சரம் —

# கொன்றை மரத்து நிழலில் கொண்டல் வண்ணன் ஆலயம்

எழில்மிகு கொன்றை மரத்துக்கோர் இலக்கியப் பரிமாணச் சான்றிதழ் தந்தவர் சின்னத்தம்பிப்புலவர். ஈழமணித்திருநாட்டில் பொன் பூச்சொரியும் என்று துலங்கும் பாடலையறியாதவரே இல்லை. சொல்லோவியராம் புலவர்களின் எழுத்தாணி தந்த அமரசிருஷ்டிகள் இப்படி எத்தனை எத்தனையோ ஆமாம், கொன்றையென்றதும் சிவனுடைய திருக்கோலமே முன்னிற்கும். முருகனைப் பாடும் போதும், அம்பிகையை வேண்டும் போதும், ஏன் மூத்த பிள்ளையின் கதை வரும்போதும், நீலமேகச் சியாமள வண்ணனைக் குறிப்பிடும் போதும், கொன்றையைச் சடாபாரத்திற் தாங்கிய சிவனேடு தொடர்புபடுத்தித்தான் திருமுறைகளும், திருமறைகளும், பேசுகின்றன.

சமயம் மாத்திரமன்று, பண்டைய சங்க இலக்கியங்களும், பின்னேவந்த கலம்பகங்களும் கூடக் கொன்றைமலரின் செவ்வியை அழகொழுகப் பாடுகின்றன கொன்றை மலர்கள் மஞ்சள் நிறமுடையன. இதன் பூக்கள் கைபுனைந்தியற்றுக் கவின் பெறுவனப்புடைய மாலைகளாகத் தொங்குகின்றன. இதனுலோ என்னவோ இவற்றைச் சரக்கொன்றையென்றும், (புலிநகக்கொன்றையெனவும்) அழைப்பர்.

கொன்றைப் பூக்களை உருண்டையான பொற்காசுகளுக்கு ஒப்புமை சொல்லிப் பாடுவர். பொன்னுலியன்ற கிண்கிணிபோல உருண்டையானதெனக் கொன்றை மலரைக் கூறியுள்ளனர்.

பொன்னுபரணம் போலவும், பொற்காசு மாலை போலவுமமைந்த கொன்றையின் பெருமை சங்கச் சான்றேர்களின் நாவில் இப்படித் தவழ்கிறது.

வங்கக்கடலிலே மாயன் [illegible] வந்துவந்து திருவுருக் காட்டினுன் மற்சமாய். பின் மகவுமானுன். நீர்வாணரின் கைப்படாத அவன் வல்லிபுரத்தில் வந்துதித்த இலவல்லியின் மடியிற் தவழ்ந்தான். பக்திப் பிரவாகத்துடன் குழந்தையையும் இலவல்லியையும் பல்லக்கிலே சுமந்து வல்லிபுர நகரைநோக்கி நடந்தார் [illegible] இருக்குறிப்பினுலோ [illegible] தீர ஓர் மரநிழலிலே பல்லக்கை இறக்கிவைத்து விட்டு தாகசாந்தி செய்தார்கள் அயலே இருந்த நீர்ச்சுனையொன்றில். பின்னர் எவராலும் அசைக்கமுடியாமற் போயிற்று பல்லக்கை. எம்பெருமான்கொன்றை நிழலிலே கோயில் கொண்டமையைக்கண்டு உடன்வந்தவர்களும்-அவ்வூரவர்களும் திகைத்து நின்றுர்கள்.

வல்லிபுரத்திலமைந்த [illegible] ஆழ்வேல ஓர் தொல் [illegible]

([illegible] பார்க்க)

- சிங்கையாழியான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாக்கின் கதை

நாக்கினுக்கென விதித்துப் படைக்கப்பட்ட இரண்டாவது பணியினைப்பற்றி - பேச்சுப்பற்றி இனிப்பார்ப்போம். உங்கள் எண்ணங்கள், கருத்துக்கள், உணர்ச்சிகள், விருப்பங்கள், வழிபாடு வணக்கங்கள், மகிழ்ச்சிகள், துன்பங்கள் ஆகியவற்றை எடுத்துக் கூறுவதற்குப் பயன் படுகின்ற ஒரு கருவியாக அது பயன்பட்டு வருகின்றது. உங்களுக்கு கோபம் வந்தால், வன்சொல்லால் பலமாகப் பேசுவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியடைந்தால், இன்சொல்லால் இதமாக மெல்லெனப் பேசுவீர்கள். உங்கள் நன்மைக்கும் பிறரது நன்மைக்குமாகவே நீங்கள் உங்கள் நாக்கினை எப்போதும் பயன்படுத்திவருதல்வேண்டும். நீங்கள் வன்சொல்லால் ஒருவரைப் பேசினால் அவரும் பலத்த குரலிலே வன்சொல்லாலேயே பேசுவார். கோபத்துடன் பேசும் சொற்களால் மென்மேலும் கோபச் சொற்களே பிறக்கும். ஆனால் உங்களுடன் கோபித்துக்கொண்டு ஒருவர் உங்களைப் பேசும்போது, அவருடன் மெதுவாக இன்சொற்களை பேசுவீர்களானால், அவருடைய கோபம் குறைந்துவிடும். அவரும், தான் வன்சொற்களால் பேசிவிட்டதற்காக வருத்தமடைவார். நீங்கள் பலமாகப் பேசுதலாகாது. தேவையான அளவுக்கு மேலாகப் பேசுதலாகாது. வேண்டப்படாத வேளைகளிலே பேசுதலாகாது. நீங்கள் தனித்த ஒருவருடனே அல்லது கூட்டமாயிருக்கும் நண்பர்கள் சிலருடனே பேசும்போது, அவர்களுக்குக் கேட்கத்தக்க அளவுக்கு மட்டும் உங்கள் குரலை உயர்த்திப் பேசுவதல்லாது, பலமாக உரத்துப் பேசுதலாகாது. வெறுப்பைத்தரும் கீழான சொற்கள் எப்பொழுதாவது உங்கள் வாயிலிருந்து பிறத்தலாகாது. பிறர் காதிலும் அப்படிப்பட்ட சொற்கள் விழுதலாகாது- உங்கள் நெஞ்சத்தினுள்ளே கடவுள் இருக்கின்றார் என்பதை நீங்கள் மறந்துவிடுதல் ஆகாது. எல்லோருடைய நெஞ்சத்திலும் கடவுள் எழுந்தருளியிருக்கிறார் என்பதையும் நாம் நினைவில் இருத்திக்கொள்ளுதல்வேண்டும். அக்கடவுளுக்கு எல்லாம் கேட்கும். எல்லாம் அவருக்குத் தெரியும், "எனது தலை, எனது கைகள், எனது கண்கள், எனது நெஞ்சம், எனது கருத்து" எனக் கூறுவதுண்டல்லவா? உடல், உள்ளம், மனை ஆகியவற்றையெல்லாம் உடைமையாக்கிக் கொண்டிருக்கும் இந்த "நான்" யார்? அதுதான் உங்களுக்குள்ளே இருக்கும் கடவுளின் அறிவுச்சுடர். அந்த அறிவுச் சுடர் எல்லோருக்கும் இருக்கின்றது. எனவே, நீங்கள் கொடுமையான—கோபமான—பண்பற்ற—கீழான சொற்களைப்பேசும்போது, உங்களுக்குள்ளே எழுந்தருளியிருக்கும் கடவுளைத் தாக்குகின்றீர்கள். பிறருடைய உள்ளங்களில் வீற்றிருக்கும் கடவுளையும் தாக்குகின்றீர்கள். நான் முன்னதாகக் கூறியதுபோல, நாக்கு ஒரு கருவி அதனால், நீங்கள் உங்களுக்கு மட்டுமல்லாமல், பிறருக்கும் தீங்கு விளைவிக்கலாம். எனவே நீங்கள் கவனமாக இருத்தல்வேண்டும். உங்கள் நாக்கினால் நீங்கள் இன்சொற்களைப் பேசுவீர்களானால், இறைவனது திருநாமங்களை உச்சரிப்பீர்களானால், இறைவனது புகழ்களைப் பாடுவீர்களானால், அவரது திருவடிகளை வணங்குவீர்களானால், உங்கள் நாக்கினை நன்கு பயன்படுத்துகின்றீர்கள் என்று கூறலாம்.

நாவினைப்பற்றி மேலும் சில உண்மைகளை உங்களுக்குக் கூறப்போகின்றேன். நாக்கினுடைய செயல்களை நீங்கள் கவனித்துக் கொள்வதனால் நீங்கள் எவ்வளவோ கற்றுக்கொள்ள முடியும். அது தனக்கென அமைந்துள்ள இடத்தினுள்ளே தங்கியிருப்பதன்றி வெளியே வருவது அரிது. அது அமைதியாக வெளியே வராமல் அடங்கிக் கிடக்கிறது. அதற்குத் தனது எல்லை தெரியும். அதற்குத் தான் சுற்றி உலாவித் திரிதல் வேண்டும் என்ற ஆசை கிடையாது. அதனைப் பார்த்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இதுதான். நீங்கள் உங்கள் வீட்டிலேயே சுறுசுறுப்புடன் பண்பாடுள்ளவர்களாக வாழுங்கள். உங்கள் பெற்றோருக்கும் உங்களுடன் பிறந்தோருக்கும் உதவி புரியுங்கள். குறிக்கோளோ காரணமோ இல்லாமல் தெருவிலேபோய் அங்கும் இங்கும் சுற்றித் திரியாதீர்கள். பிறருடைய வீடுகளுக்குள்ளே புகுந்து மற்றவர்களைத் தொந்தரவு செய்யாதீர்கள். நாக்கு எப்போதாவது பிறருடைய வாய்களுக்குள்ளே சென்று புகுவதில்லை. தனக்கென அமைந்த வாயினுள்ளேயே அடங்கி இருக்கின்றது. வீட்டை விட்டு வெளியே போய் வேலைவெட்டியின்றி எங்கேயாவது நின்றுகொண்டோ இருந்து கொண்டோ, வழியாற் போவோர் வருவோரைப் பார்த்துக்கொண்டிருப்பது தகுந்ததொரு செயல் அன்று. நீங்கள் வாழும் வாழ்க்கை முறை கண்டிப்பானதாய் இருப்பதனால், உங்கள் வீட்டிலும் பாடசாலையிலும் நீங்கள் புகழ் பெற்று விளங்குதல் வேண்டும்.

நாக்கு உங்களுக்குக் கற்பிக்க முயலும் இன்னொரு பாடத்தைப்பற்றி நீங்கள் அறிவீர்களா? உங்கள் நாக்கினை நன்கு கவனித்துப் பாருங்கள். நீங்கள் உரத்து வாசிக்கும்போதோ பிறருடன் உரையாடும்போதோ, அது ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்கு மிக வேகமாக அசைந்தும் முன்னும் பின்னும் தாவியும், இம்மூலையும் மறு மூலையும் முட்டியும் உங்கள் மூச்சு ஒலிகளாக வேறுபட்டு வருவதற்காக விரைவாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அல்லாமலும், நீங்கள் உங்கள் உணவினை உட்கொள்ளும்போது நாக்கு மிக விரைவாக அசைந்துகொண்டிருக்க வேண்டியுள்ளது.

இங்ஙனமாக அது அசைந்துகொண்டிருக்கும் போதெல்லாம், பற்களுக்கிடையிலே சிக்கிக்கொள்ளாமல் இருக்கவேண்டும் என்பதைக் கவனித்திருக்கிறீர்களா? நாக்கு உறைகின்ற அந்தச் சிறு வீட்டினுள்ளே, சுற்றிவர 32 பற்கள் வாள்முனைபோலக் கூரியனவாய்க் கிடக்கின்றன. அவை மிருதுவானதாய்த் தடித்துக் கிடக்கும் அந்நாக்கினை காயமுறச் செய்து குருதி பாயச் செய்தல் கூடும். அப்படியிருப்பினும், அதனைக் காயமுறச் செய்யவேண்டும் எனக் காத்திருக்கும் இரக்கமேயில்லாத 16 சோடி போர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் கரபந்தாட்டம்

யாழ்ப்பாணத்தில் மற்ற எந்த விளையாட்டிற்கும் இல்லாத மௌசும் பிரபல்யமும் பன்னெடுங்காலமாய் கரபந்தாட்டத்திற்கு இருந்து வருவது யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இவ்விளையாட்டை யாழ் மக்களின் தேசிய விளையாட்டு என்று கூடத் துணிந்து கூறலாம். 1986 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் யாழ் கரபந்தாட்ட சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, யாழ்ப்பாணத்தில் கிரமமாய் கரபந்தாட்டத்தை விளையாடிவரும் தரமான கழகங்கள் 286 இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

ஆனால் ஓர் துர்ப்பாக்கியம் என்னவென்றால், சர்வதேச விதிகட்கு அமைய உலகெங்கும் உள்ளோர் கரபந்தாட்டத்தை ஆடிவரும் அதே வேளையில், யாழ் வீரர்கள் மட்டும் கரபந்தாட்டத்தை இரண்டாகப் பிரித்து 'ஓவர் கேம்' 'செற்அப்கேம்' என்று விளையாடி வருகிறார்கள். 'ஓவர்கேம்' என்பது 1952 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் ஆடப்பெற்ற, மெருகூட்டப்படாத பழைய முறையிலான கரபந்தாட்டம் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம்.

இன்றைய கரபந்தாட்டத்தில் புதிய நுணுக்கங்கள் உபாயங்கள் முறைகள் என்பவற்றை மற்றவர்கள் கையாண்டு, 'ஜெற்' வேகத்தில் முன்னேறிக் கொண்டு செல்ல, நம்மவர்கள் அரை நூற்றாண்டிற்கு முந்திய முறையை, உடும்புப்பிடியாகப் பிடித்துக் கொண்டு ஒரு குறுகிய வட்டத்திற்குள் நத்தை

## விளையாட்டுத் துறை

வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

புதிய செற்அப்முறை ஆட்டத்தில் ஒரு கையால் குத்தப்படும் பந்து, ஒரு செக்கனுக்கு 91' அடிகள் வேகத்திலும் - ஒரு கையால் அடிக்கும் அடி ஒரு செக்கனுக்கு 145' அடிகள் வேகத்திலும் செல்லும் பொழுது, ஓவர்கேம் (அதாவது நம்மவர் ஆடும் ஆட்டம்) இருகைகளாலும் இறுக்கி அடிக்கும் அடி ஒரு செக்கனுக்கு 76' அடிகள் வேகத்தில் மாத்திரம் செல்கிறது என்று பல தடவைகள் செய்த ஆராய்ச்சிகளின் மூலம் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதில் இருந்தே நாம் ஆடும் 'ஓவர்கேம்' ஆட்டம் எங்கே நிற்கிறது என்பதனை ஓர் அளவு நிர்ணயிக்கலாம் அல்லவா? இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக, இலங்கையில் கூட, கிளிநொச்சிக்கு அப்பால் 'ஓவர்கேம்' விளையாடுபவர்களைக் காண்பது மிக மிக அரிது.

யாழ்ப்பாணத்தில் 'செற்அப்' முறை கரபந்தாட்டம் ஆடுபவர்கள் அறவே இல்லை என்று கூறிவிடமுடியாது - கஞ்சிக்குப் பருப்புப் போட்டதுபோல் அங்கொன்றும், இங்கொன்றுமாய் ஒருசில கழகங்கள் 'செற் முறையை' பின்பற்றி விளையாடுகின்றன.

உதைபந்தாட்டத்தில் 17 விதிகள், கிறிக்கற்றுக்கு 42 விதிகள், கொக்கிக்கு 19 விதிகள் என்று உலக ரீதியாக நிர்ணயித்து இருப்பது போல் கரபந்தாட்டத்திற்கும் 25 விதிகளை உலக கரபந்தாட்ட சம்மேளனம் அங்கீகரித்திருந்தாலும் - யாழ்ப்பாணத்தில் ஓவர்கேம் விளையாடுபவர்கள் எள்ளளவேனும் இவ்விதிகளைப்பற்றி கவலைப்படுவதாய்த் தெரியவில்லை.

இவர்களுக்கு என்று ஏதாவது பொதுவான விதிகள் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை- ஒவ்வொரு கழகமும் தங்கள் இஷ்டப்படி விதிகளை அமைத்துக் கொண்டு விளையாடுவதும் அல்லாது, தாம் உருவாக்கிய விதிகளுக்கு அமைய போட்டிகளைக்கூட நடத்துகிறார்கள்.

உதாரணமாக, சில இடங்களில் கீழ்கை பாவிக்கக் கூடாது-நெற்றிற்கு அடிக்கப்படும் பந்தை திரும்ப எடுத்துக் கொடுக்கவோ அல்லது விளையாடவோ இயலாது. நெற்றின் விளிம்பில் பட்டு வரும் பந்தை ஒரே முறையில் மறு பக்கத்திற்கு அனுப்ப வேண்டும். ஒரு கையால் கீழே வைத்து பந்தை அடிக்கக்கூடாது போன்ற, இன்னும் எத்தனையோ படியான விதிகளை உருவாக்கியவர்கள் யார் என்பதும் யாருக்கும் தெரியாத ஒரு புதிர்.

இந்த அவல நிலைக்குக் காரணம் என்ன? நம்மத்தியில் தகுதி பெற்ற கரபந்தாட்ட நடுவர்கள் இல்லாததும் ஒரு காரணம் என்று கூறலாம்.

கரபந்தாட்டம் அதிக பணச் செலவு இல்லாது எல்லாக்கால நிலையிலும் ஆண், பெண் இருபாலாரும் விளையாடக்கூடிய ஒரு விளையாட்டாக இருந்தும், யாழ்ப்பாணப் பாடசாலைகளில் இதனை இப்பொழுது எவரும் ஆடுவதாகத் தெரியவில்லை.

இவ்விளையாட்டில் ஈடுபடும்பொழுது, ஓடி - பாய்ந்து-துள்ளி-வளைந்து முன்னும் பின்னும் குனிந்து நிமிர்வதனால்,

**- டி. எ. எம். குணசிங்கம் -**

கரபந்தாட்டத்திற்கு சற்றும் ஒவ்வாத சட்டங்களை அமைத்து ஆடி வருகிறார்கள். இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால், நாடோடிப் பாடல்களுக்கு தாய் தந்தை யார் என்பது யாருக்கும் தெரியாததுபோல், இப் பலம், வேகம், உழைப் பாற்றல், விரைவூக்கம், நரம்புத் தசைகளைச் சார்ந்த திறன்களையும் விசேடமாய் உடலின் எல்லாப் பகுதிகளையும் ஒருமித்து ஒழுங்காக செயல்படும் வளர்ச்சிஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களைஎமக்குஅளிப்பதுமல்லாது, இரத்த சுற்றோட்டத்தை சீராக வைத்திருக்கவும், உளம், உடல் ஒன்றிணைந்த செயற்பாட்டிற்கும் உதவுகின்றது. அதேவேளையில், மற்றைய விளையாட்டுகளைப் போல, எதிர்கன்னையினால் தாக்கப்படவோ, ஒருவருடன் ஒருவர் மோதவோ, அவசியம் இல்லாததினால் இவ்வாட்டத்தை ஆடும் வீரர்கட்கு ஏற்படக்கூடிய அபாயங்கள் வெகு வெகு குறைவே.

எனவே விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள, ஈடுபாடு உள்ளவர்கள் முன்வந்து எதிர்காலத்திலாவது புதிய முறையிலானகரபந்தாட்டத்தை யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் அடைய ஆவன செய்ய வேண்டும். அதற்கு முன்னோடியாக நாம் ஆடிவரும் 'ஓவர் கேம்' ஆட்டத்தை ஒரு முறையான, அங்கீகரிக்கப்படக்கூடிய சட்டதிட்டங்கட்கு அமைய எல்லோரும் விளையாடச் செய்யவேண்டும். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக சகல பாடசாலைகளிலும் கரபந்தாட்டத்தை உரிய முறையில் பயிற்றுவித்து, போட்டிகளையும் நடத்த வேண்டும். அப்படி நாம் செய்வோமேயானால், நம் வீரர்கள் கரபந்தாட்டத்தில் உலக அரங்கில் சாதனைகள் படைக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பது திண்ணம். ★

# பெரிய சாப்பாடு

நான் அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர் அவர்களிடம் அந்தக் கேள்வியைக்கேட்க வேண்டும் என விரும்பினேன். அதற்கு அது தான் வாய்ப்பான நேரம் என்றும் தோன்றியது.

நான் சாப்பாட்டு மேசைமுன் அமர்ந்தவாறே சாப்பாட்டையும் நண்பனின் மனைவியையும் மாறிமாறிப் பார்த்தேன். கூடவே கொழும்புக்கடைச் சாப்பாடுகளோடு அந்த வீட்டுச் சாப்பாடுகளையும் எனக்குள் ஒப்பிட்டுநோக்கினேன். சும்மா சொல்லக்கூடாது, அங்கே எல்லாமே பெரிய சாப்பாடு தான்.

''என்ன சாப்பாட்டை வைத்துக் கொண்டு யோசித்துக்கொண்டிருக்கிறீர்கள்?'' அவளே அப்படிக் கேட்டதும் எனக்குக் கதையை ஆரம்பிக்க வாய்ப்பாகப்போய் விட்டது.

''உங்களுடைய சாப்பாடெல்லாம் பெரிய சாப்பாடாயிருக்கிறதே, அதுதான் யோசிக்கிறேன்.''

''அப்படியென்ன பிரமாதமாகச் செய்துவிட்டோம். இடியப்பம்— ஒரு சாம்பார் — ஒரு சம்பல், அவ்வளவு தானே?''

அவள் அப்படிச் சொன்னதும் நான் அதைத் திருத்துவது போலச் சொன்னேன்.

''நான் அப்படியெல்லாம் உங்கள் கணவரைக் கேலிசெய்வேனா? உங்களுடைய இடியப்பத்தைப் பற்றித்தான் சொன்னேன்.''

ஏன் இடியப்பத்துக்கு என்னவாம்?''

**- பொ. சண்முகநாதன் -**

'அதாவது பருமனைச் சொல்லுகிறேன்...' நான் தயங்கித் தயங்கிச்சொன்னேன்.

''உங்களுடைய நண்பரைப்பற்றிச் சொல்லுகிறீர்களா?''

''இடியப்பத்துக்கு ஒன்றுமில்லை. கொழும்பு சைவக்கடை இடியப்பம் என்றால் காற்றடியைப் போட்டதும் அவை பறக்கும் தட்டுக்களாக மாறி விடும். இங்கே என்னடாவென்றால் ஒரு இடியப்பத்தையே சாப்பிடமுடியாமலிருக்கிறது. அவ்வளவு பருமன்...''

''.....''

''இடியப்பம் மட்டுமல்ல நேற்றுக்காலை பிட்டுப் பரிமாறினீங்கள். பிட்டைத் தேங்காய்ப்பூ பிரித்துக் காட்டுவது வழக்கம். அதைக் கொண்டு எத்தனை பிட்டு என்று கணக்கெடுக்கலாம். உங்கள் பிட்டோ தேங்காய்ப் பூ பிரிக்காமல் பெற்றோல் பௌவுசர்போல ஒரேநீளமாக.'

இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பதைக்கேட்டு அவளின் முகத்தில் கோப உணர்வு ஏதாவது படர்கிறதா என்பதைப் பார்த்தேன். அவள் புன்னகை பூத்தவாறு எனது பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பதைக் கண்டதும் நான் தொடர்ந்தேன்.

''நேற்றிரவு இங்கு பாண்தானே சாப்பாடு.. பாண் துண்டுகளை அதற்கு முன்னரும் பார்த்திருக்கிறேன், சாப்பிட்டும் இருக்கிறேன். நீங்களோ

நகைச்சுவை

ஒரு பாணை மூன்றாக வெட்டி பாண் துண்டுகள் என்று வைத்திருந்தீர்கள்...''

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தவள் அமைதியாகச் சொன்னாள். 'எல்லாமே அவரின் மெடிக்கல் செக்-அப் பிற்குப் பின்னர் வந்த பழக்கம்தான்.''

'நான் சாப்பாட்டைப் பற்றிக் கேட்டால்...?'

'அதற்கு அதுதான் காரணம்' என்றவள் தொடர்ந்து சொன்னாள்.

'அவரைப் பரிசோதித்த டாக்டர் உணவில் மிகுந்த கட்டுப்பாடும் கவனமும் வேண்டும் என்று எச்சரிக்கை செய்ததுடன் அதற்கென ஒரு பட்டியலும் தந்தார். இடியப்பம் பாண் என்றால் மூன்று...பிட்டு இட்டலி என்றால்இரண்டு ஒரு முழு ஆம்பிள்ளை இரண்டும் மூன்றும் சாப்பிட்டு எப்படி உருப்பட முடியும் என்று நான் தான் அப்படி ஒரு மாற்றத்தைச் செய்தேன்.''

அவள் சிரிக்காமல் சொன்னதைக்கேட்டு நானும் வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டேன். ★

# கிராமிய தொண்டுப் படலம்

முருகபுரத்தின் குடும்பத் தகராறுகள் பல பட்டாளம் பாட்டாவினால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. பிறன் மனை நயக்கும் சிற்றாண்மை படைத்த ஆடவர் பலரைப் பக்குவமான முறையில் திருத்தி அவர் தம் இல்லத்தரசிகளின் கண்ணீரைத் துடைத்திருக்கிறார்.

பெருங்குடி மக்கள் பலரை, இந்தப் பெரிய உருவம் பேசித்திருத்தியிருக்கிறது.

கோளாறு கோவிந்தன் இறந்தபிறகு, முருகபுரத்தில் பிரச்சினைக்குரிய சண்டியனாக இருந்தவன் காய்கட்டிக் கந்தையன். அவனுக்கு ஊர் மக்கள் எல்லோரும் பயம். பின் கதவு வேலைகள் பலவற்றைப் பிழை விடாமல் செய்யக் கூடியவன். ''என்னோடு மிண்டினால் செய்வினை செய்வேன்'' என்று பகிரங்கமாக யாரையும் மிரட்டக் கூடியவன்.

கிராம வளர்ச்சிக் கழகம் அமைந்த பின்னர், ''கிராமத்தின் பிரச்சினைகளைக் கழகத் தலைவரிடம் தெரிவிக்கலாம். நியாயமான தீர்ப்பு வழங்கப்படும்'' என்று அறிவித்தல் பலகை ஒன்று எழுதி, ஆலமரத்தில் அடித் தொங்க விட்டார் பாட்டா.

பிரச்சினைகள் தலைவரிடம் வருமாயினும் அவற்றைத்தீர்ப்பதில் பாட்டா தான் முக்கிய பங்கு வகிப்பார் — வகிக்க வேண்டும்.

ஒரு நாள் மாலை வேல் குத்தி விநாயகம் ஆலமரத்தடிக்கு வந்தான். ''காய் கட்டிக் கந்தையன் செய்யும் அக்கிரமத்தைக் கேட்க ஆளில்லை'' என்றான்.

''எல்லாம் அவன் செயல். விஷயம் என்ன?'' என்று கேட்டார் பாட்டா.

''என்னுடைய அப்புவும் காய்கட்டியின் அப்புவும் கூடிப் பிறந்தவர். எங்களுக்கு ஒரு சொரிக்குச் சேரவேண்டிய சொரியல். களகாலம் காய் கட்டிதான் ஆண்டு வந்தவன். இப்போது...நாங்கள் வழக்காடி... பிள்ளைப் பங்கு கொடுக்கச் சொல்லி நீதிவான் தீர்த்தது... உலாந்தா வந்து



**- கோகிலா மகேந்திரன் -**

யல் காணி....'.

''அதுதான் - சிங்கப்பூர்க் கிழவன் செத்த பிறகு கள்ள உறுதி முடித்த காணி... தெரியும் தெரியும்'' என்று அவனை இடை வெட்டினார் பாட்டா.

விநாயகம் ''அது பழையகதை'' என்றான். 'பொழுது பட முன்னர் புதிய கதையைச் சொல்லு' என்று சிரித்தார் பாட்டா.

''[illegible]

காணி பிரித்தால் நாலு துண்டும் றேட்டுக் கரையாக வரும்படி பிரிப்பர்... இவன் அதற்கிடையில் ஒருவருக்கும் தெரியாமல்... றேட்டுக்கரையோடு கிணறும் வெட்டி வாய்க்காலும் கட்டிப் போட்டான். இப்போது... றேட்டுக்கரைக் காணி கிணற்றுடன் தனக்கு என்கிறான்...''.

''விளங்குது... விளங்குது...'' என்று தலையை [illegible] பாட்டா.

அளவு நாடா ஒன்று எடுத்துக் கொண்டு, தனது கௌரவப் படையுடன் காணிக்குச் சென்றார்.

நாலு காணித்துண்டுக்கும் 'றோட்டு' வரக்கூடியதாய் அளந்து காணியைக் குறுக்காகப் பிரித்துக் கட்டை அடித்தார்.

''மூத்த பிள்ளைக்குக் கிழக்குத் துண்டு. அதிலிருந்து வரிசையாக அடுத்தடுத்த பிள்ளைகளுக்கு... என்று தனது அடைச்சல் குரலில் கட்டளை போட்டார்.

அவர் சொன்ன ஒழுங்கின்படி காய்கட்டி வெட்டிய கிணறு வேல்குத்திக்குரிய துண்டில் வந்தது.

'அது பரவாயில்லை' என்றார் பாட்டா. வேல் குத்தியை அருகில் அழைத்தார்.

''உனக்கு ஒரு எச்சரிக்கை'' என்றார். மீசையை முறுக்கி விட்டார்.

அவன் பயந்து தலை குனிந்து நின்றான்.

''அவன் வெட்டின கிணறு. செலவழித்தது அவன். ஆகவே அவன் விரும்பிய போது கிணற்றைத் தூக்கிக் கொண்டு போக நீ தடை போடப் முடியாது. உன்னுடைய காணி என்று வாதாட முடியாது...''

சுட்டு விரலை முகத்திற்கு முன் நிறுத்தி உரத்துச் சொன்னார்.

'நான் காணியைத் தருமத்திற்கு எழுதப் போகிறேன்'' என்று குமைந்தான் காய்கட்டி.

''சிதம்பரத்துக்கா? கந்தவனத்துக்கா?'' என்று கேட்டபடி நடையைக்கட்டினார் பாட்டா. யானை நடைதான்!

பின்னால் ஓடி ஓடி நடந்து வந்த தலைவர் மணியத்துக்குச் சொன்னார், ''முன்பு பிரக்கிராசி பேரம்பலம் இருந்தவர். அவனுடைய மகனுக்குப் பெயர் சிதம்பரம். மகனுக்குப் பெயர் கந்தவனம். ஊரிலே காணிப் பிரச்சினை தீர்க்கப் போனால், ''காணியைச் சிதம்பரத்துக்கு எழுதுங்கோ... கந்தவனத்துக்கு விடுங்கோ. பிரச்சினை இல்லை'' என்று கூறி எழுதிக் கொண்டு வந்து விடுவார். எதிரிக்குப் போவதை விடக் கோயிலுக்குப் போவதில் இருபக்கமும் சந்தோஷப்படும்... பாவம்... படியாத சனம், ஏமாந்து போய் விடும்...''

சிறிது நேரம் ஏதோ சிந்தித்துக் கொண்டே மௌனமாய் நடந்தார். பின்னர் திடீரென்று சொன்னார், ',ஆனால் எல்லாம் முருகன் செயல், பார் தம்பி... சிதம்பரத்துக்குப் பிள்ளைகள் இல்லை. கந்தவனம் கலியாணம் செய்யவில்லை...''.

முருகபுரம் கோயிலுக்கு அண்மையில் வந்ததும், ',முருகா... இந்த மக்களின் காணி ஆசையைப் போக்க மாட்டாயா?'' என்று கையெடுத்துக் கும்பிட்டபடி வீட்டை நோக்கி வேகமாய் நடந்தார் பட்டாளம் பாட்டா. ★

(வளரும்)

**நடைச் சித்திரம் 6**

## வாசகர் தராசு


அனைத்துப் பகுதிகளிலும் என்னை மிகவும் கவர்ந்த பகுதி கருத்துக் கலசமாகும். அவை ஆணித்தரமாகவும், பக்கம் சாராதும், நிதானமாகவும் எடுத்துரைக்கப்படுகின்றன.

வீட்டிலிருந்தபடியே உலகத்தை உலவி வர ஆங்காங்கே நிலவி வரும் நிகழ்ச்சிகளைக் குலவி வர உலக உலா உதவுகிறது.

மங்கையருக்கும், தம்பியருக்கும் தோழர்களுக்கும் சொற்சிலம்பம் கலக்கம் தவிர்க்கிறது. நகைச்சுவை உட்பட பல்சுவை தரும் இப்பகுதியில் இன்னும் பல சுவையான நிகழ்ச்சிகளும் சேர்க்கப்பட வேண்டும்.

ப. ஆனந்தமகேஸ்வரன்
மானிப்பாய், இந்துக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேற்கில்தோன்றும் உதயம்

- அநுராசன் மகன் -

## அத்தியாயம் 8

ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி; அன்றுதான் தீபனின் பிறந்தநாள். இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறானோ அல்லது வீரமரணப் பட்டியலில் இடம் பிடித்துக்கொண்டானோ……… கடைத்தெருவுக்குப் போகின்றபோது, மதிற்சுவர்களிலுள்ள சுவரொட்டிகளைப் பார்ப்பாள் பார்வதி. கோயிலுக்குச் செல்ல கிளம்பினாள். ஜெகன் இன்னும் எழும்பவில்லை. பார்வதியின் மனம் குடைந்துகொண்டிருந்தது.

உச்சிவெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. ஒழுங்கையில் பரப்பிக் கிடந்த சல்லிக்கற்கள் வெறுங்காலைப் பதம் பார்த்தன. நடக்கவே முடியாமலிருந்தது. ஆனால் மனமோ; கானல் நீரைத் தேடி ஓடும் குதிரையைப் போல வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. இவ்வளவு காலமும் அவர்களுடன் வாழ்ந்த வித்தியா; இப்போது மட்டும் ஏன் பிரிய வேண்டும்? அவன் இடமாற்றலாகி வந்ததுதான் காரணமென்றால் அவன் வந்தபோதே சென்றிருக்கலாமே ……!

புறப்பட்டபோதே, ஜெகன் அவளைத் தடுக்க முனைந்ததையும், அவன் அவளை அலட்சியம் செய்து விட்டுச் சென்றதும் மனத்திரையில் மின்னி மறைந்தது. ஜெகன் தான் ஏதோ தவறுதலாக நடந்திருக்கிறான். வறுமைச் சூழலிலும் கட்டுப்பாடு, ஒழுக்கம் தவறாது வளர்த்த அவள் பிள்ளைகளா…… நெறிதவறி முறைகெட்டு நடந்திருக்கிறார்கள். பிள்ளைகளை நினைத்துப் பெருமையில் பூரித்திருந்த மனம், சிறுமையைக் கண்டு சினந்தது. 'என்னடா நடந்தது? அந்த ஆவேசம் அவன் கன்னத்தைப் பதம் பார்த்தது. பின் அவளே கலங்கினாள். தாயுள்ளம் உண்மையில் விசித்திரமானதுதான். தண்டனையை வழங்கிவிட்டு, தானே கதறத் துடிக்கும் ஜெகன் அமைதியாகவே நின்றுகொண்டிருந்தான். தன்னலமற்றவொரு தியாகத்திற்காகத் தன்னை அர்ப்பணிக்கின்றபோது, கூடவே துணிவும் தைரியமும் பிறந்து விடுகின்றது. அதன் எதிர் விளைவுகளையும் அவன் எதிர்பார்த்திருந்தவன் போலும்.

'அம்மா! அன்றைக்கு மாஸ்டரும் இதைப் பற்றித்தான் கேட்டவர்…, படிப்பறிவுள்ளவர்; அறுபது வருடகால வாழ்க்கை அனுபவங்களினால் பக்குவப்பட்டவர்; அவரா இந்த முடிவினைக் கூற வேண்டும்? அதனைத்தான் பார்வதியினால் நம்ப முடியவில்லை.

படலையைத் திறக்க முடியாமல் தள்ளி வீழ்த்துபவள் போலத் தட்டினாள். 'ஏன்… என்ன பார்வதி நடந்தது? படலையைத் திறந்து, அவளை அழைத்துக்கொண்டு சென்றார்.

'மாஸ்டர்! என்னுடைய மகனைக் கெடுத்துப் போட்டியள்' அவருக்கு எல்லாமே புரிந்தது. 'பார்வதி! உலகத்திற்கேற்ப எங்களுடைய உள்ளமும் உயர வேண்டும். உன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற வித்தியாவின் எதிர்காலத்தைச் சிந்திச்சுப் பார். இனி அவளை ஆர் மறுமணம் செய்வினம்? அவள் இப்பிடியே எவ்வளவு காலத்துக்கு வைச்சிருக்கப் போறாய்?

கேள்விக்கணைகள், மண்டையோட்டின் எல்லாப் பகுதிகளையும் துளைத்தன. வாழ்விழந்துள்ள வித்தியாவும், வாழத்தடிக்கின்ற ஜெகனும் ஒன்றாக இணையக் கூடாதா …?— அவர் கேட்ட அதே கேள்வி, விம்மலாக அவளுள்ளத்தில் எழுந்து தணிந்தது.

'ஊர் உலகத்தைப் பற்றிக் கவலைப்படாதை! கொஞ்சநாளைக்குக் கதைக்கும், பிறகு எங்களோடு சேர்ந்து ஒத்துப் பாடும்…'

திருப்பி நடந்தபோது மனம் தெட்டத் தெளிவாகவிருந்தது. [ஆரம்பத்தில் அஞ்சியது; ஆத்திரப்பட்டது; குமுறியது; எதன் அர்த்தமுமே அவளுக்குப் புரியவில்லை! மனம் உண்மையிலேயே விசித்திரமான தொன்றுதான்! தேவையில்லாமல் சிந்திக்கும்; அனாவசியமாகப் பயமுறுத்தும்; அவசரப்பட்டுக் குமுறும். மனிதன் தனக்குத்தானே வளர்த்துக் கொண்ட எதிரிகள் அச்சமும் சோபமுந்தான்! பார்வதி அமைதியானாள்.

இருநாட்களாக அவனுடன் ஒன்றுமே பேசவில்லை. மௌனமாக இருந்தாள் பார்வதி.

'பிளாஸ்கில டீ ஊத்தியிருக்கிறன். எடுத்துக் குடி. கோயிலுக்குப் போயிட்டு வாறன். இண்டைக்குத் தீபன்ரை பிறந்தநாள்'- தாயாரை நிமிர்ந்து பார்த்தான் ஜெகன். அவளுடைய கண்கள் கலங்கியிருந்தன. தீபனை நினைத்துக் கலங்கினாளா? நடந்த சம்பவத்தையெண்ணிக் கலங்கினாளா? உண்மை அன்பு பேதமையானதா…?

உச்சி வெயிலின் வெம்மை தணிந்து, அந்திசாயும் குளிர்த் தென்றல் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தது. கோயில் பூசை ஆரம்பித்திருந்தது. அர்ச்சனைத் தட்டத்துடன் மூலஸ்தானத்தை நோக்கி நடந்தாள். 'பளார்… சிமெந்துத் தரையில் வெண்கலத் தட்டம், தவறி விழுந்தது. மனதின் உள்ளுணர்வில் தொங்கிக்கொண்டிருந்த நம்பிக்கை நட்சத்திரமும் தரையில் விழுந்து சாம்பலாகியது. 'ஆண்டவா! என்னுடைய மகனுக்கு என்ன நடந்தது?என்ரை மகனுக்கு என்ன நடந்தது?' மூலஸ்தானத்துப் படிக்கட்டில் மண்டையை முட்டி மோதிக்கொண்டு கதறினாள். மனதில் ஏதோவொரு சுமை அழுத்திக்கொண்டிருக்கின்றது. இனி யாரை நம்பி அமைதி கொள்வது? ஆண்டவனையா? ஆண்டவனே இன்று உணர்த்திவிட்டபின். எதை நம்பி வாழ்வது? என்னுடைய பிள்ளைகளுக்கா இந்தக்கதி நேர வேண்டும்? இந்தக் கொடுமைகளைக் காணவா உயிரோடு இருக்கின்றேன். கோயிலிலிருந்து திரும்பும் வழியில் வித்தியாவைக் கண்டாள்.

## அத்தியாயம் 9

அதிகாலையிலேயே குண்டு வெடிப்புகளும், துப்பாக்கிச் சூடுகளும் கேட்டுக்கொண்டேயிருந்தன. மக்கள் பீதியுடன் மூடை முடிச்சுக்களை எடுத்துக்கொண்டு தயாரானார்கள். ஊரே பரபரப்படைந்திருந்தது. ஒழுங்கையால் சென்றவர்கள் பார்வதிக்கு அந்தப் புதினத்தைக் கூறினார்கள். 'ஆமியும் பெடியன்களும் நேரடியாக மோதுகிறான்களாம்' பார்வதியின் மனதில் மகன் தீபனது நினைவுதான் வந்தது.

'ஆரோ ஒரு பெடியனுடைய பிரேதம் றோட்டில கிடக்குதாம். ஆர் பெற்ற பிள்ளையோ…… பிரேதம் அடையாளம் தெரியாம சின்னாபின்னமாய்க் கிடக்காம். தீபனும் அதில வந்தவனாம்'

—பார்வதிக்கு அப்படித்தான் கேட்டது. கோயிலில் தவறி விழுந்த அர்ச்சனைத் தட்டைப் போல, அவளுடைய நம்பிக்கைகள் கனவுகள் எல்லாமே ஒரு கணம் நொறுங்கிச் சிதறியது. மனதில் ஏதோ காட்சிகள் எல்லாந் திரையிட்டன. அதனை எப்படி அவள் தாங்கிக் கொள்ளப் போகின்றாள்? உணர்வேயில்லாத மரக்கட்டையாகக் கூடாதா?

மரமாகியே போனாள். அவள் துயரப்பட்டதும் அந்த ஒரு கணம்தான்; அதன்பின், இனித் துன்பமோ, துயரமோ இல்லாத அந்த உயர்நிலையை அடைந்து விட்டாள். இனி அவளுக்கு இன்பத்தையோ, துன்பத்தையோ பகுத்து அறியக் கூடிய அறிவு கிடையாது. சிரிப்பாள்; ஆடுவாள்; பாடுவாள்;யாராவது இளம் பெடியனைக் கண்டால் கதறிப்புலம்ப ஆரம்பிப்பாள். 'ஐயோ! என்ரை பெடியனைக் கொண்டு போறாங்கள், என்ரை பெடியனைக் கொண்டு போறாங்கள்'— பெரும்பாலும் அவளிடமிருந்து அந்தக்கூச்சலைத் தான் கேட்கக் கூடியதாகவிருக்கும்.

இருமாதங்களும் கழிந்தது. பார்வதி மனோநோயாளர் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருப்பதைக் கேள்வியுற்றதும், வித்தியாவின் மனம் புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்தது. டெலிபோனை எடுத்தாள்.

'அவள் கற்பனை செய்து கொண்டிருப்பதைப் போன்றதொரு சம்பவம் நிகழவில்லையென்பதை அவளுடைய உள்ளுணர்வு உணர்ந்துகொண்டால், ஒருவேளை குணமாகலாம். இல்லாவிட்டால்…'

—டாக்டரின் கைவிரிப்பின் அர்த்தம் புரிந்தது. இனிப் பார்வதி நிரந்தர நோயாளிதான்!

'ஓகே… தாங்யூ டாக்டர்…' றிசிவரை வைத்தாள். மனதில் ஏதோவொன்று பயமுறுத்தியது. அந்தச் சூழ்நிலைகளும் சந்தர்ப்பங்களும் அவளை அரித்து, நெறியற்ற மிருகவாழ்வுக்கு இட்டுச்செல்லுமா? மனதில் அலைமோதி அரிக்கின்ற அந்த உணர்வு; அதுதான் சலனமா?

'இதில…என்ன புள்ள தவறிருக்கு? உலகத்தில நடக்காததா இதுகளெல்லாம்…' இப்போது பார்வதியும் அந்த அணியில் சேர்ந்து கொண்டாள். அவளைச் சந்தித்தபோதும், பார்வதி அதனையே கேட்டாள். அவள் உள்ளம் கலங்கியது. 'மாமி! நீங்களுமா என்னைச் சித்திரவதை செய்கிறீர்கள்? நீங்களா இந்த முடிவை ஏற்றுக் கொண்டது?— ஒப்பாரி வைத்து அழ வேண்டும் போலிருந்தது. 'புள்ள! நீ திரும்பவும் என்னுடைய வீட்டுக்கு வர வேண்டும்…' - பார்வதி போய்விட்டாள். மீண்டும் அவள் மணப்பெண்ணாக மறுபிறவியெடுத்து, அவளுடைய இன்னுமொரு மருமகளாக…… கண்களை மூடிக்கொண்டால் மட்டும் என்ன? மனக்கண் திரையிடாமலா இருக்கும்? முடியாது! இனி எந்தவொரு உறவுமே எனக்கு வேண்டாம். இனி ஒருவருடைய துணையுமே எனக்கு வேண்டாம்.

வங்கிக்கட்டடத்தின் மேல்மாடியிலிருந்தவாறு தெருவைப் பார்க்கின்றாள். வீதியில் அலங்கோலமான ஆடையுடன் வழமையாகக் காணும் அதே பைத்தியக்காரி… வருவோர்போவோரைத் தொல்லை கொடுத்தபடி, இவளைப்போலத்தான்… பார்வதியும்! நெஞ்சில் ஏதோவொன்று கொழுவிக்கொண்டு இழுத்தது, அவளை மகளாகப் பாவித்து, அன்பைபொழிந்த பார்வதி; நோயுற்றிருந்தவேளை உடனிருந்து, துயருற்றவேளை துணைநின்று வாழ்வின் வசந்தத்தை இழந்து, விரக்தியின் விளிம்பில் நின்றபோது நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவள்; நிரந்தர நோயாளியாகி… அவளிக்காக என்ன செய்யப்போகின்றாள்? என்ன முடிவினை எடுக்கப்போகின்றாள்? ''மாமி! எங்க இருந்தாலும் என்னுடையச் கடமையை செய்வன்''—என்ன அர்த்தத்தோடு கூறினாள். மொழியால் அலங்கரித்து வாய்ப்பந்தலிடுவதுதான் உண்மை அன்பா? இல்லை அது உள்ளத்து உணர்வைப் பக்குவப்படுத்தி தியாகத்தீயில் குளிக்க வைப்பது. மாபெரும் மனோபலம் படைத்த மனிதர்களிடம்தான் இந்த உண்மை அன்பு மலரமுடியும்! உணர்வுகளுக்கு பலவீனப்படுவது பெண்மையா? தியாகத்தீயில் தன்னை அர்ப்பணிக்கின்ற பெருமனமும் அதற்குண்டு. ஆனால்… ஜெகன் ஏற்றுக்கொள்வானா?

அன்று மாலை பார்வதியைப் பார்க்கச் சென்றிருந்தாள். வார்ட்டின் வெளிவாசலில் ஜெகன் அமர்ந்திருந்தான். பல நாட்கள் ஒய்வு உறக்கமற்று இருந்ததால், கண்கள் சிவப்பேறி முகம் வாடிப் பொலிவிழந்திருந்தது. குளிப்பு, முழுக்கின்றி காற்றில் குழம்பியிருக்கும் கேசம்; அவனுடைய கோலம் அவளைக் கிறங்கவைத்தது. 'ஜெகன்…' கண்ணயர்ந்தவன் விழித்துக்கொண்டான் …'வா…வாங்கோ அண்ணி…' அவளை அழைத்துக்கொண்டு சென்றான்.

''ஐயோ…ஐயோ மகனைக்கொல்லாதைங்கோ. என்ட மகனைக்கொல்லாதையுங்கோ…' கூச்சல் முந்திக்கொண்டு வரவேற்றது. பெற்றமனம் பித்து; பேதமையானது என்பார்களே அது இப்பிடித்தானோ? பத்து மாதம் சுமந்து, பின் வளர்ப்பதற்காக இன்னல்களைச் சுமந்து அப்பழுக்கற்ற அந்தப் பாச நினைவுகளின் தாக்கத்தால் இன்று தீராத நோயையும் சுமந்து, உயிருள்ளவரை அந்தத் தாய்மை துடித்துக்கொண்டேயிருக்கப் போகின்றது.

'அம்மா! ஆர்வந்திருக்கினம் என்று பாருங்கோ…' 'மாமி! நான் வித்தியா வந்திருக்கிறன்…'

இருவரையும் புரிந்து கொள்ளக்கூடிய மனோநிலை பார்வதிக்கு இல்லை. அவர்களுடைய வாழ்வுக்காக ஓயாமல் தன்னை வருத்திக்கொண்டவள். அவர்களுடைய வாழ்வைப்பற்றியே, தினம் கனவுகளை கற்பனைகளை வளர்த்தவள்; சிதைந்த அந்தக் கனவுகளில் நனவில் சித்த சுவாதீனமற்றிருக்கிறாள். வாழ்க்கையில் நல்லவர்களைத்தான் இறைவன் துன்புறுத்துகிறான். இதன் மூலம் அவர்களுடைய மனோபலத்தை வளர்க்கின்றானா?

பார்வதியின் கரங்களை ஆதரவாகப் பற்ற முயன்ற வித்தியாவின் கரங்களை உதறியெறிந்தான்.

'மாமி! உன்னோடு இனி எனக்கென்ன உறவு என்கிறீர்களா? இந்த நிலையில் உங்களையெல்லாம் கைவிட்டுச் சென்றவளை கைகழுவி விட்டீர்களா? இனி உறவென்று யாருமே கிடைக்காத உலகுக்கு என்னைத் தள்ளிவிடப் போகின்றீர்களா…?'

—அவளுடைய உள்ளம் கதறியது. 'ஜெகன்! உங்களோடு கதைக்க வேணும்.'

வார்ட்டுக்கு வெளியே மனநோயாளிகள் நிம்மதியாக பொழுதுபோக்கும் அந்த மண்டபத்தை நோக்கி நடந்தனர்.

''ஜெகன்! அன்றைக்கு அவசரத்தில் உங்களுடைய மனசை புண்படுத்திப்போட்டன்''

நிமிர்ந்து அவளுடைய முகத்தை நோக்கினான். அவளுடைய உள்ளந்தான் தெரிந்தது அந்த உள்ளம் கசிந்துருகி கண்ணீராகி, 'அண்ணி! அதையெல்லாம் எப்பவோ, மறந்து மன்னித்தேன்' என்று ஆதரவாக அவளை அரவணைத்துக்கொள்ளாதோ என ஏங்கிக்கொண்டிருந்தது.

''இல்ல அண்ணி! நீங்கள் என்னைத் தவறாக விளங்கி விட்டியள். வாழ்க்கையின் துயரவேதனைக்குள்ளேயே அழுந்திக்கொண்டு, அந்த வட்டத்துக்குள்ளேயே வாழவேணும் என்று நினைக்கிறியள். துணிச்சலாக எதிர் நீச்சல்போட்டு, வாழ்க்கையை மாற்றியமைக்க வேணும்! அண்ணி! அனாதைகளும் விதவைகளுமாகவே பெருகிக்கொண்டிருக்கின்ற, இந்த சமூகத்தில், ஒவ்வொருவரும் அந்த துயரவேதனைக்குள்ளேயே அழுந்திக்கொண்டு, வாழநினைச்சால் எங்கட இனத்தைக் காப்பாற்றக் கடவுளாலையும் முடியாது! இந்த இன அழிவை எதிர்த்துப்போராடி, எங்கட இனம் தலைநிமிர்ந்து வாழவேண்டும்! படித்தவர்கள் என்ற முறையில் நாங்களே அந்த முற்போக்கான வாழ்க்கைய வாழ்ந்துகாட்டினால் என்ன?''

—நிதானமாக அவன் விளக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவன் அறிவை மட்டும் புகட்டுகின்ற ஆசிரியனல்ல! அதனை வழிநடத்தக்கூடிய ஆற்றலும் அவனிடத்தில் நிரம்பியிருந்தது. ஆழமான அவன் விளக்கத்தைக் கேட்டதும் அவள் உணர்ச்சிவசப்பட்டுப்போனாள்

'இருளடைந்துள்ள உங்கள் குடும்ப விளக்கிற்கு ஒளியேற்ற வந்திருக்கிறேன். உங்களுடைய இலட்சியக் கதாநாயகியாக வாழ விரும்புகிறேன்…'

அவனுடைய காதுகளில் உலகமே கவிதை பாடிக் கொண்டிருந்தது. கோயில் மணிகள், குயில்கள் எல்லாமே ஒரு கணம் நாதமிசைத்தன. 'ஜெகன்! இந்தாங்கோ விபூதி, சந்தனம்…' நிமிர்ந்து அவள் முகத்தை நோக்கினான். அந்தக் கோயில் குங்குமத்தை வெறுமையான அவள் நெற்றியிலிட்டு அழகு பார்க்க வேண்டும் போலிருந்தது.

திடீரென ஒரு நிசப்தம்! எங்கும் ஒரே மௌனம்! பார்வதியின் கூச்சல் ஓய்ந்து, மௌனம் நிலவியது. இருவரும் அறையை நோக்கித் திரும்பினார்கள். அங்கே … தீபன்! யன்னல் கம்பியில் சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்தான். தீபன் சாகவேயில்லை! சத்தியத்துக்காகப் போராடுபவன் என்றும் சாவதேயில்லை. ஜெயிக்கப்படும்வரை அவன் பிறந்து கொண்டே இருப்பான். மறுபிறவி எடுத்து வந்து விட்ட தீபன்; கரங்களைப் பற்றியவாறு மறுமணம் செய்து வாழ முடிவெடுத்துவிட்ட அந்த இளம் உள்ளங்கள்; அந்த இரு காட்சிகளும் பார்வதியின் கண்களை பனிக்கின்றது.

அவர்களுடைய வாழ்க்கை அஸ்தமித்து விடவில்லை. இனி உதயமே!

(முற்றும்)

சஞ்சீவி குறுநாவல்

# அரச குரு செய்த அவமானம்

அரச குருவிடமிருந்து தனக்குஅழைப்பு வரும் என்று பல நாட்களாக தெனாலிராமன் எதிர்பார்த்தான்.

அழைப்பு வராததைக் கண்டு அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

எப்படியாவது விஜய நகரம் சென்று அரச குருவை நேரில் சந்தித்தால், அரசவையில் விகடகவியாக இடம் பெற அவர் உதவத் தவறமாட்டார் என்ற ஒரு நம்பிக்கை அவனுள் இருந்தது.

ஒரு நாள் தன்னிடமிருந்த சில தட்டுமுட்டு சாமான்களை விற்றுப் பணம் சேர்த்து அதை எடுத்துக்கொண்டு தனது மனைவி மகனுடன் விஜயநகரம் சென்றடைந்தான்.

அங்கே மனைவி மக்களை ஒரு விடுதியில் தங்க வைத்து விட்டு தெனாலிராமன் அரச குருவின் வீடு நோக்கி நடந்தான்.

வீட்டு வாசலிலிருந்த காவலர்கள் அரச குருவுக்கு மிகவும் அறிமுகமானவர்களை மட்டும் உள்ளே செல்ல அனுமதித்தான்.

அறிமுகமில்லாதவர்களைப்பற்றி அரசகுருவுக்குத் தகவல் கொடுத்து அவர் வரச் சொன்னால் மட்டுமே உள்ளே அனுமதித்தான்.

அரச குருவுக்குத் தன்னைப் பற்றி நினைவு இருக்குமோ இருக்காதோ என தெனாலிராமனுக்குச்சந்தேகமாக இருந்தது.

அதனால் முறையான நடைமுறைக்கு எதிர்பார்க்காமல் குறுக்கு வழி முயற்சியைக் கையாளுவது என்று தெனாலிராமன் தீர்மானித்தான்.

தான் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று நல்ல உடைகளாக அணிந்து கொண்டான்.

ஒரு வண்டியை அமர்த்திக் கொண்டு அரசகுருவின் வீட்டு வாசலில் சென்று இறங்கினான்.

வண்டியில் யாரோ ஒரு பிரமுகர் வந்து இறங்குவதாக காவலன் எண்ணிக் கொண்டு தெனாலிராமனை மரியாதையுடன் வரவேற்றான்.

''நான் அரசகுருவின் பால்ய தோழன். நான் உள்ளே போகிறேன். நான் பேசி முடித்து திரும்பும் வரை யாரையும் உள்ளே விடாதே'' என்று கூறிவிட்டு கம்பீரமாக உள்ளே புகுந்து விட்டான் தெனாலிராமன்.

தெனாலிராமனை அடையாளம் கண்டுகொண்ட அரசகுரு திடுக்கிட்டார்.

பிடிவாத முயற்சியுடன் அவன் அவ்வளவு தூரம் வந்து விடுவான் என்று அவர் எதிர்பார்க்கவே இல்லை.

எப்படியாவது அவனை ஊரை விட்டே துரத்திவிடவேண்டும் என்று அவர் முடிவு கட்டிக் கொண்டார்.

''நீ யாரடா? என்ன நோக்கத்துடன் வந்தாய்? உன்னைப் பார்த்தால் கொள்ளைக்காரனைப்போல இருக்கிறதே? அடே யாரடா அங்கே இவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு'' என்று அரச குரு கூச்சல் போட்டார்.

இரண்டு மூன்று பணியாளர்கள் ஓடிவந்து தெனாலிராமனைப் பிடித்துக் கொண்டார்கள்.

''குரு மகாதேவா, என்னை அடையாளம் தெரியவில்லையா? நான்தான் தெனாலிராமன். மங்களகிரியில் நான் உங்களுக்கு கூட குற்றேவல் புரியவில்லையா? நான் இயற்றிய இலக்கியங்களைப் படித்துப் பார்த்துவிட்டு என்னைத் தாங்கள் பாராட்டவில்லையா? அரசவையில் என்னை ஆஸ்தான விகடகவியாக நியமிப்பதாக வாக்குறுதி தரவில்லையா?''

இவ்வாறெல்லாம் தெனாலிராமன் பரிதாபமாகக் கேட்டான்.

அரச குரு மசிந்து கொடுப்பதாக இல்லை. [illegible] முன்பின் [illegible] ஆளாகத் தெரியவில்லை.

''காவலர்கள் வந்து உன்னைக் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளுவதற்குள் மரியாதையாக வெளியே சென்று விடு. தவறினால் மன்னரிடம் முறையிட்டு உன்னைச் சிறையில் அடைக்கச் செய்து விடுவேன் என்று அரச குரு சத்தம் போட்டார்.

இனியும் அவரிடம் பேசிக்கொண்டிருப்பதால் அவமானப்படுவதைத் தவிர வேறு பயன் கிட்டாது என தெனாலிராமன் புரிந்து கொண்டான்.

விரக்தியுடனும் வேதனையுடனும் அரச குருவின் இல்லத்தை விட்டு வெளியே வந்தான்.

வீட்டு வாசலில் நின்றவாறே மனத்திற்குள் சபதமிட்டுக் கொண்டான்.

''அரச குருவே, மிகவும் எளிதாக என்னை அவமானப்படுத்த உம்மால் முடிந்தது. இதே மாதிரி [illegible] னப்படுத்தி பழிக்குப்பழி [illegible] விடமாட்டேன். அத்துடன் உம்முடைய உதவியில்லாமல் எப்பாடுபட்டாவது மன்னரது அவையிலே விகட கவி என்ற பெருமையுடனும் உமக்கு முன்னிலையிலேயே வீற்றிருப்பேன் இது உறுதி''

இவ்வாறு தெனாலிராமன் மனத்திற்குள் திட்டமிட்டுக் கொண்டான். ✶

தயாரிப்பு:
'ஸ்ரீ'

## உங்களுக்குத் தெரியுமா?

1. உலகத்தில் உள்ள கோபுரங்களில் மிகவும் உயர்ந்த கோபுரம் யாது?

பிரான்சு தேசத்தின் தலைப்பட்டினமான பரிஸ் நகரத்தில் உள்ள எயிபெல் கோபுரம்.

2. மிகப் பிரமாண்டமான கூட்டத்தைச் சேர்ந்த பிரமிட் கோபுரங்கள் எங்கே உள்ளன?

(GIZA) கீசா கூட்டத்தைச் சேர்ந்த பிரமிட் கோபுரங்கள் எகிப்தில் உள்ளன.




## எருது

எருது மாடு வண்டியை
எளிமை யாக இழுக்குது
பாரம் ஏற்றிக் கொண்டுமே
பக்கு வமாய் நடக்குது

கொம்பு இரண்டு கூரிய
கொடிய வாள்போல் இருக்குது
கம்பு கொண்டு அடித்ததும்
கடிதாய் நடந்து செல்லுது

வாலைப் பிடித்து முறுக்கியே
வம்பு பண்ணிக் காட்டியே
தோலை உரித்து வாட்டியே
தொல்லை அதிகம் தண்டனை

கலப்பை இழுத்து வயலையே
களைக்க உழுது காட்டுவார்
இவரில் ஏறிச் சிவனும்
இனிய சவாரி செய்குவார்

—வ. யோகானந்தசிவம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தப்புத் தாளங்கள்

சஞ்சீவி சிறுகதை

பல்லாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து வந்தவான் கடிதம் இளங்கோவை நன்றாகக் குழப்பிவிட்டது. ஜேர்மனிக்கு வந்த பின், இந்த மூன்றுவருட இடைவெளியில் அவன் இப்படி என்றுமே துயருற்றிருக்கவில்லை. வதனியா? துரோகமா? அவனால் நம்பமுடியவில்லை.

பொதுவாக ஊரிலிருந்து கடிதம் வரும் நாட்களில் அவன் மகிழ்ச்சியுடன் இருப்பான். அவனது அன்பான அழகிய இளம் மனைவியிடமிருந்து கடிதம் வருகின்ற நாட்களில், மீண்டும் மீண்டும் அந்த அழகான எழுத்துக்களில் வரும் வாசகங்களைப் பார்த்து வாசித்து அசைமீட்டு இன்புறுவான்.

வதனியைக் கைப்பிடித்து, அவளோடு இன்பத்தில் திளைத்து இல்லறம் நடத்தியதெல்லாம் ஒரு ஆறுமாதம் தான். அப்புறமாய் இப்போது மூன்று வருடப் பிரிவு! இந்த மூன்று வருடங்களில் நீல நிற வான் கடிதங்கள் தான் அவர்களிடையே பாலமாயிருந்தது. எவ்வளவு அன்பைக் கொட்டி எழுதுவாள்! அவளா?

வதனி நல்ல அழகி. முதன்முதலில் அவளைச் சந்தித்தபோதே இவன் அவளது அழகில் சொக்கிப் போய்விட்டான். திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக வந்து இவனது கிராமத்தில் வதனியும், தாயாரும் குடியேறினர். அந்த நாட்களில் வதனியின் அம்மா அயலட்டை வீடுகளில் குத்தி இடித்து, பாத்திரம் பற்றுத் தேய்த்துச் சம்பாதித்தே காலத்தை ஓட்ட வேண்டியிருந்தது. திருமலையில் வதனியின் அப்பாவை இனவெறியர்கள் கொன்றதோடு அவர்களது வீட்டையும் குண்டுவீசித் தகர்த்து விட்டார்கள். ஒரேயொரு அண்ணாவையும் ஆமி பிடித்துக் கொண்டுபோய் பூஸாவில் சிறைவைத்து விட்டார்கள். இந்தநிலையில் தான் யாழ்ப்பாணத்திலுள்ள இவர்களது கிராமத்தில் தாயும் மகளும் தஞ்சம் புகுந்தார்கள்.

வதனி தனது தாயாரோடு இவனது வீட்டிற்கு அடிக்கடி வருவாள். அப்படியான நாட்களில் அறிமுகப் புன்னகையோடு ஆரம்பித்த இவர்களது சிநேகம், கலந்துரையாடல், அரசியல் நிலைபற்றிய அலசல், இலக்கிய சர்ச்சை என்று நெருங்கி வந்து காதலாய் மொட்டவிழ்த்தது. கலந்துரையாடும் வேளைகளில், கரிய புருவங்களின் கீழ் கருவண்டாய்ச் சுழலும் வதனியின் கண்களின் சுழற்சியில் இளங்கோ தன்னைப் பறிகொடுத்தான். அவர்களது காதல் அதிவேகமாக மலர்ந்து மணம்பரப்பிய போது இளங்கோவின் அம்மா அணைபோட்டாள்.

ஊரிலே, உறவிலே நல்ல சீதனத்தோடு மணம் முடிக்கலாம். இந்த காதல் கீதல் எல்லாம் வேண்டாம்; என்று தடைபோட்ட போது இவனால் தாங்கமுடியவில்லை. அம்மாவோடு, தனது பக்க நியாயங்களைக் கூறி வாதாடினான். ஆனால் தாயாரோ 'தார இடத்துப் பெண் வேண்டாம்' என்று மறுத்துரைத்தாள்.

''மகனே நீ பிறந்த ஆறுமாதங்களில் உன் அப்பா இறந்து போக நான் எவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் உன்னை வளர்த்து உருவாக்கினேன். நான் பட்ட கடன்கள் கூட அடைக்கப்படவில்லை. எமக்கு இந்தக் குடிசையைத் தவிரவேறு சொத்துச் சுகமே கிடையாது. கடன் கொடுத்தவர்களும் எவ்வளவு காலம் தான் பொறுப்பார்கள்?... நீ வதனியை மறந்திடு...'' அம்மா கண்கலங்கினாள்.

அம்மாவின் வார்த்தைகள் அவனைக்குழப்பின. 'ஓ... பாவம்! அம்மா தனது பதினேழாவது வயதில் அப்பாவை மணந்து, பதினெட்டாவது வயதில் என்னைப் பெற்று, பத்தொன்பதாவது வயதில் விதவையாகி, பலவித சிரமங்களுக்கு மத்தியில் வளர்த்தெடுத்து என்னை உருவாக்கினாளல்லவா? ... பாவம்... இன்று அவளைக் கண்கலங்க வைக்கிறேனே!... இருபது வருடங்களாக என்னை வளர்த்த தாய்க்கு மாறாக நான் நடப்பது சரியா?'' - இளங்கோ தவித்தான் எனினும் வதனியை இழக்கவும் அவன் தயாராக இல்லை. எனவே காலம் கனியவைக்கும் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தான்.

நாம் ஒன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைத்து விடுகிறது. வதனியின் அம்மா திடீரென்று மூளைக்காய்ச்சலுக்குப் பலியான போது வதனி தனிமரமானாள். இந்த நிலையில் அவளைத் தன் வீட்டிற்கு அழைத்து வருவதைத் தவிர அவனுக்கு வேறு வழிதெரியவில்லை. இதுகாலவரையில் மறுப்புச் சொல்லிக்கொண்டிருந்த அம்மா கூட மனம்மாறி வதனியை மருமகளாக்க சம்மதித்தாள். மிகச் சுருக்கமான முறையில் அவர்களது திருமணம் நடந்தது.

இளங்கோவும் வதனியும் மனமொத்த தம்பதிகளாக வாழ்ந்து வந்தனர். வாட்டும் வறுமையின் மத்தியில் மகிழ்வோடு அவர்களது இல்லறம் தொடர்ந்தது.

நாட்டு நிலைமை வரவர மோசமாகிக் கொண்டு வரவே, இளவட்டங்கள் எல்லாம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்டனர். இளவயதுக் குடும்பஸ்தர்கள் கூட விதிவிலக்கில்லை.

இந்த நிலையில் பலர் அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தனர். கூடவே வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளும் இருந்தவால் பலரும் அகதிகளாக வெளியேறினர். இங்கே இருப்பது உயிருக்கே ஆபத்து என்பதால் இளங்கோவையும் போகும்படி வதனியும், அம்மாவும் தினமும் நச்சரிக்க ஆரம்பித்தனர். அவர்களது வேண்டுதலிலுள்ள நியாயம் அவனுக்கும் புரிந்தது. கூடவே ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்குப் போனால்



உழைத்துச் சம்பாதித்து, பட்டகடன்களை எல்லாம் அடைப்பதோடு, வளமாக வாழவும் வழிபிறக்கும் என எண்ணினான்.

வெளிநாடு போவதாக முடிவுசெய்தபின், அதற்குத் தேவையான பணத்திற்கு எங்கே போவது என்ற கேள்வி பிறந்தது. அதுவே அவனது நம்பிக்கையையும் சிதறடித்தது. ஆனால் கந்தசாமி கைகொடுத்த போது அவன் பூரித்தான்.

கந்தசாமியின் பண உதவியால் வெளிநாடு வந்து மூன்று வருடங்களாகிவிட்டன. பட்ட கடன் எல்லாம் வட்டியோடு அடைத்தாகிவிட்டது. வதனிக்கு வேண்டிய நகை நட்டு வாங்கியாகிவிட்டது. அவர்களது குடிசை வீடு கல்வீடாகிவிட்டது.

இனி ஊருக்குத்திரும்பி மனைவியோடு மகிழ்வாக குடித்தனம் நடத்தலாம் என இளங்கோ எண்ணினான். இளம் மனைவியைப் பிரிந்து இனியும் பணத்துக்காக மாயவேண்டாம் அவனது மனது வலியுறுத்தியது. விரைவில் ஊர் திரும்பப் போவதாக வதனிக்கும் எழுதினான். 'ஐயோ; அத்தான் இப்போதைக்கு ஊர்வர நினைக்காதீர்கள்' என்று வதனி எழுதியிருந்தாள். இராணுவக் கெடுபிடி அதிகம் என்றும், இதுவரையில் அரச பயங்கரவாத நடவடிக்கைகளினால் இருபதினாயிரம் அப்பாவிகள் பலியாகிவிட்டதாகவும், எனவே ஊர் வர நினைக்கவேண்டாமென்றும் பரிவோடு வேண்டியிருந்தாள்.

அவளது கடிதத்தின் சில வாசகங்கள் அவனது மனதை வருடின. ''அத்தான்; நீங்கள் எப்போது வருவீர்கள் என்று எனது உள்ளமும் தவியாய்த் தவித்துக் கொண்டு தான் இருக்கிறது. ஆனால் அதற்கு மேலாக, நீங்கள் இங்கே வந்தால் உங்களைப் பறிகொடுத்து விடுவேனோ என்று மனது பதறுகிறது. இராணுவ அட்டூழியங்களை வார்த்தையில் வடிக்கமுடியாது. எனவே பொறுத்ததோடு இன்னும் கொஞ்சக்காலம் பொறுத்திருங்கள். எனது நினைவிலே சுகம் காணுங்கள். நானும் உங்கள் நினைவிலே நிதம் நிதம் வாழ்கிறேன்.''

'ஓ... வதனி!'

'இப்படியெல்லாம் எழுதிய நீயா இன்று எனக்குத் துரோகம் நினைக்கின்றாய்.' இளங்கோ தவித்தான்?

இன்று அவனைக் குழப்பத்திலாழ்த்திய கடிதம் அவனது உறவினர் ஒருவரிடமிருந்து வந்திருந்தது. இதே விவகாரம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒரு மொட்டைக் கடிதமாக வந்த போது அவன் அதைப் பற்றி அதிகம் பொருட்படுத்தவில்லை. என்வதனி எனக்குத் துரோகம் செய்யமாட்டாள். இது யாரோ பொறாமைக்காரர்களுடைய வேலையாகத் தானிக்கும்' என எண்ணி அமைதியடைந்தான். ஆனால் இன்று அப்படி அவனால் அமைதியடைய முடியவில்லை.

'இளங்கோ!... இதை உனக்கு எப்படி எழுதுவதென்று எனக்குத் தெரியவில்லை. கந்தசாமியின் நடைமுறை சரியில்லை. இருல்போட்டுச்சுருபிடிப்பது போல் உனக்குக் கடன் தந்து அனுப்பிவிட்டு...சீ... எனக்கு எழுத வெட்கமாயிருக்கு... வேதனையுமாயிருக்கு... கேவலம்...!

அந்த வார்த்தைகள் பசுபரத்தாணி போல் அவனது நெஞ்சில் நிலைப்பட்டுவிட்டது. இன்னமும் அவ்விடத்தில் இரத்தம் கசிவது போன்ற

- ச. முருகானந்தன் -

வேதனை, 'ஓ... வதனி, அநாதையாக நின்ற உன்னை என் இதயக் கோயிலில் வைத்துப் பூசிக்கிறேனே! எப்படியம்மா எனக்குத் துரோகம் செய்ய உனக்கு மனது வந்தது. இங்கே வெளிநாடுகளுக்கு வந்த பலர் சாலைச் சரியாக்கி வெள்ளைத்தோல்களோடு வெகு உல்லாசமாகச் சல்லாபித்து வாழும் போது நான் மட்டும் உன்னை நினைத்தே வாழ்ந்து வந்ததற்கு நீ செய்த கைமாறு இது தானா? இளங்கோ தவித்தான்.

மூன்று வருடங்களை எவ்வளவு நாணயத்துடன் கழித்த இளைஞன்! வெட்கக் கேடான சங்கதி! அவனது கண்ணியத்திற்கு இப்படி ஒரு துரோகத்தை வதனி ஏற்படுத்திவிட்டாள்.

அவனால் அதை நம்ப முடியவில்லை; ஜீரணிக்கவும் முடியவில்லை. சோகச் சாயல் அவன் முகத்தில் கவியத்தொடங்கி விட்டது. அன்பு அதிகமாகச் செலுத்தப்பட்ட இடத்தில் சும்மா ஒரு கிறுகல் விழுந்தாலே போதும்; சந்தேகம் தானாகவே செழித்து வளர்ந்து விடும்.

அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

இரண்டில் ஒன்று பார்த்துவிடவேண்டியது தான். கட்டிய மனைவி கள்ளப் புருஷனுடன் சோரம் போகிறாள் என்றால் ஒரு காதால் கேட்டு மறுகாதால் வெளிவிடுகிற சமாச்சாரமா?

'ஒன்றில் அவளை வெட்டிச் சரிக்கவேண்டும்; இல்லாவிடில் நானாவது செத்து மடியவேண்டும்.'

இளங்கோ ஊர் புறப்பட முடிவு செய்துவிட்டான். ஆமி சுட்டாலென்ன; அழிஞ்சு போனால் என்ன இனியும் வாழ்க்கை ஒரு கேடா?

அடுத்தவாரம் அவன் பயணம் செய்த விமானம் கட்டுநாயக்காவில் தரையிறங்கியது.

கொழும்பு — யாழ்ப்பாணம், இகோ கிராமத்துள் நுழைந்தாகிவிட்டது!

கும்மிருட்டு; ஊர் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. தெரு நாய்கள் இடையிடையே குரைத்தன. பல நினைவுகள் குமிழியாய் வெளியேறக் கால்களை எட்டிப்போட்டான் இளங்கோ.

'ஊருக்குத் தெரிந்த விடயம்; உன் வீட்டிற்குத் தெரியாமலா இருக்கப் போகிறது? அம்மா கூட கண்டும் காணாதவளாகக் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறாளா? அல்லது அம்மாவின் கண்ணில் மண்ணை அள்ளித்தூவி விட்டு இவள் சரசமாடுகிறாளா?'

இளங்கோவுக்கு அம்மா மீதும் எரிச்சலேற்பட்டது. 'ஒரு கடிதம் எழுதி அவனுக்குப் போட்டிருக்கலாமே?

வீட்டுக் 'கேற்' பூட்டப்பட்டிருக்கவில்லை. இளங்கோ சத்தமில்லாமல் நுழைந்தான். அந்த நடுநிசியில் தம்மை மறந்து உரையாடும் காட்சி!

இளங்கோ வெலவெலத்துப் போனான்!

காணக்கூடாததைக் கண்டுவிட்ட அதிர்ச்சி ஒரு புறம், ஆவேசம் மறுபுறம் சிலையாய் நிற்கும் அவனைக் காணமல் அவர்கள் தொடரும் உரையாடல்...

''உள்ளே வேண்டாம்... மருமகளுக்குத் தெரிஞ்சால்...'' தன்னை மறந்த இன்ப அரவணைப்பில் தாய் பிகற்றுகிறாள். அவளது வாய்க்குத் தன் இதழ்களால் பூட்டுப்போடும் கந்தசாமி.

'ஓ... அம்மா நீயா... நீயுமா?' பூமி காலடியில் நழுவுகிறது; கூடவே வதனியிடம் மானசீகமாக மன்னிப்புக்கோரும் மனது!

விழாமலிருப்பதற்கு அருகேயிருந்தமரத்தைப் பற்றுகிறான் இளங்கோ! ★

சஞ்சீவி கவிதைக் கதம்பம்

## கனநாளோ?

உழைப்பே கதியாய்
உழல்பவர்கள்
ஊதியம் பெற்று
உயராமல்
உழக்கி உழக்கிச்
சேற்றுள்ளே
செக்கைச் சுற்றும்
மாடுகள் போல்
செத்து மடிவது
கனநாளோ?

- சிவச்சானு -

## அணுவும் அழிவும்

உயிரணுவில்
உருவாகித்
தாயன்பின்
தாலாட்டில்
வளர்ந்த வுயிர்
அனுதினமும்
ஊசலாடுது
அணுகுண்டின்
வளர்ச்சியினால்
ஆனால்...
உலகமோ
உறங்குது.

- நுணுவில் நாகராஜா -

## திரிசங்கு சொர்க்கம்

இந்தியாவும்
இலங்கையும்
ஒப்பந்தம்
இங்குள்ள
தமிழர்களுக்கு
நிர்ப்பந்தம்
உதைபட்டு
வதைபட்டு
அங்குமிங்கும்
சென்றபந்து
தந்திரத்தால்
அந்தரத்தில்
இப்போது
தங்கிநிற்குது
சரியென்று
இதைச்சொல்ல
முடியாது.. ...
பிழையென்று
இதைச்சொன்னால்
வழி வேறு......
இதுதான்
திரிசங்கு சொர்க்கம்
தமிழா நீ.....
தங்குமடமென்று
இதையெண்ணி
தூங்காமல் தொங்கு......

— நுணுவில் நாகராஜா—

## பெண் விடுதலை!

கவிதைகள் பல எழுதி
பேனா முனையில் நாங்கள்
சமுதாய விடுதலையைப்
பெற்று விட்டால் இங்கு
பெண்ணுக்கு விடுதலை
என்றுமே கிட்டாது
பின்னர் யோசிப்போம்
என்று பிற்போடாது
இன்றே நம் விடுதலையை
நாம் நோக்கி எழுந்திட்டால்
தமிழின விடுதலைக்குத்
தமிழினமே கிளம்பும்போது
அதற்குள்ளே பெண்ணினமும்
விடுதலையைப் பெறும்போது
நிஜத்திலே விடுதலையைப்
பெற்றிடுவோம் பெண்கள்.

— N. T. சுதந்திரமகள் —

# இன்று யாழ்ப்பாணக் குழந்தைகளைப் பாதிக்கும் வயிற்றோட்ட நோய்

- ஆர். லம்போதரன் -

யாழ்ப்பாணத்தில் தற்போது வயிற்றோட்ட நோய் சிறுபிள்ளைகளுக்குத் தீவிரமாகப் பரவி வருகின்றது. கடந்த மாதம் மட்டும் 207 பிள்ளைகள் வயிற்றோட்ட நோயின் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். 15 பிள்ளைகள் மரணமுற்றனர். இவ்வாறு சடுதியாக வயிற்றோட்ட நோய் பரவுவதற்கு சமீபகாலம் வரை இப்பிரதேசத்தில் நிலவிய நெருக்கடி நிலைமைகளும் போரினால் பாதிப்படைந்த சமுதாயம் இவ்வாறான நோய்களுக்கெதிரான நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் கவனஞ் செலுத்தத் தவறியமையும் காரணங்களாகலாம். மேலும் பெரும்பாலான மக்கள் பொருளாதார ரீதியாக பாதிப்படைந்ததும், மக்களின் இடம்பெயர்வு, அகதிகள் தொகை பெருகியமை போன்றவையும் இவ்வாறான தொற்றுநோய்கள் சடுதியாகத் தோன்றி கட்டுப்பாடின்றிப் பரவுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளன.

வயிற்றோட்டநோய் பெரும்பாலும் சிறுபிள்ளைகளைப் பீடிக்கின்ற பொதுவான நோயாகும். வயிற்றோட்டம் சிசு மரணத்தை ஏற்படுத்தக் கூடியதாய் இருப்பதுடன், தப்பிப் பிழைக்கும் பிள்ளைகளில் பெரும் பாலோரில் போசணைக் குறைபாட்டையும் தோற்றுவிக்கின்றது,

அத்தோடு எமது சமுதாயத்தில் வயிற்றோட்ட நோய் சம்பந்தமாகவும் அதனுடைய சிகிச்சை முறைகளைப் பற்றியும் பல தவறான நம்பிக்கைகளும், வழிமுறைகளும் நிலவி வருகின்றன. ஆகவே நாம் வயிற்றோட்ட நோய்பற்றியும், சிறுபிள்ளைகளுக்கு அதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும், இந்நோயின் சிகிச்சை முறைகள், தடுப்பு முறைகள் பற்றியும் அறிந்திருப்பது அவசியமாகின்றது.

வைத்திய சஞ்சீவி

### வயிற்றோட்டம் என்றால் என்ன?

[illegible] தரத்திற்கு மேல் நீர்த்தன்மையாக மலங்கழிந்தால் நாங்கள் வயிற்றோட்டம் இருப்பதாகச் சொல்லலாம். ஆனால் ஒருநாளில் மலம் இறுக்கமாகவோ, களித்தன்மையாகவோ மூன்று தரத்திற்கு மேல் கழிந்தாலும் அது வயிற்றோட்டம் என்று கருதப்படுவதில்லை.

### நோய்க்காரணி

சிறுபிள்ளைக்கு ஏற்படும் வயிற்றோட்ட நோயானது பெரும்பாலும் கிருமித் தொற்றினாலேயே [illegible] கூடுதலாக வைரசுக் கிருமிகளினாலும் அடுத்ததாக பற்றீரியாக்களினாலும் சில வேளைகளில குடலில் உள்ள பூச்சிகளினாலும் (Intestinal parasites) வயிற்றோட்டம் உண்டாகின்றது. அரிதாக வேறு சில காரணங்களும் வயிற்றோட்டத்தை உண்டாக்குகின்றன.

### குணங்குறிகள்

குழந்தைகளுக்கு வயிற்றோட்டநோய் கண்டால் மலம் நீர்த்தன்மையாகவும் அடிக்கடியும் கழியும். சில வேளைகளில் மலத்துடன் இரத்தம், சீதம் என்பனவும் காணப்படலாம். வயிற்றோட்டத்துடன் காய்ச்சல், வாந்தி போன்ற குணங்குறிகளும் காணப்படுவதுண்டு. வயிற்றோட்ட நோயின் பிரதான விளைவு நீரிழப்பாகும். இந்நோய்கண்ட பிள்ளைகளின் உடம்பிலிருந்து பெருமளவு நீர் இழக்கப்படுவதனால் பின்வரும் அறிகுறிகள் தோன்றும்.

1 குழந்தை சோர்வாகவும், அயர்ச்சியாவும், சிலவேளைகளில் எரிச்சலடைந்த நிலையிலும் காணப்படலாம் வயிற்றோட்டம் அதிதமாகக் காணப்படுமிடத்துக் குழந்தை நினைவிழந்த நிலையிலும் காணப்படலாம்.

2. கண்கள் குழி விழுந்து காணப்படும்.

3. உச்சிக்குழி உட்குழிந்து காணப்படும்.

4. வாயும், நாக்கும் உலர்ந்து காணப்படும்.

5. சருமம் அல்லது தோலை மெதுவாகப் பிடித்து இழுக்கும்போது அது மீண்டும் பழைய நிலையை அடைய சிறிது நேரம் எடுக்கும்.

6. சுவாசம் விரைவானதாகும்.

7. சிறுநீர் போவது குறைந்திருக்கும். அல்லது முற்றாக சிறுநீர் கழியாமல் இருக்கும்.

8. நிறை குறைந்திருக்கும்.

இவற்றுள் எல்லா அறிகுறிகளும் ஒரேநேரத்தில் காணப்படுவதில்லை. இரண்டு அல்லது மேற்பட்ட அறிகுறிகள் இருப்பின் நீரிழப்பு ஏற்பட்டிருக்கிறது எனக் கொள்ளலாம்.

### பராமரிப்பு

நோய்கண்ட பிள்ளைகளுக்கு வயிற்றோட்டத்தினாலும் சில வேளைகளில் வயிற்றோட்டத்துடன் சேர்ந்து காணப்படும் வாந்தியினாலும் உடலிலிருந்து நீரும்,

(9ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சமுதாய நீதியை நாடுவது முற்போக்கு அநீதி, கொடுமைகளைச் சாடுவது முற்போக்கு

ஈழத்து இலக்கிய உலகில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பலமுற்போக்கு எண்ணங்களையும் கருத்துக்களையும் மக்கள் முன் வைத்து, சமுதாயக் கொடுமைகளுக்கெதிராக தமது பேனவை நிறுத்திவைத்து தமிழ் சமூக முன்னேற்றத்துக்காகத் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளவர் முற்போக்கு எழுத்தாளர் டொமினிக் ஜீவா. கடந்த 22 ஆண்டுகளாக பல இலக்கிய பிரசுரகர்த்

## முற்போக்கு இலக்கியத்துக்கு ஜீவா தரும் வரைவிலக்கணம்

தாக்களுக்கு சவால் விடும் நிலையில், மக்களுடைய எண்ணங்கள், ரசனைகள், உணர்வுகளை சரிவரப்புரிந்து கொண்டு அவற்றை வெளியிடுவதன் மூலம் ஈழத்தில் தரமான இலக்கிய சஞ்சிகையை தொடர்ச்சியாகநடத்தமுடியும் என்பதை தமது ''மல்லிகை'' சஞ்சிகைமூலம் நிரூபித்து வரும் டொமினிக் ஜீவாவுக்கு இது மணிவிழா. ஆண்டு அவர் தந்த பேட்டி இதோ:-

★ கேள்வி: எழுத்துத் துறையில் நீங்கள் ஈடுபடுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது எது?

பதில்: நான் சிறுவனாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த சமூகக்கொடுமைகள், அக்கால மக்கள் மத்தியில் நிலவிய இரட்டை வாழ்க்கை முறை, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் என் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தின. இவற்றுக்குப் பரிகாரம் காண மக்களை எழுச்சியடையச் செய்யும் ஆயுதமாகப் பேனவே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தேன். அத்துடன் அக்காலத்தில் நிலவிய இந்திய தேசிய போராட்ட உணர்வுகளும் யான் பேனு பிடிக்கக் காரணமாக அமைந்தன.

★ கேள்வி: உங்கள் எழுத்துத்துறை எவ்வளவுக்கு சமுதாய சீர்திருத்தங்களை ஏற்படுத்தியுள்ளன?

பதில்: இந்திய எழுத்துக்களே மிக உன்னதமானவை என சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் கருதப்பட்டது. எமது எழுத்துலக பிரவேசத்தின் வளர்ச்சி இன்று அந்த நிலைப் போக்கில் ஐம்பது வீதத்தை உடைத்து விட்டது. இலங்கையிலும் தரமுள்ள எழுத்தாளர்கள் உள்ளனர் என்பது உணர்த்தப்பட்டுள்ளது. எமது போராட்டத்தின் பரிணும வளர்ச்சியால் தான் இன்று யாழ்ப்பாணத்தில் நான்கு தினசரிகள் வெளிவருகின்றன.

எமது எழுத்துகள், போராட்டங்கள் ஆகியவற்றுக்குக் கணிசமான அளவு சமுதாய நீதி கிடைத்துள்ளதும் வெளிப்படை.

★ கேள்வி: உங்கள் படைப்புக்களில் உங்களுக்குச் சிறப்பைத் தேடித் தந்தது எது எனக் கூற முடியுமா?

பதில்: ''தண்ணீரும் கண்ணீரும்'' என்ற சிறுகதைத் தொகுதி நம் மக்களின் பொருளாதார அடித்தளங்களையும், சமுதாய அமைப்புக்களையும், ஏற்றத்தாழ்வுகளையும் பிரதிபலிப்பனவாய் அமைந்ததோடு, சமூகக் கொடுமைகளுக்கெதிராகக் கருத்துக்களை முன் வைத்தும் உள்ளது. இந்நூல்சாகித்தியமண்டலப் பரிசினையும் பெற்றது. இப்பெருமையைவிட, இந்நூல் ரஷ்யா, செக்கோஸ்லவாகியா, ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதும் பிறமொழி எழுத்தாளர் பலருக்கு என்னை அறிமுகப்படுத்தவும் பேருதவியாய் அமைந்தது. இது எனக்குப் பெருமை, மனநிறைவு, திருப்தி ஆகியவற்றைக் கொடுக்கிறது.

கேள்வி: 'மல்லிகை' பத்திரிகையை நீங்கள் வெளியிடுவதன் நோக்கம்?

பதில்: 22 ஆண்டுகளுக்கு முன் ஈழத்து எழுத்துலக படைப்பாளி

**- செவ்வி, வி. பி, சர்மா -**

கள் தமது எண்ணக் கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய தகுந்த தளம் இன்றி அவதிப்பட்டனர். கொழும்பில் இருந்து வெளிவரும் சில வாரமலர்கள் அவர்களின் படைப்புக்களை வெளியிட்டபோதிலும் அவை எமது எழுத்தாளர்களின் உணர்வை ஊட்டும் விச்சுக்களற்று விளங்கின.

அத்துடன் நான் ஓர் எழுத்தாளனுகி, எனது எண்ணங்களை வெட்டு-ஒட்டு இன்றி வெளியிடவும், எந்த எழுத்தாளனுயினும் தமது கருத்துக்களை சுதந்திரமாக முன் வைக்கக்கூடிய ஒரு தளமாகவும் மல்லிகையை ஏற்படுத்திக்கொடுத்தேன். இன்று எனது நோக்கம் வெற்றிகண்டதுகண்டு மகிழ்கிறேன்.

★ கேள்வி: பல சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவராது போனதற்கும் மல்லிகை நிலைத்து நிற்பதற்கும் காரணம்?

பதில்: மக்களை அணுகாத காரணத்தினுல் தான் பல சஞ்சிகைகளைப் பலர் வெளியிட்டு தோற்றனர். அச்சஞ்சிகைகளுக்கு சவாலாக மல்லிகையைத் தவருது வெளியிடுகிறேம். மக்களுடைய எண்ணங்கள், ரசனைகள், உணர்வுகளை சரியான முறையில் வெளிப்படுத்த முடியாத பத்திரிகைகள் தோல்வி அடையவே செய்யும். ஏனைய பிரசுர கர்த்தாக்கள் சஞ்சிகைகளை அச்சிடுகின்றனரே தவிர மக்களுக்கு அவற்றை விநியோகிக்கத் துடிக்கவில்லை பத்திரிகை உலகில் கதாசிரியன் வெளியீட்டாளன் – விநியோகஸ்தன் ஆகிய சகல வேலைகளையும் சளைக்காது செய்கிறேன். பல இடங்களில் படியேறி இறங்கி மல்லிகையை விற்றுள்ளேன். மார்க்கட்டை நம்பி நான் மல்லிகையை வெளியிடவில்லை. பதிலுக்கு மக்களை நம்பினேன். அதற்குக் கிடைத்த பரிசுதான் 22 ஆண்டு கால நிலையான மல்லிகை வெளியீடு.

★ கேள்வி: முற்போக்கு எழுத்தாளர் சங்க பிரமுகராக விளங்கும் நீங்கள் முற்போக்கு இலக்கியம்பற்றி விளக்க முடியுமா?

பதில்: முற்போக்கு என்பது செயற்பாட்டைக்கொண்டே கணிக்கப்படுகிறது. சமுதாயத்தில் நிலவும் சாதி, மத, இன,மத எதிர்ப்புப் போராட்டங்களும், அநீதிகள், கொடுமைகள், ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றுக்கெதிராக செயற்படுவதும் மக்களிடையே நிலவும் சிறந்த அம்சங்களை வெளிக்கொணர்ந்து காட்டுவதுமே முற்போக்காகும். இவற்றை நிறைவுசெய்ய மேற்கொள்ளப்படும் எழுத்துக்களை முற்போக்கு இலக்கியங்கள் எனக்



குறிப்பிடலாம்.

★ கேள்வி: முற்போக்கு இலக்கியம் ஒரு கோஷ்டி இலக்கியம் என கூறப்படுகிறதே! அது பொருத்தமுடையது தானு?

பதில்: எந்தக்கோஷ்டி எழுத்தாளனுயினும் அவரது எழுத்துக்களில் சமுதாய முன்னேற்றம், விழிப்புணர்வு, புரட்சிகர சிந்தனைகள் காணப்பட்டால் அவை முற்போக்குத் தன்மையுடையனவாகக் கொள்ளப்படும். முற்போக்கை கோஷ்டி இலக்கியம் என வாதிடுபவர்களின் முற்போக்கான எண்ணங்கள் பல மல்லிகையில் வெளிவந்தது மட்டுமல்ல; அவர்களின் புகைப்படங்களே அட்டைப்படமாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

★ கேள்வி: மல்லிகையின் மணம் தமிழகத்தில் மட்டும்தானு? அல்லது...

பதில்: தமிழகத்தில் மட்டுமல்ல; ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் உள்ள இலங்கை மல்லிகை ரசிகர்கள் மற்றும் சிங்கப்பூர், மலேசியா ரசிகர்களுக்கிடையேயெல்லாம் மல்லிகை மணக்கிறதே. ஒரு கஷ்டம், அவர்கள் மல்லிகையைப்பெறச் செய்வதில் மல்லிகை விலையைப்போல 4,5 மடங்கு தபாற்செலவுக்குச் செலவிடவேண்டியுள்ளது.

★ கேள்வி: எதிர்காலத்தில் மல்லிகையின் நிலைபற்றி...?

பதில்: எந்த விலை கொடுத்தும் மல்லிகையை வாங்கத்துடிக்கும் வெளிநாட்டு மல்லிகை ரசிகர்கள், மக்கள் தம் சொத்தாக மல்லிகையை கருதிக் காதலிப்பது, வடமராட்சி சம்பவ பயங்கர நிகழ்வுகள் மத்தியிலும் நிலைகுலையாது மணத்து நிற்கும் பேறு, எவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும் பூத்தே தீருவேன் என மாதம் தவருது வெளிவந்துவிடும்நிலை இவையெல்லாம் மல்லிகையின் உறுதிப்பாட்டு உரங்கள் அல்லவா?

★ கேள்வி: தென்னிந்திய பத்திரிகை தடை நீக்கம் ஈழத்து எழுத்தாளரை பின்தள்ளும் நிலைக்கு ஆளாக்கியுள்ளதா?

பதில்: அந்தக் கட்டத்தை நாம் தாண்டி விட்டோம்.

வெளிநாட்டுப் பத்திரிகைகளை வாங்கும் சக்தி மக்களிடையே குறைந்து விட்டது. அந்நிய செலாவணி அதிகரிப்பு தென்னக பத்திரிகைகளைவிட ஈழத்துப் பத்திரிகைகளை வாங்கிப் படிக்கும் பக்குவத்தையும் பழக்கத்தையும் எம்மவருக்கு ஏற்படுத்தியுள்ளது. இது எம்போன்ற எழுத்தாளருக்கும், பிரசுரிப்பாளருக்கும் கிடைத்ததொரு அரியவாய்ப்பாகும். அத்துடன் 1983க்குபின் ஏற்பட்ட பயங்கர அனுபவங்களைப் பெற்றுள்ளவர்களின் நிலைப்பாடுகளைப்பற்றி எழுத்துக்களில் பார்க்கவே நம் மக்கள் இப்போது விரும்புகின்றனர். வெறும் பொழுதுபோக்கு எழுத்துக்களில் தற்போது அவர்களுக்கு நாட்டம் இல்லை.

★ கேள்வி: கடைசியாக நீங்கள் தமிழகம் சென்றிருந்தபோது இலக்கியத்துறையில் அங்குள்ள மக்களில் கண்ட மாற்றங்கள் எவை?

பதில்: 1984இல் தமிழகம் சென்றிருந்தேன். இலங்கை எழுத்தாளரை மதிக்கவேண்டும் என்ற மதிப்புணர்வு அங்கு உருவாகியுள்ளது. பல எழுத்தாளர்களை இனங்கண்டுகொள்ளும் வாய்ப்பும் உண்டு. கடந்த பத்து ஆண்டுகளுக்குள்




இலங்கை இலக்கியங்கள் கணிசமான அளவு அங்கு பரவி வந்துள்ளன. இன்று இந்த மண்ணுக்கு ஏற்பட்டுள்ள துன்ப நிகழ்வுகள்ஒருநெகிழ்வை -சகோதர உணர்வை- தோற்றுவித்துள்ளது.

★ கேள்வி: இலக்கிய வாழ்வில் உங்களால் மறக்கமுடியாத ஏதாவது நிகழ்வு?

பதில்: எனது எழுத்துலக ஈடுபாடு என் தாயாருக்கு ஆரம்பத்தில் மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்தது. பல இரவுகளில் நடுங்கும் குளிரில்கூட சோற்றுடன் என்வருகைக்காக விழித்திருப்பார். உருப்படாத ஒரு பிள்ளையைப் பெற்றுவிட்டேனே என மனம் வெதும்புவார். 1961 செப்ரெம்பரில், எனது சிறுகதைத்தொகுதிக்கு சாகித்திய மண்டல பரிசுபெற்றுத் திரும்பிய சமயம் யாழ்ப்பாணம் புகையிரத நிலயத்தில் அன்றைய யாழ்ப்பாணமேயர் திரு. ரி. எஸ். துரைராசா, மாநகர சபை உறுப்பினர்கள், மற்றும் இலக்கிய நண்பர்கள் வந்து என்னை வரவேற்று வாழ்த்திய நிகழ்ச்சியை எனது தாயார் கண்ணுற்ருர்.

இன்றுதான் என் பெற்ற உடல் குளிர்ந்ததடா,'' என என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டு ஆனந்த நீர் சொரிந்த அந்த நிகழ்வு என்னுல் மறக்கமுடியாதது. இன்றைய என் வளர்ச்சிநிலைகண்டு பெருமைப்பட என்தாய் என் கூட இல்லையே என்ற நிலை என்னுல் பொறுக்க முடியாதுள்ளது.

★ கேள்வி: சஞ்சீவி வாயிலாக, வாசகர்களுக்கும் சஞ்சீவிக்கும் தாங்கள் கூறும் வார்த்தைகள்...?

பதில்: நாம் எல்லோரும் ஒரே போராட்டத்தைப்பல்வேறு துறையில் நடத்துகின்ருேம். நம் மண் மணக்கவேண்டும். நம் எழுத்தாளர்கள் சர்வதேச அந்தஸ்தைப் பெற எந்தெந்தத்துறை மூலம் முயலவேண்டுமோ அவற்றை செயற்படுத்த வேண்டும். இன்று எம் மத்தியில் பல அற்புத இளம் தலைமுறை எழுத்தாளர்கள் அமிழ்ந்து போயுள்ளனர். அவர்களை வெளிக்கொணர்ந்து ஒளிவீசச் செய்வது சஞ்சீவி போன்ற சஞ்சிகைகளின் பெரும் பணியாகும். ★

# அனுகரணம் என்ருல் என்ன?

கும்பிடுபூச்சி (Preying Mantis) இதற்கு ஒரு சிறந்த உதாரணம். இலைகளிடையே காணப்படும் கும்பிடுபூச்சியின் (Leaf Insect செட்டைகள் இலை போலவும், கன்னிகளிடையே காணப்படும்கும்பிடுபூச்சியின் (Stick Insect) வடிவம் தடிபோலவும் இருக்கும். மேலும் இவற்றின் நிறம் சூழலுக்கு ஏற்ப பசிய நிறமுடையதாக அல்லது கபில நிறமுடையதாக, அல்லது கரிய நிறமுடையதாகவிருக்கும். இது போன்ற மற்றும் பல உதாரணங்களுண்டு. இதே போன்று தாவரங்களிலும் களைகள் பயிர்த்தாவரங்களை ஒத்திருப்பதனுல் களைக்காரனின் கண்ணிலிருந்து தப்பி விடுகின்றன. சில களைகளில் நாற்றுக்கள் பயிர்த் தாவரங்களின் நாற்றுக்களுக்கு ஒப்பானவையாகவிருக்கும். அனேக களைகளில் கனிகளும் விதைகளும் பயிர்த் தாவரங்களின் கனிகள் விதைகளுக்கு ஒப்பானவையாகவிருக்கும். கோழிச்சூடன், நெற்சப்பி போன்ற களைகளை அனுபவமுள்ளவர்கள்தான் நெல்லிலிருந்து பிரித்தறிய முடியும். இங்ஙனம் களைகள் பொய்க்கோலம் பூண்டு பெரும்பாலும் தப்பிவிடுகின்றன.

(Warning Colouration) சில இன விலங்குகள் தமது நிறங்களைக் கொண்டு எச்சரிக்கை விடுவதுண்டு. சிவப்பு, நீலம், மஞ்சள், கறுப்பு ஆகிய நிறங்கள் எச்சரிக்கைக்குரிய நிறங்களாகும். விடத்துடன் தொடர்புடையவையாகக் கருதப்படுவதுண்டு. விடசந்துக்கள் இத்தகைய நிறங்களைக் கொண்டிருப்பதுண்டு. உதாரணமாக திருநீலகண்டன் - மட்டைத் தேள், சில இனப்பாம்புகள், குளவிகள், சேவல் மீன் (Scorpion Fish)

> பாடசாலை மாணவர்கள் குறிப்பாக க.பொ.த. சாதாரணதர உயர்தரவகுப்பு மாணவர்களின் நலன்கருதி அவர்கள் பயிலும் பாடங்களுக்கு உசாத்துணையாக அமையும் ஆக்கங்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளியாக உள்ளன.

போன்றவை.

சில தாவர இனங்களிலும் இத்தகைய எச்சரிக்கையூட்டும் நிறங்கள் காணப்படுவதுண்டு, பிக்ஸ ஒறலான (Bixa Oralana) என்றெரு மரமுண்டு. இது இலங்கையின் ஈரவலயத்துக்குரியது, நச்சுத்தன்மையானது. இதன் கனிகள் பயங்கரமான சிவப்பு நிறமுடையவை. அதனுல் அனுவசியமாக விலங்குகளினுல் தீண்டப்படுவதில்லை. காஞ்சூரை (Strichnos Nuxvomica) நச்சுத்தன்மையானது என்பது எல்லோருக்கும் தெரியும். இதன் கனிகளும் கவர்ச்சியான அதேசமயம் ஒருவித அச்சத்தைத் தருகின்ற நிறத்தையுடையவை.

**முட்கள் கூரியங்கள்**

சில இன விலங்குகளின் உடல் முள் செறிந்ததாக இருப்பதனுல் எதிரிகளிலிருந்து தப்பி வாழுகின்றன. இவற்றிற்கு இயற்கையான எதிரிகள் இல்லையென்றே சொல்லலாம். (மனிதனைத்தவிர) முள்ளம்பன்றி (Porcupine). புதர்ப்பன்றி (Hedge Hog) எக்கிட்ஞ எனப்படும் முள்செறிந்த எறும்பு தின்னி (Spiny ant Eater – Echidna) ஆகியவை பாலூட்டிகளாகும். (இவற்றுள் எக்கிட்ஞ முட்டையிடுகின்ற பாலூட்டியாகும்) இவற்றின் மயிர்கள் முட்களாகவும் திருபடைந்திருப்பதுமுண்டு. இதே போன்ற பாதுகாப்புப் பொறிமுறை தாவரங்

## பாடம் பயில்வோம்

களிலும் காணப்படுவதுண்டு.

முட்கள் பொதுவாகத் திரிபடைந்த அமைப்புக்களாகும். தண்டு, இலை, இலையடிச் செதில்கள் போன்ற அமைப்புக்கள் முட்களாகத் திரிபடைந்திருப்பதுண்டு. களா ((Carissa) வில் நுனியரும்பு முள்ளாகத் திரிபடைந்திருக்கும். எலுமிச்சை (Citrus) மாதுளை (Punica) முட்புல்லாந்தி (Gymnosporia) மருதோன்றி (Lawsonia) போன்ற இன்னும் பல தாவரங்களில் கக்கவரும்பு முட்களாகத் திரி

**- கே. எஸ். குகதாசன் -**
(அதிபர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

படைந்திருக்கும். இலந்தை (Zizyphus) காத்தோட்டி (Capparis) தொட்டாற்சுருங்கி (Mimosa) வேலமரம் (Acacia) போன்ற பல தாவரங்களில் இலையடிச் செதில்கள் முட்களாகத் திரிபடைந்திருக்கும்.

கூரியங்கள் மேற்றேலுக்குரிய அமைப்புக்களாகும். அங்குரத் தொகுதியில் தண்டுகள், இலைகள் போன்ற அமைப்புக்களில் சிதறலாக, ஐதாகவோ அல்லது அடர்த்தியாகவோ காணப்படும். ரோஸ் (Rosa) தொட்டாற்சுருங்கி (Mimosa) தூதுவளை (Solanum)போன்ற தாவரங்கள் இதற்குச் சிறந்த உதாரணமாகும். அன்னுசி (Ananas) பின்னைக்கற்ருளை (Aloe) ஆனைக்கற்ருளை (Agave) தாழை (Pandanus) போன்ற தாவரங்களில் இலைவிளிம்பு முள் [illegible] ஞல் பாதுகாப்புக் கிடைக்கின்றது. கண்டங்கத்தரி (Solanum) (Xanthocarpum) யில் தண்டு, இலை மேற்பரப்பு முழுவதும் அடர்த்தியாக முட்கள் காணப்படும். அதனுல் பார்ப்பதற்குப் பயங்கரமாகவிருக்கும்.

**மயிர்கள்**

மூக்குத்திப் பூண்டு (Tridax) சம்புப்புற்கள் (Aristida, Cyanopogan, Cympopogan) போன்றவை அடர்த்தியான மயிர் செறிந்தவையாக இருப்பதனுல் மேயும் விலங்குகளிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கின்றது.

பூசினி (Cucurbita), ஆமணக்கு (Ricinus) காட்டாமணக்கு (Jatropha) போன்ற தாவரங்களில் சுரப்பி மயிர்கள் இருப்பதனுல் பாதுகாப்புக்கிடைக்கின்றது.

காஞ்சோண்டி (Tragia) ஆனைவணங்கி (Heliotropium) போன்ற தாவரங்களில் கொட்டும் மயிர்கள் இருப்பதனுல் பாதுகாப்புக் கிடைக்கின்றது. இவை மயிர்கொட்டிக்கு ஒப்பானவை. மேற்படி தாவரங்களிலும், மயிர்கொட்டியின் மயிர்களிலும் உள்ள நச்சுப்பொருள் போமிக் அமிலமாகும். (Formic Acid)

நாகதாளி (Opuntia) யில் அரும்பு முழுமையாக முட்களாகத் திரிபடைந்திருக்கும். அரும்புத்தண்டு பெரிய முட்களாகவும், அரும்பிலைகள் சிறிய முட்களாகவும், அரும்பிலை இலையடிச் செதில்கள் மயிர்களாகவும் திரிபடைந்து பாதுகாப்புக் கொடுக்கும். ★ [illegible] வளரும்)

# அபரக் கிரியைகள்

**பண்டிதர் மு. கந்தையா**

10. பிரேதக்கிரிகையில் கும்பபூசை, அக்கினிகாரியங்கள் எல்லாம் செய்வதேன்?

அவையெல்லாம் முன் சொல்லியவாறு இறந்தவரைச் சிவமாக்கும்முயற்சிகள் தான்.

கும்பங்களில் உருத்திரனையும் திக்குப்பாலகர்களையும் எழுந்தருள வைத்துப் பூசிக்கப்படுகின்றது. அக்கினியிலும் சிவனை எழுந்தருள வைத்துப் பூசிக்கப்படுகிறது, கும்பங்களைப் பூசிப்பதனுல்அவற்றிலுள்ள நீருக்குச் சிவத்தன்மை உண்டாகும். அந்நீரினுல் இறந்த உடலுக்கு நீராட்டுதலால் நீரிலுள்ள சிவத்தன்மை உடலிற் செறியும். அக்கினி சிவமாகப் பூசிக்கப்பட்டதால் அதில் ஏற்பட்ட சிவத்தன்மை அந்த அக்கினியினுல் உடலை எரிக்கும் போது அதன் சிவத்தன்மை மேலும் அதிகரிக்க உதவும். உடலை விட்டுப்பிரிந்தாலும் ஒரு வகையில் அதன் தொடர்பு நீங்காதிருக்கும். உயிருக்கும் அச்சிவத்தன்மை பதியும்.

11. உடலை விட்டுப் பிரிந்த பின்னும் உயிர் உடல் தொடர்பு நீங்காதிருக்கிறதென்பதை விளக்க முடியவில்லையே! அதை எப்படி நம்பமுடியும்?

அப்படி அது தொடர்பு நீங்காதிருப்பதை நாங்கள் காட்சியாற் காண முடியாது, காணும் பக்குவம்சாதாரணமானஎங்களுக்கில்லை. பக்குவமுள்ளவர்கள் கண்டு சொல்லியுள்ளார்கள். அவர்கள் சொல்வதை நாம் அநுமானித்துநம்புவதற்குரிய ஏதுக்கள் நடைமுறையில் இருக்கின்றன. இறந்தவர் உயிர்விடும்போது கிடந்த இடத்தில் அன்று தொடக்கம் இளநீர் அல்லது தண்ணீர்ச் செம்பு வைப்பதுண்டு. 'எட்டு' என்ற வைபவத்திலன்று அவர் விரும்பி அருந்தி வந்த சகல உணவுப்பண்டங்களும் படைப்பதுண்டு, அங்கே பாடல் படிப்புக்கள் முடிந்தபின் படைத்தவற்றிற் சிறிது சிறிது எடுத்து முகட்டை நோக்கிக்காட்டுவதுண்டு இவையெல்லாம் இறந்தவர் தனது உடம்பு எரித்தபின்னுங் கூட உடல் இருந்த சூழலில் இருக்கிருர் என்பதை அறிவிக்கும் ஏதுக்களாகும்.

12. அங்ஙனமாயின், அவர் சுவர்க்க நரகம் போவரென்றல்லவோ முதலிற் சொல்லப்பட்டது. இப்போ இங்கே தான் இருக்கிருர் என்பது அதற்கு மாறுபாடாயிருக்கிறதே!

அதற்கு இது மாறுபடாது. எங்ஙனமெனில் இப்போ சொல்லப்படுகிற இந்தத் தொடர்பு முற்ருக நீங்கப்பட்டதன் மேல்தான் அவர் சுவர்க்க நரகங்களிற் செல்வர். அந்தியேட்டியில் தான் அத்தொடர்பு முற்ருக நீக்கப்படும்.

13. அந்தியேட்டியில் அதுநீக்கப்படும் என்பது எப்படி?

அந்தியேட்டிக் கிரியையை அவதானிப்பதால் அது புலனுகும். அந்தியேட்டிக் கிரியைக்கு அமைக்கும் மாக்கோட்ட மண்டபத்தில் தென்கிழக்கு மூலையில் ஐந்து நிற மாக்கள் சதுர வடிவாகப் பரப்பப்பட்டிருக்குமே! அதில் ஒவ்வொரு நிறமும் பஞ்ச பூதங்களில் ஒவ்வொன்றைக் குறிக்கும். பஞ்ச பூதங்களால் அமைந்தது அவர் உடம்பு. பஞ்ச பூதங்கள் மூலமாகத் தான் அவர் உடம்பில் தொடர்புற்றிருந்தார் என்றஉண்மையின் அடிப்படையில், மாவடிவான சதுரங்களில் பஞ்சபூதங்களைப் பொருத்தி அவ்வப் பூதங்களுக்குரிய தெய்வங்களைப் பூசித்து அவற்றின் கருணையால் அவருக்கு அப்பூதங்களோடு இருந்த தொடர்புகளை நீக்கிவிடுவது அக்கிரிகையின் விளக்கமாகும்.

14. அந்தியேட்டியிலும் தர்ப்பையில் ஆளுருவஞ் செய்து குளிப்பாட்டி, பொற்கண்ணமிடித்துச் சுடுகிருர்களே அது ஏன்?

அதுவும் அந்தியேட்டி வரை உயிருக்கு உடல் தொடர்பு இருக்கிறதென்பதற்கான மற்ருெரு அறிகுறிதான்.

நன்றி: கோம்பையன் மணல் மயான பரிபாலன சபை மலர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மூதூர்ப் பிரதேசத் தமிழ்க் கிராமங்கள்; இன்றுவரை அனுபவிக்கும் இன்னல்கள்



இயங்காத பணிமனை

### சேனையூர்

மாலை 3. 30 மணியளவில் சேனையூர் கிராமத்தை அடைந்தோம். 1250 குடும்பங்கள் இங்கு வாழ்ந்துவந்தனர்.

கூலிவேலை, கயிறுதிரித்தல், வேளாண்மை போன்ற தொழில்களில் இப் பகுதி மக்கள் ஈடுபட்டு வந்தனர்.

86ஆம்ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி கட்டைபறிச்சானில் இராணுவம் முகாமிட்டது.

இராணுவம் தமது தேவைக்கென 23 வீடுகளைப் பொறுப்பு ஏற்றன. முகாமில் இருந்து வெளியே பார்ப்பதற்காக முகாமைச் சுற்றியுள்ள பல வீடுகளை உடைத்தெறிந்தனர்.

ஒப்பந்தம் ஏற்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன் குண்டு வீச்சு விமானங்களும் இப்பகுதியில் தாக்குதல் நடத்தின.

இதனால் சேனையூர் வர்ணப் பிள்ளையார்கோவில் சேதமடைந்ததுடன் கோவில் ஐயர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

விமானத்தாக்குதலினால் கார்த்திகேசு யோகரட்ணம் என்ற இளைஞர் பலியானார்.

சேனையூர் சேதங்களைப் பார்வையிட்டு செய்தி சேகரித்த நாம் மல்லிகைத்தீவு நோக்கிப்பயணமாகிறோம்.

### மல்லிகைத்தீவு

மல்லிகைத்தீவுஅழகான பெயர். அருமையான கிராமம். அங்கே இராணுவ வன்செயல் தலைதூக்கிய போது விளையும் நெல்மணிகள் அனைத்தும் அழிந்தன.

சிறுகச்சிறுக சேமித்த பொருள்கள் தீயில் வெந்து நாசமாகின.

மக்கள் காட்டுக்குள் ஓடினார்கள். 450 குடும்பங்களைக் கொண்ட அந்தக் கிராமம் அழிக்கப்பட்டது.

மல்லிகையின் வாசனை அந்தக் கிராமத்தில் மணக்கவில்லை மரணமானவரின் சடல நாற்றம் எங்கும் பரவியது.

மல்லிகைத்தீவில் மட்டும் 21 பேர் கொல்லப்பட்டனர்.

800 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் காடுகளிலும் ஆலயங்களிலும் தஞ்சம் அடைந்தன.

நிலைமை வழமைக்கு திரும்பி மக்கள் சிறிது சிறிதாக குடிமனைக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த வேளையில்தான் 'எகெட்' நிறுவனம். (கிழக்குப் பிராந்திய மனிதவளக் கல்வி அபிவிருத்திக் கழகம்) உதவி வழங்கியது.

குடும்பத் தலைவனை இழந்த குடும்பத்துக்கு மாதாமாதம் தலா 200 ரூபாவினை வழங்கி வருகிறது இந்த நிறுவனம்.

அரச நிவாரணம் இப் பகுதி மக்களுக்கு அவ்வளவாக வழங்கப்படவில்லை என்றும் அகதிகள் தெரிவிக்கின்றனர்.

அன்றுமாலை 5. 30 மணி அளவில் பள்ளிக் குடியிருப்பு நோக்கி பயணமாகிறோம்.

### பள்ளிக்குடியிருப்பு

பள்ளிக்குடியிருப்புப் பகுதிக்கு பத்திரிகையாளர்கள் வந்துள்ளார்கள் என்று கேள்விப்பட்டதும் அப்பகுதியில் உள்ள பெரியவர்கள் சிலர் எம்மைச் சூழ்ந்து கொண்டார்கள்.

பள்ளிக்குடியிருப்புப் பகுதியில் 3 சிறுகிராமங்கள் உள்ளன. கூலித் தொழில் செய்வதே பலரது ஆயுட்காலத்தொழிலாகும். எண்ணூறு குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றன.



இரண்டுமைல் தூரம் தண்ணீர் காவும் வனிதையர்

17 - 10 -86இல் முதன் முதலாக இராணுவம் பள்ளிக்குடியிருப்பு பகுதியைச் சுற்றி வளைத்தது;

ஏதுமே அறியாத அப்பாவி மக்கள்மீது அன்னியன் கொடுத்த ஆயுதங்கள் ரவைகளைக் கக்கின.

ஓட முடியாத பலர் சுருண்டு விழுந்தனர். ஓட முடிந்தவர்களே இன்று தப்பி வாழ்கிறார்கள். சுமார் இருபது பேர் வரை கொல்லப்பட்டனர்.

கங்கை நீர்கொண்டு விளையும் வயல்கள் வரண்டு கிடந்தன.

தமிழர் பிரதேசமான பள்ளிக்குடியிருப்புப் பகுதி விவசாயிகளைப் பாதிக்கும் நோக்கில் கங்கைத் தண்ணீரும் அரசால் தடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக விளை நிலங்கள் வரண்டு விட்டன.

மழையை நம்பியே மக்கள் இப்போது அங்கு வாழ்கிறார்கள்.

இராணுவ அட்டூழியங்களால் வீட்டை விட்டு காட்டுக்குள் ஓடிய மக்கள் இன்னும் தான் வீடுதிரும்பவில்லை.

ஊருக்குள் முகாம் இருக்கும் போது நாம் எப்படி ஊருக்குத்திரும்ப முடியும்'' என்று அங்கு உள்ள மக்கள் எம்மைக் கேட்கிறார்கள்.


இந்தக் கிராமத்தில் வாழ்ந்த 800 குடும்பங்களும் இன்று நிர்க்கதியாகியுள்ளன.

இந்த நிலையில் எகட் நிறுவனம், வை. எம். எச். ஏயும் தான் உதவி புரிந்து வருகின்றன.

இப்பகுதியில் கடற்றொழில் செய்வதற்குக் கடல்வளம் இருக்கிறது. பொருளாதார வசதிகள் இல்லை.

மாணவர்கள் படிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். பாடசாலை வசதிகள் இல்லை. ஏழு சிறிய கிராமங்களுக்கும் மூன்று பாடசாலைகள் மட்டுமே உள்ளன.

500 பிள்ளைகள் படிக்கின்ற பாடசாலைகளில் மூன்று ஆசிரியர்கள் மட்டுமே கடமை புரிகிறார்கள்.



அழிபாடு காணீர்

நோய் ஏற்பட்டால் குணப்படுத்துவதற்கு வைத்தியவசதி எதுவும் கிடையாது. வைத்திய சாலைக்குச் செல்வதாயிருந்தால் எட்டு மைல்களுக்கு அப்பால் உள்ள மூதூருக்கோ, அல்லது திருகோணமலைக்கோ தான் செல்ல வேண்டும்.

வாகன வசதிகள் கிடையாது சைக்கிளும் மாட்டு வண்டிகளும் தான் இப் பகுதி மக்களின் போக்குவரத்துச் சாதனங்கள்.

குடிதண்ணீர் வசதி மிகமிகக் குறைவு. இரண்டு மைல்கள் சென்று தான் குடிதண்ணீர் கொண்டு வரவேண்டும் காலையும் மாலையும் பெண்கள் தண்ணீர்க் குடங்களுடன் இரண்டு மைல் நடந்து சென்று தண்ணீர் கொண்டு வருவார்கள்.

பள்ளிக்குடியிருப்பில் வன்செயலில் ஒரு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் பகுதியில் உள்ள 9 இந்து ஆலயங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஊர்காவல் படையினர் பொது மக்கள் வீடுகளில் புகுந்து கொள்ளையடித்து,

ஒப்பந்தம் ஏற்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கூட அட்டகாசங்கள் இங்கு நடந்துள்ளன.

எனவே நாம் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா இராணுவத் தாக்குதல் இன்றி பாதுகாப்புடன் இருக்க வேண்டுமானால் ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் — என்று பொது மக்கள் எம்மிடம் கூறினார்கள்.

### மணற்சேனை

மணற்சேனைப் பகுதியை நோக்கிச் சென்று நாம் எமது செய்திச்

(9 ஆம் பக்கம் பார்க்க)

- க. இரத்தினராஜசிங்கம் -

---

# நாய் கடித்ததால் ஊசி போடப் போன ஆச்சிக்கு வந்த கோபம்

'கூட்டமாய் நில்லாதையுங்கோ'

'வாங்கிலை இருங்கோ; பேர் கூப்பிட்டால் வாருங்கோ'

'இதுகளுக்குச் சொன்னாலும் விளங்காது. ஆச்சி, வாங்கிலை இரனை'

இந்த வசனங்களை நீங்கள் கேட்டிராவிட்டால் நீங்கள் அதிஷ்டசாலிகள். நீங்கள் ஆஸ்பத்திரிப் படியே மிதிக்கவில்லை என்பது அர்த்தம்.

யாழ். போதனாவைத்தியசாலை மெடிக்கல் கிளினிக் டாக்டரின் அறைக்கு முன் உள்ள நீளமான விருந்தையில் இருபதுக்கும் மேற்பட்ட வாங்குகளில் நூற்றுக் கணக்கானவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். இடமின்மையால் இன்னும் பலர் நிற்கிறார்கள்.

நோயினால் பீடிக்கப்பட்டவர்கள்; நோயின் அறிகுறி உள்ளவர்கள், நோய் வந்துவிடுமோ என அச்சம் உள்ளவர்கள், நோயாளிகளோடு கூட வந்தவர்கள், இப்படிப் பலரகமானவர்கள் அந்த வாங்குகளில் இருக்கிறார்கள்.

அவர்களுடைய முறை வந்து, பெயர் கூப்பிடப்படும்வரை மூன்று மணித்தியாலங்கள்வரை பொறுமையாக இருக்க வேண்டும்.

அந்த நேரத்தில் குடும்ப விவகாரங்கள் அரசியல் கருத்துக்கள், பொருளாதாரப் பிரச்சினைகள் போன்ற பல விடயங்கள் அலசி ஆராயப்படும்.

கலந்துரையாடல்கள் மட்டுமன்றி, கருத்துப் பரிமாறல்கள், சொற் பரிமாறல்கள், வாக்குவாதங்கள் போன்றவையும் நிகழும்.

அதோ பாருங்கள், ஒரு வயதான ஆச்சி வாங்கில் இருக்கிறார். அருகில் ஒரு இளம் பெண் உட்கார்ந்திருக்கிறார்.

ஆச்சி பொறுமையிழந்து டாக்டரின் அறை வாசலையும் அருகில் இருக்கும் பெண்ணையும் முறைத்துப் பார்க்கிறார்.

திடீரெனப் பெண்ணைப் பார்த்து குமுறுகிறார். 'நானும் அப்போதையிலிருந்து பார்க்கிறன் முழங்காலாலை இடிக்கிறாய். என்ன திமிரே'

நகைச்சுவை

எல்லோரும் அந்தப் பெண்ணைப் பார்க்கிறார்கள். அந்தப் பெண் வெட்கத்தால் கூனிக்குறுகி மெதுவாக அந்த இடத்தை விட்டு எழுந்து விருந்தையில் போய் நிற்கிறார். ஆச்சி வெற்றிப் பெருமிதத்தோடு தாராளமாக உட்கார்ந்திருக்கிறார்.

ஆச்சிக்குப் பின்னுக்கு, இதுவரை உதயன் பத்திரிகையில் மூழ்கியிருந்தவர் மெல்ல முன்னுக்குக் குனிந்து ஆச்சியிடம் கேட்கிறார். 'ஆச்சி என்னணை வருத்தமுனக்கு'

'நாய் கடிச்சுப் போட்டுது. ஊசி போட வந்தனான்' ஆச்சி வேண்டா வெறுப்பாய்ப் பதில் சொல்கிறார்.

உதயன் ஆசாமி ஆவலுடன் தொடர்கிறார். 'எப்படியணை நாய் கடிச்சது'

'நாய் வாயாலைதான் கடிச்சது. பின்னை மூக்காலையே கடிக்கும். நீ வந்த வேலையைப் பார்'

'வாயைக் குடுத்து வாங்கிக்கட்டிக்கிட்டன்' என முணுமுணுத்தபடி மீண்டும் உதயனில் மூழ்குகிறார். இதுவரை ஓசிப் பேப்பர் கிடைக்காதா என ஏங்கியபடி அங்கும் இங்கும் பார்த்தபடி இருந்த ஒருவர் ஆச்சியிடம் பேச்சுக் கொடுக்கிறார்.

'எனை ஆச்சி ஏனணை நாய் கடிச்சது' ஆச்சிக்கு இப்போது கோபம் தலைக்கேறிவிட்டது.

'நாய் சொல்லிக்கொண்டே கடிக்குது. நீ விண்ணானம் விடாதை உன்ரை வேலையைப் பார்' என்று சூடாகச் சொல்கிறார்.

அவரினது கவனமும் ஆச்சியிடம் செல்கிறது. அறை வாசலில் நின்ற அற்றென்டர் இதை அவதானித்துவிட்டு 'ஆச்சி, நம்பர் எடுத்திட்டியே' என்று கேட்கிறார்.

கையில் மடித்து வைத்திருந்த லக்ஸ்பிறே பையை விரித்து அதனுள் இருந்து நம்பர் துண்டை எடுத்துக் கொடுக்கிறார்.

அற்றென்டர் நம்பரை நன்றாகப் பார்த்தபின் 'இந்த நம்பர் பிழை ஆச்சி, யார் தந்தது?' என்று கேட்கிறார்.

ஆச்சிக்குக் கோபம் வருகிறது. 'விதானை யார் தான் வேறை யார்'

அற்றென்டருக்குக் கோபமும், சிரிப்பும் ஒரே நேரத்தில் வருகிறது.

'ஆச்சி ஆஸ்பத்திரியில் தான் நம்பர் எடுக்க வேணும். அது சரி என்னணை வருத்தம்' என்று கேட்கிறார்.

'எனக்கொரு வருத்தமும் இல்லை, நாய் கடிச்சுப் போட்டுது' ஆச்சி வேண்டா வெறுப்பாகப் பதில் சொல்கிறார்.

இப்போது அற்றெண்டருக்கு உண்மையில் கோபம் வருகிறது.

'நாய் கடிச்சா ஏன் இங்கை வந்த நீ. போனை ஓ. பி. டிக்கு' என்கிறார்.

ஆச்சிக்கு அடக்கமுடியாத ஆத்திரம் பொத்துக் கொண்டு வருகிறது.

எழும்பி நின்று அற்றெண்டரைப் பார்த்து முறைத்தபடி 'போடி வாடி என்று கதைச்சியோ நான் யாரெண்டு உனக்குக் காட்டுவன்' என்று உரத்துச் சொல்கிறார்.

அற்றென்டர் மெதுவாக அவ்விடத்தை விட்டு நழுவுகிறார்.

அருகில் இருந்தவர்கள் ஆச்சிக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லி, அவவை ஓ. பி. டிக்கு அனுப்புகிறார்கள்.

'நாய் கடிச்சு நான் நாயாய் அலையிறேன்' என்று சொல்லியபடி எழும்பிப் போகிறார்.

அவ இருந்த இடத்தில் ஆச்சியால் விரட்டப்பட்ட பெண் மீண்டும் வந்து அமர்கிறார்.

அப்பொழுது பேப்பர் விற்கும் பையன் வருகிறான். 'பேப்பர், பேப்பர்' என்று சொல்லியபடி எல்லோரையும் நோட்டம் விடுகிறான்.

ஓசிப் பேப்பர் படித்தவர், யாராவது வாங்க மாட்டார்களா என ஆவலுடன் அங்கும் இங்கும் பார்க்கிறார்.

பேப்பர் பையன் கடலையை வாயில் போட்டபடி மீண்டும் 'பேப்பர், பேப்பர்' என்று ராகம் பாடுகிறான்.

கண்ணாடி அணிந்த பெரியவர் ஒருவர் ஒரு பேப்பரை வாங்கி மடியில் வைத்து விட்டு சேர்ட் பொக்கெட்டில் சில்லறை தேடுகிறார்.

சில்லறையைக் கொடுத்த பின்பு மடியைப் பார்க்கிறார். பேப்பரைக் காணவில்லை.

அருகில் இருந்தவர் அதை சுவாரஸ்யமாக வாசித்துக் கொண்டிருக்கிறார்.

அவரைக் குழப்ப மனமின்றி, பேப்பர் வாங்கியவர் டாக்டரின் அறை வாசலை நோக்குகிறா.

அவரின் பெயர் கூப்பிடப்படுகிறது. அவர் தான் வாங்கிய பேப்பரை மறந்து, நிம்மதிப் பெருமூச்சுடன் டாக்டரிடம் போகிறார். ★

(யாவும் கற்பனை)

- வில்வம் பசுபதி -

---

# இளையோரைப் பயிற்றுகிறார் "ஆர்ட்டிஸ்ட்" மணியம்

"ஆர்ட்டிஸ்ற் மணியம்'' என அழைக்கப்படும் திரு. பெ. சுப்பிரமணியம் அவர்களை கலையுலகம் நன்கறியும். அவரது ஓவியப்படைப்புக்களைப் பலரும் பார்த்து வியந்திருக்கலாம். பாராட்டியுமிருக்கலாம்,

அவரின் வயது அறுபத்தைந்தைத் தாண்டுகிறது. ஆனாலும் பார்வைக்கு ஒரு இளைஞராகவே தோற்றமளிக்கிறார். மிகவும் உற்சாகமுள்ளவராகவே தொழிற்படுகிறார். நான்கு முழ வேஷ்டி; தோளிலோ இரண்டு முழத்துண்டு; வெள்ளை அரைக்கைச் சட்டை சிரித்த முகம் ஆகிய இவைகளே அவரது உருவ விசேடங்களாகும். எதையுமே கூர்ந்து நோக்கி அளவிடும் சற்று விசாலமான கண்கள் அவரை ஒரு இளைஞராக இனங்காட்டும்.

நல்லூர் செட்டித்தெருவிலே அவரது இல்லம் அமைந்துள்ளது. இல்லத்தின் முன்புறமாக அவரது உயரமான சித்திர கூடம் இடம் பெற்றுள்ளது. அங்கே கண்களைக் கவரக் கூடிய விதமான உயிரோவியங்கள் பலவுள்ளன. தெய்வத் திருவுருவங்கள்; போராளிகளின் உயிரோவியங்கள்; சினிமாத் தாரகைகளின் சுடர்விடும் வண்ண ஓவியங்கள்; மற்றும் பல விளம்பரப் படங்களையும் பார்த்து நயக்கலாம்.

துடிப்பும், ஆர்வமும் உள்ள ஐந்தாறு சீடர்கள் எந்த நேரமும் அங்கே தொழிற்படுகிறார்கள். நிமிடத்துக்கு நிமிடமாக உருவங்கள் பல உருவாகிக் கொண்டிருக்கின்றன. வர்ணக் கலவைகளும் பொருத்தமான தூரிகைகளும் மாணவர்கள் கரங்களில் மாறி மாறி இடம்பெற்றுத் தொழில் புரிகின்றன. சித்திரந் தீட்ட உதவுகின்றன.

இலங்கைக் கடற்படையில் பணியாற்றித் தேடிக் கொண்ட பொருளோடு இந்திய நாட்டுக்குப் பலமுறை சென்று ஸ்தாபன ரீதியாகவும்; பல கலாவல்லுனர்கள் தொடர்பாலும் சித்திரக் கலையில் பல உத்திகளைப் பயின்று கொண்டார்.

ஆரம்பப் பள்ளி வாழ்விலே கூட அடுத்தவரைப் பார்த்து நொடிப் பொழுதில் படம் வரையும் ஆற்றல் பெற்ற மணியமவர்கள், சினிமா நடிக நடிகையர் படங்களையும் பார்த்து வரைந்துபயிற்சி பெற்றார்.




நாடு திரும்பிய மணியமவர்கள் சினிமா விளம்பரப் படங்களை வரைந்து பெயரோடும் புகழோடும் கூடவே பணத்தையும் சம்பாதித்து வந்தார்.

ஆரம்ப முயற்சியாக [illegible] M.K. தியாகராஜ பாகவதரையும், அடிமைப் பெண்ணில் M. G. ராமச்சந்திரனையும் வரைந்து பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்.

மிஷனைற் ஸ்தாபனத்துக்கு விஜயம் செய்திருந்த தென்னிந்தியத் துறவியொருவரை வரைந்து காண்பித்த போது அவருடன் சென்ற மற்றுமொரு துறவியால் ஆசீர்வதிக்கப் பெற்ற சம்பவத்தையும் இலங்கை வந்திருந்த ருஷிய நாட்டு ஸ்தானிகர் தாம் வரைந்த புரட்சிவீரர் லெனின் அவர்களின் பெரிய அளவிலான படத்தைப் பாராட்டிப் பரிசளித்த நிகழ்ச்சியையும் முகத்திலே பெருமிதந் தோன்றக் குறிப்பிட்டார்.

பெருமதிப்புக்குரிய நல்லைநகர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிகபரமாச்சாரிய சுவாமிகள் தாம் வரைந்தளித்த ஞானப்பாலுண்ட ஞானசம்பந்தப் பெருமானின் திருவுருவப் படத்தைப் பாராட்டிப் பல பெருமக்கள் முன்னிலையில் கௌரவித்து அளித்த 'ஓவியச் சுடர்மணி' என்ற பட்டத்தையும் அருட்கவி திரு. சீ. விநாசித்தம்பி அவர்களால் அளிக்கப்பட்ட ஓவியச் செல்வன் என்னும் பட்டத்தையும் மனநிறைவோடு குறிப்பிட்டார்.

அமரரான ஓவியர் திரு. பெனடிக்ற் அவர்கள் தம் வழியில் நின்று ஊக்குவித்ததாகவும் நன்றியுணர்வோடு கூறினார். ராம்தேவ என்ற இந்தியக் கலைஞர் ஒருவரும் தம் கலை உத்திகளுக்கு ஊக்கமளித்ததாகக் குறிப்பிட்டார். வர்த்தக ஓவிய வகையை அதிகமாகப் பின்பற்றி வெற்றிகண்டார்.

தம்மிடம் பயின்ற சில மாணவர்கள் ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் கலைக்கூடங்களை அமைத்து அரும்பணி ஆற்றி நமக்கும் தனக்கும் புகழீட்டி வருவதாகச் சொன்னார்.

பெரிய தாபன ரீதியாக கலைக்கூடம் ஒன்றை அமைத்துக் கலைவளர்க்க வேண்டுமென்ற ஆர்வமொன்று தம்மை ஆட்கொண்டுள்ளதாகவும், நல்லூர் முருகன் அதற்கு அருள்செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டார். ★

- செவ்வி: ஏ, நமசிவாயம் -

---

## நாக்கின் கதை...

(4ஆம் பக்க தொடர்ச்சி)

வீரர்களுக்குத் தப்பி, அவ்வாயினுள்ளே இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்ஙனமே நீங்களும், ஏற்படக்கூடிய அபாயங்களையும் ஆபத்துக்களையும் தடுத்துக்கொள்ளுதல் வேண்டும். கெட்டவர்களின் கூட்டங்களிலே சேராதிருங்கள். தீய பழக்கங்களைப் பழகிக்கொள்ளாமலிருங்கள். உங்கள் பெற்றோருக்கும் நீங்கள் கல்வி பயிலும் பாடசாலைகளுக்கும் அவப் பெயரை உண்டாக்கிக் கொள்ளாதீர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சோல் ஒலிம்பிக் போட்டிகளில் மீண்டும் இழுபறி நிலை

**1972** ஆம் ஆண்டுக்குப் பின் உலக நாடுகள் பல கலந்து கொள்வதாக இருந்த சோல் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதில் மீண்டும் பல பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளது ஒலிம்பிக் கமிட்டி.

ஏற்கனவே தென் கொரியாவின் அரசியல் ஸ்திரமின்மையால் சோலில் ஒலிம்பிக் நடைபெறுமா என்ற ஐயம் மேலோங்கி இருந்தது. அந்த நிலைமை ஓரளவு சாதகமாக மாற ''கடவுள் இடம் கொடுத்தாலும் மதகுரு இடம் கொடுக்காத கதையாக'' ஆரம்பித்துள்ளது அயல் நாட்டு அரசியல் பிணக்கு.

ஆரம்பத்தில் கொரியாவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவதாக முடிவாகியபோது வட கொரியாவும் தென் கொரியாவும் இணைந்தே போட்டிகளை நடத்துவதாக இருந்தது. இந்த முடிவின் பேரில் மொத்தமாக நடைபெற இருந்த போட்டிகள் 237 இல் சில போட்டிகள் வடகொரியாவிலும், சில தென் கொரியாவிலும் நடைபெறுவதாக இருந்தது.

இந்த பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் முடிவினால் இரண்டு துருவங்களாக இருந்த கம்யூனிச அணியைச் சேர்ந்த வட கொரியாவையும், முதலாளித்துவ அணியைச் சேர்ந்த தென்கொரியாவையும் இணைக்க ஒரு பாலமாக விளையாட்டு அமையப்போவதைக் கண்டு ஆனந்தம் கொண்ட விளையாட்டு ரசிகர்களின் ஆசையில் இடிவிழும் நிலைமை தோன்றியுள்ளது இன்று.

பாலமாக அமைய இருந்த விளையாட்டே இரண்டு நாடுகளுக்கும் இடையில் உள்ள பிளவை அதிகரிக்குமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது.

மொத்த விளையாட்டு நிகழ்ச்சிகளில் வட கொரியாவில் பத்து நிகழ்ச்சிகளும் மிகுதி நிகழ்ச்சிகள் தென் கொரியாவிலும் நடத்த முடிவாகியுள்ளதால் தான் பிரச்சினை எழுந்துள்ளது.

தனக்கு ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் தொகை போதாது என்று ஆட்சேபித்த வடகொரிய பிரதிநிதிகள் இருநாட்டு எல்லையில் உள்ள பலத்த பாதுகாப்பு வலயத்தையும் அத்து மீறி பிரவேசம் செய்து தென் கொரியாவில் புகுந்து பேச்சுவார்த்தை நடத்தித் திரும்பியுள்ளனர். ஆனாலும் முடிவுகள் வட கொரியாவுக்கு சாதகமாக அமையவில்லை.

இதனை அடுத்து கம்யூனிச நாடுகளிடம் ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஸ்கரிக்கும் படி கோரியுள்ளது வட கொரியா. இதனை சோல் ஒலிம்பிக் போட்டிகளைக் குழப்ப வடகொரியா எடுக்கும் ஒரு முயற்சி என கண்டித்துள்ள தென் கொரியா ஒலிம்பிக் போட்டிகளைக் காப்பாற்ற ரஷ்யா அமெரிக்கா ஆகிய நாடுகளின் உதவியை நாடியுள்ளது. கியூபா ஜனாதிபதி பிடில் காஸ்ரோவின் உதவியும் இந்த சமரச முயற்சிக்கு கோரப்பட்டுள்ளது.

எந்த நாடுகளின் உதவிகள் வெற்றியளித்தாலும் பரவாயில்லை 1988 இல் உலக நாடுகளின் விளையாட்டு வீரர்கள் எல்லோரும் கலந்து கொள்ளும் ஒரு பரிபூரணமான விளையாட்டுப் போட்டி ஒன்று நடைபெற வேண்டும் என்பதே விளையாட்டு ரசிகர்களின் விருப்பம்.

தென் கிழக்கு ஆசியாவில் வல்லரசுகள் அத்துமீறிப் பிரவேசிப்பதாகக் கண்டனம் செய்யும் நாம் சகோதர அயல் நாடுகளுக்கிடையில் ஏற்படும் சிறு பிணக்கைத் தீர்க்க ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலுள்ள வல்லரசுகளைத் துணைக்கு அழைப்பது மிகவும் வேடிக்கையான செயல்.

- ஈசன் -

## விளையாட்டு விமர்சனம்

**1987** ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான இலங்கைக் கோஷ்டியின் பதினைந்து வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக் குழுவிற்கு ஒரு நாள் போட்டிகளில் நன்கு சோபிக்கக் கூடிய டியூவிப்மெண்டிஸ் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு ஒத்தாசை செய்ய துணைத் தலைவராக ரோய் டயஸின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரொசான் மகாநாம, அசந்தா குரு சிங்கா ரஞ்சன் மடுகல்லே, அர்சுன, ரணதுங்கா, அரவிந்த டி சில்வா, பிராண்டன் குறுப்புப் போன்ற இளம் துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டம் இலங்கை அணிக்கு வலுவூட்டுவதாக அமையும்.

ருமேஸ ரட்ணயக்கா, வினோதன் ஜோன், சிறீதரன், ஜெகநாதன், ரவி ரட்ணயாகா, அசந்தா டி மெல், டொன் அருண சிறீ போன்ற பந்து வீச்சாளர்களும் இலங்கை அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியில் ஜெகநாதன், வினோதன் ஜோன் ஆகிய இரண்டு தமிழ் ஆட்டக்காரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் இலங்கை அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டது மட்டும் தான் இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையால் தமிழர்களுக்குக் கிடைத்த சம உரிமையாக இருக்கும்?

அத்தோடு இந்தியத் தொலைக்காட்சியான தூரதர்ஷனுக்கும் உலகக் கிண்ணப் போட்டி அமைப்பாளர்களுக்கும் இடையில் கட்டணங்கள் சம்பந்தமாக இருந்த இழுபறிநிலை நீங்கியுள்ளது. இதனால் எமக்கும் தூரதர்ஷனில் உலகக் கிண்ணப் போட்டிகளைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கலாம். ★

## ஒரு விளையாட்டு ரசிகர் அனுப்பிய கடிதம் இதோ:


விளையாட்டுத் துறை நல்லெண்ணத் தூதுவராக வந்த ஆற்றல் மிகுந்த குருநாகல் மாவட்ட உதைபந்தாட்டக் கோஷ்டி, முன்பு பழக்கமற்ற திடலில், திரளான யாழ் ரசிகர் மத்தியில், விறுவிறுப்பாக ஆடியதுமல்லாமல், 2-0 என்ற ரீதியில் யாழ் தெரிவுக் கோஷ்டியைத் தோற்கடித்து, நிலைகுலையச் செய்தமை யாவரும் அறிந்த உண்மையாகும். குருநாகல் நல்லெண்ணத் தூதுக்குழுவின் வெற்றியை மெச்சுகிறோம். ஆனால் எம்மை மற்றவர் குறை கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளித்துவிட்டோமேயென்று நினைக்கும்போதுதான் எம் மனம் வேதனையடைகின்றது.

'யாழ் தெரிவு' என்ற இந்தப் பரந்த பதத்திற்கு ஏற்றவாறு யாழ் தெரிவு கோஷ்டி அமைந்துள்ளதோ என்ற ஐயம் எழுகின்றது. அவ்வாறு அமைந்திருந்தால், யாழ் மாவட்ட ரசிகர்களின் நன் மதிப்பையும் ஆதரவையும் பெற்றிருப்பார்களல்லவா? முதற்கண் நம்மிடம் நிலவும் தன்னலம், பூசல், சச்சரவு, அகங்காரம் நீக்கப்படல் வேண்டும். விளையாட்டுத்துறையிலாவது நாம் கட்டுப்பாட்டுடன் ஒரு மனதாக இயங்க வேண்டும். நாம் இங்கிருந்து எங்கு செல்கிறோம். ★

விக்டர்
கிருபராஜ்

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 79



அனுப்புபவா பெயர்:-
திரு/திருமதி/செல்வன்/செல்வி ..........

..........

விலாசம்:- ..........

..........

வயது:- ..........

ஒப்பம்:- ..........

**இடமிருந்து வலம்**

1. இராவணன், 5. குழம்பு, 7. பழுத்த 8. இல்லாள், 9. சுவாச உறுப்பில் வித்தியாசமான பொருள் ஏதும் சென்றால் இது நிகழும், 11. மாசு, 12. ஊர்வனவற்றில் ஒன்று 13. அசைச்சொல், 14. சிறைப்பிடிக்கப்பட்டவன், 15. பதுமை, 16. பெரிய, 18. இணங்காமை, 20. வைரவர் அல்லது சிவன், 22. ஒட்டியிருந்து அழிப்பது.

**மேலிருந்து கீழ்**

1. பிதா, 2. ஒரு கிரகம், 3. முன்னுக்கு வா, 4. மாலை, 5. ஒரு பாத்திரம், 6. ஒன்றாகச் சேர்வதால் வருவது, 8. வாசமுள்ளபூ, 10. வலி, 13. முன்னே இடுவது, 15. சின்ன 17. திருமணமான பெண்ணுக்கு இதுவே காவல், 18. காட்டு மிருகம் ஒன்று, 19. செடிவகையைச் சேர்ந்த தாவரம், 20. பிறப்பின் ஆரம்பம், 21. பாவம் செய்தவன்.

**சொற்சிலம்பம்
போட்டி இல. 77 விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. பஞ்சமாபாதகம், 6. நாதி, 7. 9. கரை, 10. தணிதல், 13. மூலை, 14. கேது 15. கண், 16. அம்பாள், 18. முடவன், 19. கவிதை, 21. கும், 22. புஜம்.

**மேலிருந்து கீழ்**

1. பஞ்சம், 2. சகுந்தலை, 3. பால், 4. கதிரை, 5. நாம், 8. திணி, 9. கல், 11. தனம், 12. மாது, 13. முண்டம், 14. கேள்வி, 15. கழுகு. 16. அன்பு, 17. பாகம், 20. பேதை

**சொற்சிலம்பம் போட்டி இல. 77
பரிசு பெற்றவர்கள் விவரம்**

1 ஆம் பரிசு:
திருமதி லீலாவதி பீற்றர் இராஜநாயகம்,
205/1 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

2 ஆம் பரிசு:
திரு. ஐ. தி. சண்முகராசா,
மண்டு மண்டை
சங்கானை கிழக்கு,
சண்டிலிப்பாய்.

3 ஆம் பரிசு:
திருமதி ப. தேவி,
நாவலடி ஒழுங்கை
வண்-வட மேற்கு,
யாழ்ப்பாணம்.

★ குறிப்பு:-
பரிசு பெற்றவர்களின் பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வர வேண்டியதில்லை.

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்களை, 'சொற்சிலம்பம்' போட்டி இல. 79, சஞ்சீவி, தபால்பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தபால் உறையில் வைத்தோ, அல்லது அஞ்சல் அட்டையில் ஒட்டியோ அடுத்து வரும் 2-10-1987 முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

## மூதூர்ப்...

(8ஆம் பக்க தொடர்ச்சி)

சேகரிப்பை ஆரம்பிக்கிறோம்.

மணற்சேனைப் பகுதி இன்று இளைஞர் மன்றத் தலைவரும் மல்லிகைத்தீவு மகாவித்தியாலய அதிபருமான சைவப்புலவர் அ. பரசுராமன் எமக்குப் பல தகவல்களைத் தெரிவித்தார்.

1985 ஆம் ஆண்டு ஆனி மாதம் மூன்றும் திகதி மணற்சேனையில் வன்செயல் ஆரம்பமாகியது.

எமது ஊர்களை சுற்றி வளைத்தனர் இராணுவத்தினர்.

மக்கள் கூட்டம் கலைந்தோடியது. துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன, எங்கும் குண்டு மழை. ★

## கொன்றை...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

பொருட்களஞ்சியமாகும். பொற்சாசனம் முதுமக்சட்டாழி, சிறந்த சான்றுகளாய் உள்ளன. சியத்தில் காணப்படும் சிற்பமொன்று இங்கே எடுக்கப்பட்டு கி.பி 1906 இல் அங்கே அனுப்பப்பட்டது.

கொன்றைமர நிழலிலே கோயில்கொண்ட கோவிந்தனுடைய சினகரம்-சிங்கை நகரிலே அமைந்திருக்கிறதென்பதை வரலாற்று உலகமே ஒப்புக்கொண்டு விட்டது. ★

## இளம் பாடகர் "யப்னீஸ்" மகேஸ்வரன்



**ஒரு** பாடலை இயற்றி, அந்தப் பாடலுக்கு இசையமைத்து, தானே பாடுகின்றார் ஒரு பாடகர்.

யார் அந்தப் பாடகர்?

தென்னிந்தியப் பாடகர்களை இங்கு குறிப்பிடவில்லை.

அப்படியானால் அவர் யார்?

ஈழத்துப்பாடகர் கதிரவேலு மகேஸ்வரன் தான் அவர்.

''யாழ்ப்பாணத்து வாலிபர்கள்'' என்ற பாடலைப் பாடி, அதன் மூலம் இலங்கையிலும், தென் இந்தியாவிலும் பாராட்டைப் பெற்றவர் அவர்.

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட மகேஸ்வரனுக்கு சிறுவயது முதலே கலைத்துறையில் படித்து வந்ததால் சிங்களத்திலும் நல்ல தேர்ச்சி இருக்கிறது.

பாடசாலையில் படிக்கும் போதே இவருக்குப் பாட்டுப் பாடுவதில் ஆர்வம் உண்டாகி விட்டது.

பாடசாலை கலை நிகழ்ச்சிகளில் பாடிப் பல பரிசுகளைப் பெற்று இத்துறையில் மிகவும் ஆர்வம் உடையவராகக் காணப்பட்டார்.

தமது 14 ஆவது வயதில் சிங்களத்தில் பாட்டுப்பாடி ''அதி சிறந்த பாடசாலை மாணவருக்கான பரிசை''த் தட்டிக் கொண்டார்.

பிரபல சிங்களப் பாடகர்களான எம். எஸ். பெர்னாண்டோ, எச்.ஆர். ஜோதிபால போன்றவர்கள் பாடிய மேடைகளில் மகேஸ்வரனும் சிங்கள, தமிழ்ப் பாடல்களைப் பாடிப் பாராட்டைப் பெற்றுள்ளார்.

மகேஸ்வரனிடம் இருந்த ஆர்வம் 1975 ஆம் ஆண்டு வெளிப்பட்டது.

இவ்வாண்டில் முதன் முதலாக ''யாழ்ப்பாணத்து வாலிபர்கள்'' என்ற பாடலைத் தானே இயற்றிப் பாடினார்.

யாழ்ப்பாண வாலிபர்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் இப்பாடலை 1.8.75 அன்று சங்கானை கலாசார மண்டபத்தில் உதவி அரச அதிபர் திரு. சேர். அருணாசலம் தலைமையில் நடந்த கலைவிழாவில் பாடினார்.

இந் நிகழ்ச்சி இவருக்குப் பெரும் பாராட்டைப்பெற்றுக்கொடுத்ததோடு மட்டுமல்லாமல் இத்துறையில் பெரும் உற்சாகத்தையும் ஊட்டியது.

அன்று நடந்த அந்தக் கலை நிகழ்ச்சியை வாழ்க்கையில் மறக்கமுடியாத நிகழ்ச்சி என்று திரு. மகேஸ்வரன் பெருமையாகக் கூறிக்கொள்கிறார்.

தாம் முதல் முதலாக இயற்றிப் பாடிப் புகழ் சேர்த்துத் தந்த பாடலான ''யாழ்ப்பாணத்து வாலிபர்கள்'' பாடலைக் கடந்த வருடம் இந்தியாவின் பிரபல இசைக்குழுவாகிய ''சௌந்தராலாறி'' இசைக்குழுவின் பதிவு நிலையத்தில் பதிவு செய்துள்ளார்.

தமிழ் நாட்டில் பல கலை நிகழ்ச்சிகளிலும் இப்பாடலைப் பாடி புகழ் பெற்றதும் அல்லாமல் பிரபல சினிமா இதழான ''பொம்மை'' ஆசிரியர் குழுவினால் தமிழ்ப் படவுலகிற்கும் அறிமுகப் படுத்தப்பட்டார்.

கடந்த வருடம் தாயகம் திரும்பிய அவர் ''யப்னீஸ்'' என்ற பெயரில் இசைக் குழு ஒன்றை ஆரம்பித்து இசை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.

இன்னிசை நிகழ்ச்சிகளை நடத்துவதோடு நின்று விடாமல் பாடகர்களுக்கு பயிற்சி அளித்து, மேடைகளில் அவர்களை அறிமுகப்படுத்தியும் வருகிறார்.

தமது இசைக் குழுவில் அங்கம் வகிக்கும் இளம் பாடகர்களைச் சிறந்த பாடகர், பாடகி தரத்துக்கு தம்மால் கொண்டு வர முடியும் என்று திரு. மகேஸ்வரன் உறுதியாகக் கூறுகிறார்.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் இவரது இன்னிசைத் தென்றல் புத்தக வெளியீட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் நடைபெற இருக்கிறது. ★

- எம். பேரின்பநாயகம் -

## கலைவாணி..

(2 ஆம் பக்க தொடர்ச்சி)

யின் இறுதி மூன்று நாள்களிலும் - வழிபடுவது வழக்கம். கல்விக் கூடங்களிலும், தொழிற்சாலைகளிலும் இசைநடன மன்றங்களிலும் வாணிக்குப் பெருவிழா எடுக்கிறார்கள். ஏடுகளையும் கருவிகளையும் பூசையில் வைக்கிறார்கள். விஜயதசமி நாளில் வித்தியாரம்பம் முதலியன நடைபெறுகின்றன.

உண்மையான வாணி வழிபாடு இவற்றுடன் நின்று விடுவதில்லை.

ஆயின், எவ்வாறு பூசைசெய்ய வேண்டும்? அன்ன சத்திரங்கள் வைக்கலாமா? ஆலயங்கள் கட்டலாமா? அல்ல. தம்பெயர் விளங்கச் செய்யும் தருமங்களை விடப் பெரியதொரு புண்ணியம் உண்டு. அது எது?

''ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்!''
என்று அடித்துச் சொல்லும் பாரதி, கல்வியை
''ஓங்கு கல்வி உழைப்பு''
என்றும் சிறப்பித்துக் கூறுகிறான்.

கல்வியுழைப்பை மேலானதாகக் கருதி வந்த தமிழர்களிடையே, அண்மைக்காலங்களில் கல்வியை விட மேலை நாடுகளில் அகதிகளாக வாழ்வது பெரும் பேறு என்ற மனநிலை உருவாகி, நம் விழுமியங்கள் எல்லாம் தலைகீழாகி விட்ட நிலையில், கல்வியின் மகத்துவத்தை எல்லோரும் உணர வாணிவிழா வழிவகுக்குமாக! ★

## இன்று யாழ்ப்பாணக் குழந்தைகளைப்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சோடியம், பொட்டாசியம், குளோரைட்டுப் போன்ற உப்புகளும பெருமளவில் வெளியேறுகின்றது. வயிற்றோட்ட நோயினால ஏற்படும் சிசு மரணத்திற்கு முக்கியமான காரணம் இந்த நீரிழப்பாகும். இந்த நீரிழப்பை ஈடு செய்யும் பராமரிப்பு முறைகளைக் கையாளத் தொடங்கியதினால் கடந்த சில வருடங்களாக வயிற்றோட்டத்தினால் ஏற்படும் சிசு மரணம் கணிசமான அளவு குறைந்துள்ளது.

**நீரிழப்பை எவ்வாறு ஈடுசெய்வது?**

வயிற்றோட்டம் கண்ட பிள்ளைகளுக்கு 'ஜீவனி' எனப்படும் மீளநீரேற்றும் உப்பை நீரில் கரைத்து அடிக்கடி குடிக்கக் கொடுக்கவேண்டும். அத்தோடு உப்பு சீனி கலந்த எலுமிச்சம்பழச் சாற்றுத்தண்ணீர் சீனி கலந்த இளநீர், உப்பு கலந்த கஞ்சித்தண்ணீர், நெற்பொரித்தண்ணீர் என்பனவும் குழந்தைக்குக் குடிக்கக் கொடுக்கலாம். சில தாய்மார்கள் வயிற்றோட்டம் கண்ட பிள்ளைகளுக்கு திரவப் பதார்த்தங்கள் கொடுப்பதை நிறுத்தவோ அல்லது குறைக்கவோ முற்படுகின்றனர். இதுமிகத் தவறான கொள்கையாகும். இது குழந்தைக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துவதுடன் சிசுமரணத்தையும் ஏற்படுத்தலாம்

**ஜீவனி கரைக்கும் முறை**

ஜீவனி ஆனது குளுக்கோசு, சோடியம் குளோரைட், சோடியமிருகாபனேற்று, பொட்டாசியம் குளோரைட்டு ஆகிய பதார்த்தங்களைக் குறிப்பிட்ட அளவிலே கொண்ட கலவையாகும். ஜீவனி கரைக்கும்போது சுத்தமான பாத்திரமொன்றில் கொதித்தாறிய நீர் ஒரு லீற்றர் (2½ யானைமார்க் சோடா போத்தல்) எடுத்து [illegible] உப்புக்கலவையைக்கொட்டி சுத்தமான கரண்டியை உபயோகித்துக் கரைக்கவும். கரைசலை மூடி வைத்து அடிக்கடி சிறிதளவுஎடுத்து குழந்தைக்குக் கொடுக்கவும். இது பற்றிய மேலதிக விளக்கங்களை உங்கள் பகுதியிலுள்ள பொது சுகாதார மருத்துவ மாதினிடமோ அல்லது சுகாதார சேவைத் தொண்டர்களிடமோ அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் புதிய [illegible] தயாரித்து உபயோகிக்கவேண்டும். ஒரு முறை தயாரித்த கரைசல் 24 மணி நேரத்திற்கு மாத்திரமே பயன்படுத்த முடியும். மீந்திருக்கும் கரைசலை அடுத்தநாள் பாவிக்கக்கூடாது. உப்புப் பக்கெட்டுகளில் உள்ள உப்பில் ஒரு பகுதியை மட்டும் பாவித்து கரைசல் தயாரிக்க முயலக்கூடாது. இதனால் கரைசலில் உள்ள உப்பு உள்ளடக்கங்களின் அளவு வேறுபடுவதால் பலனளிக்காமல் போகலாம். இந்த 'ஜீவனி' பக்கெற்றுகளை உங்கள் பகுதி பொதுச்சுகாதார மருத்துவமாதினிடமும் எல்லா மருந்துக்கடைகளிலும் இலகுவாகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய ஆலோசனை**

வயிற்றோட்டம் கடுமையாகத் தொடர்ந்து காணப்பட்டாலும், குழந்தைக்கு கடுமையான வாந்தி இருப்பினும், நீரிழப்பின் அறிகுறிகள் தொடர்ந்தும் காணப்பட்டாலும், குழந்தை நினைவிழந்திருப்பினும், மலத்துடன் இரத்தம், சீதம் என்பன சேர்ந்துபோனாலும், சிறுநீர்தொடர்ந்து வெளியேறாமல் இருப்பினும்வாந்திபேதி போன்ற தொற்று நோய்கள் பரவி வருகின்ற காலங்களில் வயிற்றோட்டம் கண்டாலும் உடனடியாக வைத்திய ஆலோசனையை நாடுதல் வேண்டும், சாதாரணமான வயிற்றோட்டமாக இருந்தாலும் விரைவாக வைத்திய ஆலோசனையை நாடவேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வித்தியாரம்பம்**

விஜயதசமி அன்று வித்தியாரம்பம் செய்யவிருக்கும் கல்வி நிலையங்கள், சபைகள் அரிச்சுவடி ஏடுகளையும் சகலகலாவல்லிமாலை என்ற நூலையும் கொழும்பில் கற்பகம், 244, காலி வீதி, கொழும்பு 4இல் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

26 - 09 - 1987 சனிக்கிழமை

**ஓம் சக்தி**

தாயே சரஸ்வதி உனது பாதங்களை வணங்குகிறேன். எனக்கு வேண்டிய வரங்களைக் கொடுப்பவளே எனது பாடங்களைத் தொடங்குவதற்கு முன்னால் உனது ஆசிகளை பரிபூரணமாக வழங்குமாறு கால்களில் விழுந்து வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன்.

20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அழகிய சரஸ்வதி ஸ்ரிக்கரையும், சகலகலாவல்லிமாலை என்ற நூலையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் – யாழ்ப்பாணம்.

# கருவில் உள்ள ஒப்பந்தம் உருவம் பெற்று உய்யுமா?

எஞ்சிய விஷயங்கள் பற்றிய மூன்றும் சுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்து விட்டன.

பேச்சுக்களின் முடிவில் கூட்டணியின் இரண்டு தலைவர்கள் இந்தியத் தூதர் டிக்ஸிற்றைச் சந்தித்தனர்.

மூன்றும் பேச்சுக்களின் பெறுபேறுகளை தூதர் டிக்ஸிற் கூட்டணித் தலைவர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

மூன்றும் பேச்சுக்களின் முடிவில் தயாரிக்கப்பட்ட மாகாணசபைச் சட்ட நகல் பற்றிக் கூட்டணித் தலைவர்களுக்கு விவரிக்கப்பட்டது.

சட்டநகலின் சில அம்சங்கள் குறித்துக் கூட்டணித் தலைவர்கள் இந்தியத் தூதரிடம் சந்தேகம் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து திரு டிக்ஸிற் தமிழரின் கருத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் புதிய யோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருக்கின்றார்.

★ மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட விஷயங்கள் குறித்து சட்டவாக்கம் செய்யும் அதிகாரம்.

★ மாகாணசபைக்கும் மத்திய அரசுக்கும் வழங்கப்பட்டுள்ள பொதுவான விஷயங்கள் குறித்து நிறைவேற்று அதிகாரங்கள்,

★ மாகாண ஆளுநருக்குரிய அதிகாரங்கள்,

★ அவசரகாலச் சட்டத்தின் கீழ் மத்தியஅரசு பாவிக்க அதிகாரங்கள்,

★ காணிப்பங்கீடு, குடியமர்த்தல்

மேற்கண்டவையே தமிழர் தரப்பில் பிரச்சினைக்குரிய விஷயங்களாக உள்ளன.

இந்தியத் தூதர் டிக்ஸிற் ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்த திட்டம், இவ் விஷயங்களில் தமிழரின் அச்சங்களை நீக்கக் கூடியதாக அமைந்துள்ளதாம். இத்திட்டம் அமைச்சரவையின் பரிசி

போதாக்குறைக்கு ஒப்பந்தத்தைக் கண்டித்துத் தான் எழுதிய புத்தகம் ஒன்றை, எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்கா வெளியிட்டு இருக்கின்றார்.

அது மட்டுமல்ல, ஒப்பந்தத்தைக் கண்டித்து திரு. அநுரா பண்டாரநாயக்கா பேசிய பேச்சின் ஒலிப்பதிவு நாடா

ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தவர், பல்லாயிரக்கணக்கானோரின் சமாதியில் ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டதன் மூலம் தேசியத் தலைவராக முயற்சி செய்கின்றார்.

### தேடி அழித்தல்

தென் இலங்கையில் ஒப்பந்தத்திற்கு எதிராக

## அடுத்த வாரம் தென்னிலங்கையில் பலகண்டங்களைத் தாண்டவேண்டும்

லனைக்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி, வான் கூவருக்குப் புறப்படும் முன்னர்,

பிரதமர் ஐ. நா. வுக்குப் புறப்படும் முன்னர்,

மாகாணசபைச் சட்ட நகல் பற்றி அமைச்சரவை முடிவு செய்ய வேண்டும்.

இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் மாகாணசபைச் சட்டநகல் பற்றி இறுதி முடிவு எடுக்கப்படலாம்—

இப்படி கொழும்புச் செய்தி தெரிவிக்கின்றது.

### தென் இலங்கைப் பிரசாரம்

இந்த நிலையில், — தென் இலங்கை அரசியல் வானில் 'ஒப்பந்தக் காற்று' எப்படி வீசுகின்றது என்பதைப் பார்ப்போம்.

அம்மாவும் மகனும் ஊர் ஊராகக் கூட்டம் போட்டு ஒப்பந்தம் பற்றி விளக்கி வருகின்றார்கள்.

நேற்று வெளியிடப்படுவதாக இருந்தது.

"எனது கட்சி எம்பிக்கள் 9பேர் ஒப்பந்தத்தை எதிர்த்து வாக்களித்தது சிங்கள இனத்தைக் காப்பாற்ற முடியாது. யூ. என். பியில் உள்ள சிங்கள எம்பிக்கள் எதிர்த்து வாக்களிப்பதன் மூலம் தான் சிங்

## உள்ளும் புறமும்

### குறுமுனி

கள இனத்தைக் காப்பாற்ற முடியும்'' இப்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஊர் ஊராகச் சென்று பேசி வருகின்றார்.

1957 இல் குடும்பத் தலைவியாக இருந்து பண்டா–செல்வா ஒப்பந்தம் உருவாக உதவியவர்.

1987 இல் இனத்தின் தலைவியாக மாறி இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை கிழித்தெறிய வைப்பதில் முழுமூச்சாக ஈடுபட்டுவருகின்றார்

1957இல் இனத்தின் தலைவராக இருந்து ப–செ

வும், ஆதரவாகவும் மேடைப் பேச்சுக்கள், வானொலி, ரூபவாஹினிப் பேச்சுக்கள் என்று ஒரு புறம்—

துப்பாக்கிப் பேச்சுக்கள் மறுபுறம்— ஆக இடம் பெற்று வருகின்றன.

ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் நடந்த முதலாவது அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் உயர் மட்டத் தலைவர்களை ஒழிக்கப் போடப்பட்ட திட்டம் பலனளிக்கவில்லை.

இப்போது அடிமட்ட அரசியல்வாதிகளை அழிக்கும் வேலையில் அச்சக்திகள் ஈடுபட்டுள்ளன.

ஆளும் கட்சியின் உள்ளூர்ப் பிரமுகர்கள் கொலை செய்யப்படுகின்றார்கள்.

'தேடி அழிக்கும்' வேலையில் ஈடுபட்டுள்ள அச்சக்திகளைத் 'தேடி அழிக்கும்' பொறுப்பு பொலீஸ் கொமாண்டோக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசுப் பிரமுகர்களுக்கு வெளியிலே பாதுகாப்பு இல்லாத நிலையில்—

வியாழக்கிழமை நடந்த அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில பல எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தினுள் தங்களுக்குள்ள பாதுகாப்புக் குறைபாடுகள் பற்றி ஜனாதிபதியிடம் முறையிட்டனர்.

### நாடாளுமன்றப் பாதுகாப்பு

"நாடாளுமன்றக்கட்டடத்தினுள் சபாநாயகரும், எம். பி.க்களும் தான் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். நாடாளுமன்றக் கட்டடத்திற்குவெளியே பாதுகாப்பு வழங்குவதுதான் என் கடமை'' —இப்படி ஜனாதிபதி பதிலளித்தார்

அத்துடன் நிற்கவில்லை. "இனிமேல் அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்துக்கு நான் தலைமை வகிக்க மாட்டேன். எம்பிக்குரிய சில உரிமைகள் இருப்பினும் நான் எம்பி அல்லன்''— என்றும் ஜனாதிபதி கூறி விட்டார்.

இந்த நிலையில் அரச எம் பி. ஒருவர் எம்.பி பதவியை ராஜினாமாச் செய்து விட்டார். ரத்கம தொகுதி எம்.பி யான திரு. அசோக சோமரத்னவே அவர்.

மாகாணச் சபைச் சட்டமூலம் பற்றிமந்திரி சபையின் நிலை என்ன?

அரச நாடாளுமன்றக் குழுவின் நிலை என்ன?

இக் 'கண்டனங்களை' எல்லாம் தாண்டி உயர் நீதிமன்றம் வந்தால், அதன் கதி என்ன?

இக் கேள்விகளுக்கு விடை காண்பதில் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் அடுத்த வாரத்தில் இருந்து சுறுசுறுப்பாக இயங்கும்.

ஜே. ஆரும், ராஜீவும் கையொப்பமிட்டுக் கரு நிலையில் இருக்கும், ஒப்பந்தம், உருவம் பெற்று உய்யுமா? இந்தக் கேள்வியே இப்போது பெரிதாக எழுந்து நிற்கிறது.

## திருகோணமலை ஊரடங்கு

கொழும்பு, செப். 26

திருகோணமலை மாவட்டத்தில் இன்று இரவு 8 மணிக்கு அமுலுக்குக் கொண்டு வரப்படும் ஊரடங்குச் சட்டம் நாளைக் காலை 4 மணிக்கு நீக்கப்கடும். (உ-எ)

## ஏனைய - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூடைய ஒரு தேசிய இயக்கம் தோன்றுவதை இந்த சக்தி அன்றிலிருந்தே எதிர்த்து வருகிறது.

ஒரு தேசிய விடுதலை இயக்கமாக விடுதலைப் புலிகள் வளர்வது கண்டு அஞ்சிய இந்திய உளவுப் படை ஏனைய அமைப்புகளை ஆயுதக் குழுக்களாக வளர்த்துவிட்டு, இயக்க மோதல்களை உருவாக்கி எம்மை அழிக்க முயன்றது. ஆனால் மக்கள் பலம் எமக்கு பக்க பலமாக இருப்பதால் எம்மை அழிக்க முடியவில்லை. ஆனால் இயக்க மோதல்கள் நிகழ்ந்தன. உடன்பிறப்புக்கள் ஒருவரை ஒருவர் அழித்துக் கொண்டனர். தமிழினத்துக்கு ஏற்பட்ட இந்த சீழிவுக்கு, இந்த அளப்பரிய இழப்பிற்கு இந்திய உளவுப்படை மட்டும் காரணமல்ல, இந்த உளவுப்படையின் நயவஞ்சக சூழ்ச்சிக்குப் பலியாகிய ஏனைய அமைப்புத் தலைமைகளும் இதற்குக் காரணம். பதவி வெறி பிடித்த இந்தத் தலைமைகள் இந்தியாவின் பகடைக்காய்களாக, இந்திய உளவுப்படையின் ஐந்தாம் படையாக இயங்கினர்கள், இயங்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

"எனது அன்பான உடன் பிறப்புக்களோ! எமது இனம் எதிர்நோக்கும் இந்த இக்கட்டான கட்டத்தில் நான் உங்களுக்கு எனது அன்புக் கரத்தை நீட்டுகிறேன். தமிழீழ இலட்சியத்தைக் கைவிட்டு, தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு, அந்நிய அரச சக்தி ஒன்றிற்கு அடிமைப்பட்டுக்கிடக்கும் துரோகத் தலைமைகளைத் தூக்கி எறிந்து விட்டு புலிகளோடு வந்து சேருங்கள். புலிகளாக மாறுங்கள். புலிகளின் இலட்சியப் போராட்டத்தில் அணிதிரளுங்கள்.

நீங்கள் எந்த இலட்சியத்திற்காக இந்த அமைப்புவிடம் சேர்ந்தீர்களோ அந்த இலட்சியப் பாதையில் எமது விடுதலை இயக்கமே விறுநடை போடுகிறது. ஆகவே, தமிழீழ இலட்சியப் பற்றுடைய போராளிகள் யாவரையும் நாம் அரவணைத்துக்கொள்ளத் தயார். உங்களை எமது அணியில் சேர்த்து போராளிகளாக கௌரவிக்கத் தயார். எமது தோழர்களாக பராமரிக்கத் தயார் – இவ்வாறு திரு. பிரபாகரன் குறிப்பிட்டார். (உ.)

## அகதிகள் கப்பல்

குருநகர், செப் 26

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளை ஏற்றிவரும் முதல் கப்பல் அக்டோபர் மாதம் 2 ஆம் திகதி தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து இலங்கை நோக்கிப் புறப்படும்.

நேற்றுப் பகல் 1-30 மணிக்கு ஒலிபரப்பான வெற்றிமாலை நிகழ்ச்சியில் இத்தகவல் தெரிவிக்கப் பட்டது. (உ-51)

## மறியற் போர் இல்லை

யாழ்ப்பாணம், செப். 26

விடுதலைப் புலிகளின் ஐந்து அம்சக் கோரிக்கைக்கு ஆதரவாக அரச அலுவலகங்கள் முன்னால் நடைபெற்று வந்த மறியற் போர் இன்று முதல் நடைபெற மாட்டாது.

நேற்று யாழ் மனோகரா தியேட்டரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இவ்வாறு முடிவுசெய்யப் பட்டது.

இக் கூட்டத்தில் யாழ் குடாநாட்டின் அரச, தனியார் அலுவலகங்கள், வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கு பற்றினர். (உ)

## உண்ணாவிரதத்தை

(1ம்- பக்கத்தொடர்ச்சி)

திரு. திலீபனை உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு மீண்டும் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நான் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்கிறேன்.''

—மேற்படி செய்தியை இந்திய சமாதானப் படையைச் சேர்ந்த பிரிகேடியர் பெர்னாண்டஸ் விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசாவிடம் (மாத்தையா) கையளித்தார்

திரு மகேந்திரராசா கீழ்க்கண்ட செய்தியை இந்தியத் தூதருக்கு அனுப்பி வைத்தார்

"48 மணி நேரத்திற்குள் எமக்கு உறுதியான பதில் சொல்வதாக இந்தியத் தூதர் எமக்கு உறுதியளித்தார். திலீபனின் உடல்நிலை மிகவும் சவலைக்கிடமாக இருக்கிறது. மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் திலீபன் செத்துக்கொண்டிருக்கிறார். இடைக்கால நிர்வாக அரசு சம்பந்தமான எமது யோசனைகளுக்கு உடனடியாக உருப்படியான பதில் தருமாறு இந்தியத் தூதுவரைக் கேட்டுக்கொள்கிறோம்.''

— இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## முக்கிய அறிவித்தல்

இம்மாதம் 24ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 4ஆம் பக்கத்தில் விசேட அறிவித்தலாக வந்த விளம்பரத்தையொட்டி நியூ ஈரா பப்பிளிக்கேசன் லிமிட்டெட் (New Era Publications Ltd.) பிரதான அங்கத்தவராகிய திரு. மா. கனகராஜநாயகம்ஆகிய நான், மேற்படி பிரசுரிக்கப்பட்டவிளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்தவரும், நிரந்தர கணக்காளராகப் பதவி வகித்து வருபவருமான திரு. ஏ. கதிரவேலுஎன்பவர் 21 09-87இல் இருந்து வேலையிலிருந்து இடைநிறுத்தப்படவில்லை நிர்வாகசபை அன்று கூடவுமில்லை. இவர் வேலைநீக்கம் செய்யப்படவுமில்லை என்று இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்

1712

அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகி
New Era Publications Ltd.

## பிரயாண ஒழுங்குகள்

★ **சவூதி அரேபியா** ★


☆ பின்வரும் தொழில் வாய்ப்புகள் எம்மிடம் உண்டு.

★ (1) கோழிப் பண்ணைத் தொழிலாளர். ★

சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் 500 S.R
மேலதிக வேலைகளுக்கு (OVER TIME) சம்பளம் வழங்கப்படும்.

★ (2) **Workers maintenance Cleaners**
சம்பளம் 400 SR

★ **ஈராக்** செல்வதற்கு
(Medical & agreement) செய்து முடித்தவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.



**T. இந்திரநாதன்**

**M. THREE TRAVELS**

"சற்குணவாசா" 96, கச்சேரி நல்லூர் வீதி,
கல்லூரி வீதி - சோதிலேன், நல்லூர் - யாழ்ப்பாணம்.
காங்கேசன்துறை. (முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)
(BUS வழி இல. 769)

## Express Business Computor

(100% I B M Compatible)
(For Immediate Sale)

**COMPUTOR**

640 K B R A M
2 × 360 K B D/D
Color Graphics Card
Multi I/O Card
Serial/Parallel Joystick Port

KEYBOARD
100 Keys Extra Function
Keyboard

MONITOR
Qubie ™ : Hr 31-200–14"

Extras : Diskettes,
Books & Joystick

திங்கள் மாலை 4 மணிக்கு முன் தொடர்பு கொள்க.

வி. நடராசா,
காளிகோவிலடி,
டிப்போ ஒழுங்கை,
மல்லாகம்.

1532

## நீத்தார் பட்டியல்



### திரு. சி. சுப்பிரமணியம்

யாழ், கொழும்பு எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி ஸ்தாபகர் திரு. சி. சுப்பிரமணியம் 25-09-87 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற S. செல்லம்மாவின் அன்புக் கணவரும், S. பாலேந்திரா (கனடா), இந்திரா, சத்தியபாமா, மகேந்திரா (உரிமையாளர், எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி யாழ்ப்பாணம், கொழும்பு) ஆகியோரின் தந்தையும், இ. மகாதேவா, சி. நவரத்தினம், ம. வத்சலா, பா. விமலாதேவி, ஆகியோரின் மாமனும், சுப்ரப்பிரதீபன், பிரசாத், பிரதிக்கா, பிரசன்ன, மகாருஜி, விஜிதா, கிருஷ்ணதாஸ், துஷ்யந்தினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 26-09-87 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் 34, ஆடியபாதம் றோட், நல்லூர், யாழ்ப்பாணம், என்ற விலாசத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் தருபவர்: S. மகேந்திரா

(1535)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. திகதி: 26-09-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on September 26, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org